விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 05 செவ்வாய்க்கிழமை (22.09.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 277

# கலப்பு நீதிமன்றத்துக்கு பதிலாக

# நம்பகமான வேறு பொறிமுறை



## அறிமுகப்படுத்த அமெரிக்கா விருப்பம்

(ஜெனிவா) இலங்கை தொடர்பில் ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்பட்ட மனித உரிமை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கலப்பு நீதிமன்றத்துக்கு பதிலாக பிறிதொரு நம்பகத்தன்மையுடனான பொறுப்புக்கூறல் பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என அமெரிக்கா நேற்று தெரிவித்துள்ளது.
(24ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவர் துஷ்பிரயோகம் விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)
சிறுவர்கள் சித்திரவதைக்குட்படுத்தப்படுதல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற சுமார் 6,500 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 6,500 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக 24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்த ராஜபக்ஷவை தூக்கிலிட வேண்டும்

### மதுரை ஆதீனம் கருத்து



(மதுரை)
இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை போர்க்குற்றவாளி என அறிவித்து தூக்கில் போட வேண்டும் என மதுரை ஆதீன அருணகிரிநாத சுவாமிகள் ஆவேசமாக தெரிவித்தார்.

தமிழ் நாட்டின் ஈரோட்டில், தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க வந்த மதுரை ஆதீனம் நிருபர்களிடம் கூறுகையில், 24ஆம் பக்கம் பார்க்க....

## 2 வாரங்களில் வெட்டுப்புள்ளி

(கொழும்பு)
கடந்த வருடம் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழக நுழைவுக்காக காத்திருக்கும் மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளி எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் வெளியிடப்படும் என பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 24ஆம் பக்கம் பார்க்க....

## உள்ளக விசாரணையை நடத்த அனுமதி கோருகிறது இலங்கை!

### ஐ.நா.உறுப்பு நாடுகளுக்கு கடிதம் அனுப்பி வைப்பு




(கொழும்பு)
கலப்பு நீதிமன்ற விசாரணைக்குப்பதிலாக உள்நாட்டு விசாரணையை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அங்கத்துவ நாடுகளிடமும், அமெரிக்காவிடமும் இலங்கை அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இத்தகவலை நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளின் அரச தலைமைகளிடம் கையளிப்பதற்காக இந்த வேண்டுகோள் தொடர்பான கடிதங்கள் கொழும்பில் உள்ள அந்தந்த நாடுகளின் தூதரகங்களிலும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திடமும் கையளிக் 24ஆம் பக்கம் பார்க்க....

## கலப்பு நீதிமன்றம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம்!

### சபாநாயகரிடம் விமல் கோரிக்கை



(கொழும்பு)
இலங்கை தொடர்பான ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் அவசர விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச நேற்று முன்தினம் மனுவொன்றைக் கையளித்துள்ளார்.

இந்த மனுவில், இலங்கையில் கலப்பு நீதிமன்றம் என்ற பெயரில் சர்வதேச 24ஆம் பக்கம் பார்க்க....



இலங்கை அரசினால் தொடர்ச்சியாக தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் இன அழிப்புக்கு நீதி கேட்டு ஐ.நா. நோக்கிய மாபெரும் கவனயீர்ப்பு பேரணி நேற்று ஜெனிவாவில் ஆரம்பமான போது...

## ஐ.நா அறிக்கை குறித்து ஆராய சந்திரிகா தலைமையில் குழு!



(கொழும்பு)
இலங்கை தொடர்பிலான ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை குறித்து ஆராய்வதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குழுவொன்றை நியமித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் நிமால் சிறிபால டி சில்வா, மகிந்த சமரசிங்க, ஜோன் செனவிரத்ன, ஜோன் பெரேரா மற்றும் துமிந்த திசநாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 24ஆம் பக்கம் பார்க்க....

## ஜேர்மன் அமைச்சர் இன்று வருகிறார்

(கொழும்பு)
ஜேர்மன் நாட்டின் வெளிவிவகார அமைச்சர் டாக்டர் பிராங் - வோல்டர் ஸ்டேன்மியேர் (Dr. Frank Walter Steinmeier) உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு இன்று செவ்வாய்க்கிழமை இலங்கை வரவுள்ளார் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இன்று வருகை தரவுள்ள ஜேர்மன் 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இறைச்சிக்கடை உரிமையாளர்கள் கடையடைப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர எல்லைக்குட்பட்ட இறைச்சிக்கடை உரிமையாளர்கள் கடையடைப்பு போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

நேற்றுக் காலை முதல் ஆரம்பமான இப் போராட்டம் தகுந்த தீர்வு கிடைக்கும் வரை முன்னெடுக்கப்படவுள்ளதாக இறைச்சிக் கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இக்கடையடைப்பு மேற்கொள்ள காரணம் வீணான பொலிஸ் தலையீடு மற்றும் யாழ். மாநகர சபையுமே என ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் சுட்டிக்காட்டுகின்றனர்.

தற்போது மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 22 மாட்டு இறைச்சி கடைகள்,09 ஆட்டு இறைச்சி கடைகள் இயங்குகின்றன.

இவை தற்சமயம் பூட்டப்பட்டுள்ளதால் பெரும் நட்டங்களை எதிர்கொள்வதாகவும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

.நாவாந்துறை,பண்ணை,பாசையூர்,குருநகர்,புங்கன்குளம்,அரியாலை, கல்வியன்காடு.



ஐந்து சந்தி பகுதியில் உள்ள இறைச்சி கடைகளே இவ்வாறு பூட்டப்பட்டு காணப்படுகிறன. (செ-4)


# நெல்லியடி கிளினிக்

மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி.

- தினசரி MBBS வைத்திய சேவை

பி.ப 4.30 மணி முதல் இரவு 9 மணி வரை

- விசேட வைத்திய நிபுணர் சேவை
- ஸ்கான், ECG வசதிகள்
- ஆய்வுகூட வசதிகள்



23.09.2015 புதன்கிழமை முதல் தினமும் காலை 6.30 மணி முதல் 7.45 மணி வரை நோயாளிகள் பார்வையிடப்படுவார்கள்.

021 226 2428 - நிர்வாகம்



**Centre for Open and Distance Learning (CODL), University of Jaffna, Sri Lanka.**

**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

**வணிகமாணி பட்டப்படிப்பு 2013/2014 (வெளிவாரி) (புதிய பாடத்திட்டம்)**

**Bachelor of Commerce Degree Programme – 2013/2014 (External) (New Syllabus)**

**(Semester Based Course Unit system and Grade Point Average Evaluation)**


**புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2013**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் அமைந்த நான்கு வருட கால வணிகமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான தெரிவுப் பரீட்சைக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 26.09.2015 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை www.jfn.ac.lk/codl எனும் இணைய முகவரியிலும், 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடனும் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

- பதிவாளர் (வி-2267) 16.09.2015


# நன்றி நவிலல்



வாழ்நாள் பேராசிரியர்

## அமரர் கந்தையா குணரத்தினம்

B.Sc (Hons) cey, Ph.D (London), FRAS (London) Hon D.Sc (Jaffna)

முன்னாள் 3-வது உபவேந்தர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் (1994.04.01 – 1996.06.30)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் குடும்பத்தின் வழிகாட்டியாகத் திகழ்ந்து 09.09.2015 அன்று எம்மை விட்டுப் பிரிந்து இறையடி எய்திய வாழ்நாள் பேராசிரியர் அமரர் கந்தையா குணரத்தினம் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து எங்கள் இல்லத்துக்கு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி, ஈமெயில் ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறி எமது துக்கத்தில் பங்குகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும், மலர்வளையம் சார்த்தியவர்களுக்கும், இறுதி யாத்திரையில் பங்கு கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமூகத்தினர் அனைவருக்கும், இறுதி யாத்திரையில் கலந்து கொண்ட தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பாடசாலை ஒழுங்கை,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

(1856)

*தகவல் :*
**கந்தையா கணேஷ்ராசா**
தொ.பே : 0777 353 740




## சர்வதேச விசாரணை; சட்டசபை தீர்மானத்தால் எந்தப் பயனும் இல்லையாம்

சுப்பிரமணியம் சுவாமி பேட்டி



இலங்கையில் சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால் எந்த பயனும் இல்லை. ஏனெனில் வெளிநாட்டு கொள்கையில் தமிழக அரசு தலையிட அதிகாரம் இல்லை என பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார்.

நான் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேசினேன். அப்போது இலங்கையில் சர்வதேச விசாரணை எதுவும் தேவையில்லை என அங்குள்ள தமிழ் கட்சிகளும், தமிழ் அமைப்புகளும் கூறியுள்ளன.

மேலும் உள்நாட்டு விசாரணை குழுவில் வெளி நாட்டினர் இடம்பெறலாம் என்றும் ரணில் ஆலோசனை தெரிவித்தார். (இ-7)

# இறுதிப்போரில் 7,000பேரே பலி

## ஐ.நாவின் அறிக்கை மிகைப்படுத்தியதாக ஜனாதிபதி ஆணைக்குழு தலைவர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டது போன்று, இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்படவில்லை என்றும், 7 ஆயிரத்திற்கும் அதிகமானோரே கொல்லப்பட்டிருக்கலாம் என்றும், காணாமற் போனோர் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.**

இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தியாளரிடம் இதுகுறித்து கருத்து வெளியிட்ட அவர், '2011இல், ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன் நியமித்த மர்சுகி தருஸ்மன் தலைமையிலான நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டது போன்று, இறுதிக் கட்டப் போரில் 40 ஆயிரம் பேர் கொல்லப்படவில்லை.

பெரும்பாலும், 7ஆயிரத்திற்கும் அதிகமானோர் தான கொல்லப்பட்டிருக்கலாம்.

போர்க்காலத்தில் நிகழ்ந்த மரணங்கள் தொடர்பாக எமது ஆணைக்குழு இது வரை துல்லியமான எண்ணிக்கையைக் கண்டறியவில்லை.

எனினும், ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது போன்று நிச்சயமாக 40 ஆயிரம் பேர் கொல்லப்படவில்லை. அந்த அறிக்கையில் கூட, உயிரிழந்தோரின் எண்ணிக்கை தொடர்பாக உறுதியாக கூறப்படவில்லை. 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று தான் கூறப்பட்டுள்ளது.

மோதல் பிரதேசத்தில் புள்ளிவிபரவியல் திணைக்களம் வீடு வீடாக நடத்திய கணக்கெடுப்பு மற்றும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்பப்பட்ட அறிக்கைகளில், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 7ஆயிரத்து 700 ஐ நெருங்கியதாக இருக்கலாம்.

எனினும், எமது ஆணைக்குழு இது பற்றிய துல்லியமான எண்ணிக்கை பற்றிய முடிவு எதற்கும் வரவில்லை. ஆனால் 40 ஆயிரம் என்பது மிகையான கணிப்பு' என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பெண்கள், சிறுவர்களுக்கெதிரான வன்கொடுமைகளைத் தடுக்க விசேட பொலிஸ்பிரிவு தேவை

அஸ்கிரிய, மல்வத்து பீடாதிபதிகள் கோரிக்கை

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்க விசேட பொலிஸ் பிரிவு ஒன்று தேவை என கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

தற்போது பெண்கள், சிறுவர்கள் மீதான வன்கொடுமைகள், கொலைகள், குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன.

எனவே இந்தக் குற்றச் செயல்களை தடுக்க விசேட பொலிஸ் பிரிவு ஒன்று தனியாக ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

கடுமையாக அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்படும் பொலிஸ் திணைக்களத்தை அரசியல்மயப்படுத்தல்களிலிருந்து மீட்க வேண்டும்.

சில அரசியல்வாதிகள் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு அழுத்தங்களை பிரயோகித்த காலங்களும் உண்டு.

தற்போதைய அரசாங்க ஆட்சிக் காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படக் கூடிய சாத்தியமில்லை என்றே கருதுகின்றோம் என தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம் மற்றும் சிறைச்சாலை புனரமைப்பு அமைச்சர் திலக் மாரப்பன, மல்வத்து மற்றும அஸ்கிரிய பீடாதிபதிகளை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட போதே இந்தக் கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. (இ-7)

## யாழ்.சிறைக் கைதிகளுக்கு பயிற்சி

யாழ். சிறைச்சாலையில் உள்ள சிறைக் கைதிகளுக்கு பனம் கைப்பணிப் பயிற்சி நேற்றைய தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சோ. கோகுலதாசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பனை அபிவிருத்திச் சபையால் பனம் கைப்பணி உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் நோக்குடன் பல்வேறுபட்ட பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் குறிப்பிட்ட சில காலம் சிறைத் தண்டனை அனுபவிக்கும் ஆண், பெண் சிறைக் கைதிகளுக்கு அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிறையில் உள்ள 20 கைதிகளுக்கு இப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களுக்குரிய சந்தை வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சிகிச்சை பலனின்றி முதியவர் மரணம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கிய முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

புலோலி காந்தியூரினைச் சேர்ந்த பொன்னையா- கிருஸ்ணப்பிள்ளை (வயது- 75) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

மேற்படி விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் பருத்தித்துறை மடத்தடியில் இடம்பெற்றது.

வீதியால் நடந்து சென்ற குறித்த முதியவரை மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் மோதி விட்டு தப்பிச் சென்றனர்.

படுகாயங்களுக்குட்பட்ட முதியவர் பொதுமக்கள் உதவியுடன் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலே சிகிச்சை பயனளிக்காது அன்றைய தினம் இரவு உயிரிழந்தார் என தெரிய வந்தது. (இ-5-60)

## அடையாள உண்ணாவிரதப் போராட்டம் இன்று

(கரணவாய்)

யாழ்ப்பாணம் மயிலிட்டி வாழ் மக்கள் தமது மீள் குடியேற்றத்தை வலியுறுத்தி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் வளாகத்தில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றினை நடத்தவுள்ளனர்.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு வட மாகாண சபை உறுப்பினர்கள், அரசியல் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் ஒத்துழைப்பையும் ஆதரவினையும் வழங்குமாறு மயிலிட் டித் துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது.

யுத்தம் முடிவுற்று 26 வருடங்களாகியும் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமராத மேற்படி மயிலிட்டி வாழ்மக்கள் தமது மீள்குடியேற்றம் தொடர்பாக உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்த மேற்படி போராட்டத்தினை இன்று முன்னெடுக்கவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5-60)

## வரிச்சலுகைகளை உடன் இரத்துச் செய்யவும் சர்வதேச நாணய நிதியம் அரசுக்கு அழுத்தம்

பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுவரும் வரிச் சலுகைகளை உடனடியாக இரத்துச் செய்யுமாறு சர்வதேச நாணய நிதியம் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்துள்ளது.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் சர்வதேச நாணயத்தின் பிரதிநிதிகள் அண்மையில் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். அதன் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் தலைமையகம் இலங்கை தொடர்பாக அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. இலங்கையில் தற்போது காணப்படும் வரிச் சலுகை மற்றும் வரி தாமதங்கள் காரணமாக வெளிநாட்டு சொத்துக்களின் மதிப்பு குறைந்து வருகின்றது.

தவிரவும் அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு காரணமாக எரிபொருள் விலை குறைப்பின் பலனை இலங்கையால் முழுமையாக அனுபவிக்க முடியவில்லை.

தற்போதையநிலையில் பணவீக்கம் பூச்சியமாக இருந்தாலும் வருடக் கடைசியில் மூன்று வீதம் வரை அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளிலிருந்து விடுபட வேண்டுமாயின் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் வரிச்சலுகைகளை உடனடியாக இரத்துச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சென்னையிலிருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்திய நபர் கைதானார்

சென்னையிலிருந்து இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் கஞ்சா போதைப் பொருளை கடத்திவந்த நபரை கட்டுநாயக்க விமானநிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரிடமிருந்து 16 கிலோ 400 கிராம் கஞ்சாவை சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவத்தில் கொழும்பைச் சேர்ந்த 44 வயதுடைய நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கும் நடவடிக்கை இவ்வாரம் ஆரம்பிக்கப்படும்

19 ஆவது திருத்தச் சட்டத்தின்படி சுயாதீன ஆணைக் குழுக்கள் அமைக்கும் செயற்பாடுகள் இவ்வாரம் முன்னெடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 10 சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அரசியலமைப்பு பேரவைக்கு முன்மொழியப்பட்டுள்ள சிவில் பிரதிநிதிகள் மூவரின் பெயர்கள் இன்று கூடவுள்ள பாராளுமன்றில் முன்வைக்கப்படவுள்ளது.

கலாநிதி ஏ.ரி.ஆரியரத்ன, கலாநிதி ராதிகா குமாரசுவாமி மற்றும் முன்னாள் நீதிபதி சிப்லி அஷிஸ் ஆகியோர் சிவில் பிரதிநிதிகளாக முன்மொழியப்பட்டுள்ளனர்.

இவர்களது பெயர்களுக்கு பாராளுமன்றில் இன்று அனுமதி கிடைத்தபின் 10 பேர் அடங்கிய அரசியலமைப்பு பேரவை இன்று கூடவுள்ளதாக பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

அதன்பின்னர் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்படும் என அவர் தெரிவித்தார். (இ-7)

# மெஸ்சி, நெய்மர் அதிரடி பார்சிலோனா அணி வெற்றி




ஸ்பெயின் கால்பந்து கிளப் அணிகளுக்கு இடையே நடைபெறும் தொடர்களில் முக்கியமானது லா லிகா தொடர். பல்வேறு லீக் போட்டி களாக நடைபெறும் இந்த தொடரின் நேற்று முன்தினம் நடந்த லீக் போட்டியில் முன் னணி கிளப் அணியான பார்சிலோனா அணி லெவ ன்டே அணியை எதிர்கொண்டது.

இதில் மெஸ்சி, நெய்மர் ஆகியோரின் ஆட்டத்தால் பார்சிலோனா 4-1 என வெற்றி பெற்றது.

முதல்பாதி நேரத்தில் இரு அணி வீரர்களும் கோல் அடிக்க வில்லை. ஆனால், 2-வது பாதி நேரத்தில் பார்சிலோனா வீரர்கள் அபாரமாக விளையாடினார்கள். ஆட்டத்தின் 50-வது நிமிடத்தில் மெஸ்சியின் உதவியால் பார்த்ரா முதல் கோலை அடித்தார். அடுத்த 6-வது நிமிட த்தில் நெய்மர் ஒரு கோல் அடித்தார். இதனால் பார்சிலோனா 2-0 என முன்னிலை பெற்றது.

61-வது நிமிடத்தில் பார்சிலோனாவுக்கு பெனால்டி வாய்ப்பு கிடை த்தது. இதை மெஸ்சி கோலாக மாற்றினார். இதற்கு 66-வது நிமிட த்தில் லெவன்டே பதில் கோல் அடித்தது. அந்த அணியின் கசடேசஸ் கோல் அடித்தார். பின்னர் ஆட்டம் முடியும் நிலையில் 90-வது நிமிட த்தில் மெஸ்சி மேலும் ஒரு கோல் அடித்தார். இதனால் பார்சிலோனா 4-1 என வெற்றி பெற்றது.

4 போட்டிகள் முடிவில் பார்சிலோனா 12 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது. ரியல் மாட்ரிட் 10 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் உள்ளது. (க)

## லண்டனில் அனுஷ்காவுக்கு அதிர்ச்சி கொடுத்த ஹோலி



இந்திய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் ஹோலி, தனது காதலி மற்றும் பாலிவுட் நடிகையான அனுஷ்கா சர்மாவை ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளார்.

தற்போது அனுஷ்கா சர்மா 'ஏ டில் ஹன் முஸ்கில்' படத்தின் படப் பிடிபபுக்காக லண்டனில் இருக்கிறார். இவரை ஹோலி நேற்று முன் தினம் பார்க்க வருவதாக கூறியிருந்தார்.

ஆனால் அவர் தனது காதலி அனுஷ்காவை ஆச்சரியப்படுத்தும் விதமாக இரண்டு நாட்கள் முன்பாகவே லண்டன் சென்றுவிட்டார்.

மேலும், அனுஷ்கா படப்பிடிப்புககாக ஹோட்டலில் இருந்து வெளியே வந்த பொழுது ரசிகர்களுடன் ஹோட்டலுக்கு வெளியே காத்திருந்தார்.

இதை சற்றும் எதிர்பார்க்காத அனுஷ்கா ஆச்சரியத்தில் உறைந்து போனார்.

மேலும், ஹோலி ரசிகர்களைப் போலவே அனுஷ்காவுடன் செல்ஃபி எடுத்து அவரை மேலும் ஆச்சரியப்படுத்தினார்.

பல நட்சத்திரங்களின் காதல் பாதியில் முறிந்து போனாலும் இவர் களின் காதல் ஒரு படி மேல் உள்ளதையே இது காட்டுகிறது. (க)

## ஜேர்மன் கால்பந்து வீரரை மணக்கும் செர்பிய அழகுப்புயல் இவானோவிச்



செர்பியா டென்னிஸ் வீராங்கனை இவா னோவிச் வரும் டிசம்பரில் ஜேர்மன் கால்பந்து வீரர் ஸ்கீவன்ஸ்டீகரை மணப்பார் என்று தெரிகிறது.

இவானோவிச், ஸ்பெயின் டென்னிஸ் வீரர் பெர்னாண்டோ வெர்டாஸ்கோ, அவுஸ் திரேலிய கோல்ஃப் வீரர் ஆடம் ஸ்காட்டுக் குப் பின், கடந்த 2014-ல் இருந்து ஜேர்மனி கால்பந்து வீரர் ஸ்கீவன்ஸ்டீகரை காதலித்து வருகிறார்.


கடந்த யூலை மாதம் இருவருக்கும் நிச் சயதார்த்தம் நடந்ததாக செய்திகள் வெளியா னது. லண்டன் விம்பிள்டன் தொடரின் போது இவானோவிச் கைவிரலில் மோதிரம் காண ப்பட்டது.

இதற்கேற்ப சமீபத்திய யு.எஸ்.ஓபன் தொடரின் போது ஸ்கீவன்ஸ்டீகரும் இவா னோவிச் பங்கேற்ற போட்டிகளை நேரில் பார்த்து ஆதரவு கொடுத்து வந்தார்.

இந்நிலையில் இருவரும் வரும் டிசம்பர் மாதம் திருமணம் செய்து கொள்ளவிருப்ப தாக கூறப்படுகிறது.

திருமணத்தை விருந்து நிகழ்ச்சிகளு டன் மிகச்சிறப்பான முறையில் நடத்த திட்ட மிட்டுள்ள ஸ்கீவன்ஸ்டீகர், இதற்கான வேலைகளில் தீவிரமாக இறங்கியுள்ளா ராம். (க)

## ஜக்மோகன் டால்மியாவின் மறைவுக்கு கிரிக்கெட் பிரபலங்கள் இரங்கல்



இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவர் ஜக்மோகன் டால்மியாவின் மறைவுக்கு சச் சின், டோனி உள்ளிட்ட பல கிரிக்கெட் வீரர் கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்திய கிரிக்கெட் சபையின் தலைவராக கொல்கத்தாவைச் சேர்ந்த ஜக்மோகன் டால்மியா இருந்து வந்தார்.

இந்நிலையில் கடந்த 17-ம் திகதி அவர் நெஞ்சுவலி காரணமாக கொல்கத்தாவில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். தீவிர ரத்தப்போக்கு மற்றும் உள் உறுப்புகள் செயலிழந்ததால் அவர் உயிரிழந்ததாக தெரி விக்கப்பட்டுள்ளது.

அவரது மரணத்துக்கு இந்திய பிரதமர் மோடி, மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி, முன்னாள் துடுப்பாட்ட வீரர் சச்சின், இந்திய கிரிக்கெட் அணித்தலைவர். தோனி, ஹோலி உட்பட பலரும் டுவிட்டர் மூலம் இரங்கல் தெரி வித்துள்ளனர்.

**தோனி :** இந்திய கிரிக்கெட்டின் வளர்ச்சிக காக டால்மியா ஆற்றிய பங்களிப்புக்கு மதிப் பளிக்கிறேன். அவரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டிக் கொள்கிறேன்.

**அனில் கும்ளே :** டால்மியாவின் மறைவு வேதனை அளிக்கிறது. இவரது மறைவால் கிரிக்கெட்டுக்கு பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. இந் திய மற்றும் உலக கிரிக்கெட்டின் வளர்ச்சிக்கு இவரது பங்களிப்பு மகத்தானது. அவரது குடு ம்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்.'

**இஷாந்த் சர்மா :** டால்மியா பி.சி.சி.ஐ-க்கு அளித்த பங்களிப்பு என்றும் அழியாமல் நிலைத்து நிற்கும். அவரின் குடும்பத் தின ருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

**விராட் ஹோலி :** டால்மியாவின் மறைவு செய்தி மிகவும் வருத்தம் அளிக்கிறது. அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கி றேன்.

**சச்சின் டெண்டுல்கர் :** எனது கடைசி டெஸ்ட் போட்டிக்கு முந்திய போட்டியை மற க்க முடியாத போட்டியாக மாற்றியவர் டால் மியா ஜக்மோகன். அவரது குடும்பத் தின ருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித் துக் கொள்கிறேன். (க)

# பெண்கள் வீட்டுப் பணிப் பெண்களாக செல்வதை நிறுத்துவதற்கு தீர்மானம்

## அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு வீட்டுப் பணிப்பெண்களாக செல்வதை அடுத்த ஐந்து வருடங்களில் தடுத்து நிறுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் அப்பாவிப் பெண்கள் படும் பாடு, வேதனை அனைத்தையும் அவதானித்த பின்னரே இவ்வாறான தொரு முடிவு எடுக்க தீர்மானித்துள்ளோம். இவ்வாறான வேதனைகளை வழங்காது அனைவருக்கும் நன்மை வழங்கும் விதத்திலும் நாட்டின் கௌரவத்தினை பாதுகாக்கும் வகையிலும் அடுத்த ஐந்து வருடங்களில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் பெண்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

நிவித்திகல பிரதேசத்தில் ஐக்கிய தேசிய கட்சியின் மாணவர் முன்னணியினர் ஏற்பாடு செய்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அத்துடன் ஆடைத் தொழிற்சாலைகளில் வேலை செய்வோரது எண்ணிக்கை தற்போது குறைவடைந்து வருகிறது.

அவ்வகையில் 1994 ஆம் ஆண்டு ஆடைத்தொழிற்சாலையில் ஒரு மில்லியன் பேர் வேலை செய்து வந்தனர். ஆனால் தற்போது அவ்வெண்ணிக்கை 3 இலட்சமாக குறைவடைந்துள்ளது. அத்துடன் இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த அவர், பிரதமரின் குறிக்கோள் பற்றியும் எடுத்துரைத்தார். அதாவது, ஒவ்வொரு குடும்பமும் குறைந்தது 40 ஆயிரம் ரூபா மாதவருமானமாக பெற்றுக் கொள்வதற்கு ஏற்ற வகையில் புதிய வேலைத்திட்டமொன்றும் நடைமுறைப் படுத்தப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


**அமெரிக்க Green Card Lottery -2017**

அமெரிக்க **Green card Lottery** விண்ணப்பத்தில் 13 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2017 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/- முத்திரையொட்டப்பட்டு சுய முகவரியிட்ட தபாலுறையை **Bristol Cyber cafe. No. 8/3/4, Bristol Street, Colombo -01** எனும் முகவரிக்கு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

**Tel : 0112393919, 0774276579**

(C-2243)

W/A 44843 **www.bristolcc.biz**

**யாரிடம் பேசுவது?**

யார் என்னை புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது
நான் என்ன செய்வது?
**எம்முடன் பேசுங்கள்**
**கை கொடுக்கும் நண்பர்கள்**
**104, 4, ஆம் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்**
☆ மதசார்பற்றது ☆ ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776

(804)

# பதவி வெற்றிடம்

**பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளது**

- ★ **அலுவலகச் செய்தியாளர்கள்** (இருபாலாரும்- உள்ளகம், வெளியகம்)
- ★ **கணனி இயக்குநர்கள் மற்றும் பக்கவடிவமைப்பாளர்கள்** (பெண்கள்)
- ★ **ஒப்புநோக்குநர்** (பெண்கள்)
- ★ **பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர்** (இருபாலாரும்- மும்மொழி அறிவு)

**வயது எல்லை 21-45. தகைமையும் அனுபவமுள்ள பொருத்தமானவர்கள் 24.09.2015 வியாழக்கிழமை அன்று முற்பகல் 10 மணிக்கு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.**

(அண்மையில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**பொது முகாமையாளர்.**
**இல.3,2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண்வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா:16<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/4967 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 36 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: G/820 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 18 1/4<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/சாரதி<br>தொ.இ: B/4968 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 56 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/2148 |
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 39செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: கனடாகுடியுரிமை<br>தொ.இ: B/4969 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 58<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/2150 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 60 சூரிசெவ் 7 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:A/L/சொந்ததொழில்<br>தொ.இ: B/4970 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 15<br>உயரம்: 163cm<br>தகைமை/தொழில்:CIMA/விரிவுரையாளர்<br>தொ.இ: G/2160 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
**தொடர்பு:- 021 720 1005**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# இராசி பலன்

**மீனம்:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும், போசன சுகமுண்டு.

**மேடம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் ரீதியாக இருந்த மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள், புதிய திட்டங்கள் கைகூடும்.

**இடபம்:** அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது,கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பயணத்தின் போது பொருட்களில் கவனம் தேவை.

**மிதுனம்:** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நட்பு வட்டம் விரிவடையும், தொழில் நலன்கருதி அனுபவம் மிக்க வர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**கும்பம்:** உன்னதமான வாழ்வுக்கு வழியமைத்துக் கொள்வீர்கள். பொது வழியில் பாராட்டும், புகழும் கூடும், திக்கும் செய்திகள் வந்து சேரலாம், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும்.

| கேது | | | |
|---|---|---|---|
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>மிருகசீரிடம்<br>கீழ் நோக்குநாள் | | சுக் |
| | | | குரு<br>செவ்,புத |
| சந் | சனி | | ராகு<br>சூரி |

22.09.2015
(புரட்டாதி 05, செவ்வாய்க்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
நவமி முன்னிரவு 8.50 மணிவரை
பூராடம் பின்னிரவு 3.44 மணிவரை
இராகுகாலம் 3.02-4.32 மணிவரை
சுபநேரம் 10.32-12.02 மணிவரை

வளவன்

**கடகம்:** உடல் நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், தொலைபேசிச் செய்திகள் மகிழ்ச்சி தரும், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், பக்குவமாக பேசி காரியம் சாதிப்பீர்கள், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், சயனசுகக் குறைவான நாள்.

**சிம்மம்:** சிந்தனை ஆற்றலால் சிறப் படைவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், வியாபார விருத்தியுண்டு.

**தனுசு:** ஆரோக்கியத்தில் கவனம் எடுக்க வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், தன வரவு திருப்திகரமாக அமையும், தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பெரிய மனிதர்களின் ஒத்தாசைகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**துலாம்:** சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உங்களின் கருத்துக்களுக்கு பாராட்டுக்கள் கிடைக்கும்.

# வடமாகாணத்திற்கென தனியான போதைப்பொருள் தடுப்புப் பிரிவு

வடக்கு மாகாணத்திற்கென போதைப்பொருள் விசேட தடுப்பு பிரிவொன்றினை ஏற்படுத்தக் கோரி வடக்கு மாகாணசபை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு கடிதம் அனுப்பவுள்ளது.

இதனை வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வில் பிரேரணையாக வடக்குமாகாணசபையின்யாழ். மாவட்ட உறுப்பினர் எஸ்.சுகிர்தன் பிரேரணையாககொண்டுவரவுள்ளார்.

வடக்குமாகாணத்தில்தற்போதுஇளைஞர்களிடையே போதைப்பொருள் பாவனை அதிகரித்து காணப்படுகின்றது. போதைப்பெருள் கடத்தல்மற்றும் விற்பனைகளும் வடக்கில் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. குற்றவாளிகளும்தப்பித்தவண்ணமேயுள்ளனர்.

போதைப்பொருள் அதிகரிப்பின் காரணமாக வடக்கின் கலாசாரங்களும் பிரிவுக்குட்படுத்தப்படுகின்றன.


ஆகையினால் வடக்கு மாகாணத்திற்கென போதைப்பொருள் தடுப்பு விசேட பொலிஸ் பிரிவினை ஏற்படுத்த வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வலியுறுத்தியே மேற்படி தீர்மானம் இன்றைய தின.ம் கொண்டுவரப்படவுள்ளது. (இ-4)



பெண்களின் சமூக நிலையை வலுவூட்டும் திட்டத்தின் ஒரு பகுதியாக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நல்லின ஆடுகள் வழங்கி வைக்கும் செயற்பாடு அண்மையில் ஊர்காவற்றுறை பகுதியில் இடம் பெற்றது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தனது 2015 ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கு ஆடுகளை வழங்கி வைத்தார். நிகழ்வில் மாகாண சபை உறுப்பினருடன் ஊர்காவற்றுறை பிரதேச கால்நடைவைத்திய அதிகாரி ச.நர்மஜன் மற்றும் உத்தியோகத்தர்கள் ,பயனாளிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# உண்மைகள் கண்டறியப்பட்டு நியாயம் கிடைக்க வேண்டும்

## டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தின் இலங்கை தொடர்பான அறிக்கையை தமிழ் மக்களின் இழப்புக்கள் மற்றும் பாதிப்புகளுக்குப் பரிகாரம் காணவும் உண்மைகள் கண்டறியப்படவும் உரிய நியாயம் கிடைககவும் மற்றும் அரசியல் தீர்வுக்கான வாய்ப்பாகவும் தமிழ்த் தலைமைகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கடந்த காலத்தில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள இவ்வாறு கிடைக்கப்பெற்ற பல நல்ல வாய்ப்புக்களை தமிழ்த் தலைமைகள் தவறவிட்டுள்ளனர் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் எம்.பி. டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணைகள் சர்வதேசப் பங்களிப்புடன் ஒரு உள்ளகப் பொறிமுறையூடாக முன்னெடுக்கப்பட வேண்டுமென ஐ.நா. அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களாகிய நாம் சர்வதேச விசாரணையா? அல்லது உள்ளக விசாரணையா? என்ற தேவையற்ற தர்க்கத்தில் ஈடுபட்டுக் காலத்தை வீணடித்து விடக்கூடாது. ஏனென்றால் முன்னர் அரசியல் வழிமுறைப் போராட்டங்கள், ஆயுத வழிமுறைப் போராட்டங்கள் என்பவற்றைக் கடந்து இந்தத் தமிழ் மக்கள் அரசியல் அநாதைகளாக நிற்கின்றார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள இன்னொரு வாய்ப்பாகவே மனித உரிமைகள் ஆணையகத்தின் அறிக்கை வெளிவந்துள்ளது. இந்த அறிக்கையை தமிழ் மக்களின் தலைமைகள் மற்றும் சமூகப் பிரதிநிதிகள் சரியான வகையில் அணுக வேண்டும்.

அப்போதுதான் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்யவும் உண்மைகள் கண்டறியப்படவும் இழப்புக்கள், பாதிப்புக்களுக்கு உரிய பரிகாரம் காணவும் அரசியல் அபிலாசைகளை அடைந்து கொள்ளும் கௌரவமான தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ளவும் முடியுமாக இருக்கும்.

விசாரணைகளுக்கான பொறிமுறை எவ்வாறானதாக அமைந்தாலும் அதில் தமிழ் மக்களின் அரசியல் மற்றும் கலாசாரங்களோடு நெருக்கமான உறவையும் தொடர்பையும் கொண்டிருக்கும் இந்திய அரசும் உள்வாங்கப்பட வேண்டும். அப்போதுதான் நீடித்த நிலையான தீர்வொன்றைத் தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ள முடியும்.




ஆகவே, தற்போதைய முக்கியமான காலகட்டத்தை தமிழ்த் தலைமைகள் ஆளுக்கொரு பக்கமாக நின்று விமர்சிப்பதாலோ, விவாதிப்பதாலோ நன்மையேதும் இங்கே நடந்துவிடாது. எனவே, அரசியல் மற்றும் இதர பேதங்களைக் கடந்து தமிழ் அரசியல் தலைமைகள் பொது இணக்கப்பாட்டுடன் ஒன்றுபட்டு ஐ.நாவின் பொறிமுறையை எவ்வாறு முன்னெடுப்பது என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

இந்த அவசியமான முயற்சிக்கு சக தமிழ் அரசியல் கட்சிகள், தமிழ் மக்களின் நலன்சார்ந்து செயற்படும் அனைத்துப் பொது அமைப்புக்கள் ஆகியோரை பொது இணக்கப்பாடொன்றுக்கு வருமாறு தமிழ் மக்களின் சார்பாகப் பகிரங்க அழைப்பு விடுக்கின்றேன் என்றும் டக்ளஸ் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# ஆலயங்களில் அடியவர்களை காண முடியவில்லை; தொண்டுகள் புரிய வேதனங்கள் கொடுக்கும் நிலை

## வாசு தேவக்குருக்கள் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

**ஆலயங்கள் இன்று பணத்தின் செல்வச் செழிப்பினை காட்டுவதாக அமைந்துள்ளனவே தவிர அங்கு அடியார்களையோ தொண்டர்களையோ காணமுடியவில்லை. தொண்டுகள் புரிவதற்கும் வேதனங்கள் வாங்கும் தொண்டர்களையே இன்று காண முடிகின்றது என வீணாகான குருபீட சந்நிதாச்சாரியார் சிவஸ்ரீ. சபா வாசுதேவக் குருக்கள் தெரிவித்துள்ளார்.**



யாழ்.சித்தன்கேணி வட்டு. இந்துக்கல்லூரி பரிசளிப்பு நிகழ்வும் கல்லூரியின் ஸ்தாபகரான அம்பலவாண சுவாமிகளது நினைவுதின நிகழ்வும் அண்மையில் இடம் பெற்றது.இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோபுரங்கள் எழுப்பப்படும் அதே வேளை அதற்கு சமமாக பொது பணிகளுக்கான மன்றங்களோ அல்லது பொதுபணிகளுக்கான மூலதனமோ இடப்படவேண்டும் அப்போதுதான் சைவம் வெற்றி பெற்றதாக அமைவுறும். புதிய ஆலயங்கள் அமைப்பதற்கு அனுமதிபெறும் நியதிச்சட்டம் மிக விரைவில் உருவாக்கப்பட வேண்டும். தென்னிலங்கையில் ஒரு சில மரங்களைவெட்ட முடியாது என்னும் நியதிச்சட்டம் இருப்பதுபோல இங்கு வடக்குமாகாணத்தில் புதிய ஆலயங்கள் உருவாக்குவதற்கு அனுமதி பெறும் சட்டம் உருவாக்கப்பட வேண்டும். அது எச்சமயத்தவராக இருந்தாலும் பொருந்தும்.

புதிய புதியஆலயங்கள் உருவாக்கப்படும் போது அதன் மூலம் சமூகப் பிரச்சனைகள் தான் உருவாகும்.

அதுமாத்திரமல்லாது வணக்கஸ்தலங்களை பிரதிபலிக்கும் வகையில் வீதிமுகரிகள் எங்கும் சிலைகள் திறக்கப்பட்டு தெய்வத்தினை அசிங்கப்படுத்துகின்றார்கள். இவை பற்றி சிந்திக்க வேண்டும். அத்துடன் சைவத்தினை பாதுகாக்க வேண்டிய சூழல் தற்போது எழுந்துள்ளது. அதற்கு தமிழ்த் தலைவர்கள் முழுமையாக ஒத்துழைப்புத் தரவேண்டும். எமதுதமிழ் தலைவர்கள் குருமார் களையும் ஆன்மீக தலைவர்களையும் வாய்ப்புள்ள போதெல்லாம் சந்தித்து கலந்துரையாடல் செய்ய வேண்டும்.தமிழ் ஆர்வலர்கள், தலைவர்கள் ஒன்றைப்புரிந்து கொள்ள வேண்டும் சைவம் தான் தமிழை அடையாளப்படுத்துவதாகவும் பாதுகாப்பதாகவும் இருக்கின்றது என்பதை. அதேபோல் தமிழும் சைவத்தினை பாதுகாக்கின்றது. ஒருபிரதேசத்தில் தமிழர்வாழுகின்றார்கள் என்பதை அங்கு காணப்படும் ஆலயங்களை கண்டு உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

ஆலயம் அமைந்துள்ள இடத்தில் தமிழன் இருக்கின்றான் தமிழ் வளருகின்றது என்பதை உணரவேண்டும். சைவத்தினை பாதுகாகக தலைவர்கள் குரல் கொடுக்க முன்வரவேண்டும். எமது குருமார்கள் ஆன்மீகத் தலை வர்கள் அரசியல் அல்லது நிர்வாக விடயங்களில் ஏனைய மதத் தலைவர்களைப் போன்றுஆதிக்கம் செலுத்துபவர்கள் அல்ல. அதற்காக சமயத்தினை உதாசீனப்படுத்தாமல் இருத்தல் வேண்டும். இதற் கெல்லாம் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# அனுமதியின்றி பனை மரங்கள் தறிப்போர் மீது நடவடிக்கை

யாழ்.மாவட்டத்தில் சட்டவிரோதமான முறையில் அனுமதியின்றி பனை மரம் தறிப்பவர்களுக்கு எதிராகசட்நடவடிக்கைஎடுக்கப்படும்என பனை அபிவிருத்தி சபை தலைவர் சோ.கோகுலதாசன்தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்திலுள்ள பல பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் பனை மரங்கள் தறிக்கப்பட்டு வருகின்றன.இவைதொடர்ச்சியாகஇடம் பெற்றுவந்தால் பனை மரங்கள் அழிவடையும் நிலை ஏற்பட்டு விடும்.

எனவே சட்டவிரோதமான முறையில் பனை மரங்கள் தறிக்கப்படும் பகுதிகளுக்கு பனை அபிவிருத்தி சபையின் அபிவிருத்தி முகாமையாளர் ,வெளிக்கள உத்தியோகத்தர்கள விஜயத்தினை மேற்கொண்டும் குறித்த பகுதியின் பிரதேச செயலர், பொலிஸ் அதிகாரி ஆகியோருடன் தொடர்பு கொண்டு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

பனை அபிவிருத்தி சபையால் இந்த நடவடிக்கை தொடர்ச்சியான முறையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் பனை அபிவிருத்தி சபையால் வயது முதிர்ந்த பனைகள், பாவனைக்கு உதவாத பனை மரங்கள், கட்டடங்கள் அமைக்கவிருக்கும் பகுதிகளில் அமைந்துள்ள பனைகள் என்பன வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-9)

# மாணவர் படுகொலை நினைவு நாளும் நினைவுத்தூபி திறப்பு விழாவும் இன்று

(யாழ்ப்பாணம்)

நாகர்கோவில் மகா வித்தியாலய முன்றிலில் கடந்த 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற விமானக் குண்டுத்தாக்குதலில் உயிரிழந்த மாணவர்களின் 20ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வும் புதிதாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி திறப்பும் இன்று செவ்வாய்க்கிழமை நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் பிற்பகல் 3மணிக்கு நடைபெறவுள்ளது.

வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சுகிர்தன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## கலப்பு நீதிமன்றத்தாலும் உள்ளக பொறிமுறை மூலமும்

# போர்க்குற்றங்கள் பகுதிபகுதியாக விசாரணை செய்யப்பட வேண்டும்!



### ஆனந்தசங்கரி வலியுறுத்து

**(யாழ்ப்பாணம்)**

**இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் கலப்பு நீதிமன்றத்தாலும் உள்ளகப் பொறிமுறை மூலமும் பகுதி பகுதியாக விசாரணை செய்யப்பட வேண்டுமென தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

நம்மவர்களும்புலம்பெயர்ந்தமக்களும் மிகமுக்கியமாக கருதவேண்டிய விடயத்தை துரதிர்ஷ்ட வசமாக அனைவரும் மிகச்சாதாரணமாகஎடை போடுகின்றனர். மனித உரிமைப் பேரவையின் சர்வதேச நீதிபதிகள், சட்டத்தரணிகள் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்ற விசாரணைமுறையும் அமெரிக்கா முன்மொழிகின்ற உள்ளக விசாரணை முறையும் பற்றித்தான் இங்கே குறிப்பிடுகினறேன். இதனுடைய கடும் விளைவுகளைப்பற்றி உணராமல் பலகோணத்தில் இருந்து பலரால் பலவிதமான ஆலோசனைகள் வழங்கப் படுகின்றன. சிலர் தாம் தான் இதை பூரணமாக அறிந்தவர்கள் போலக் கூறுவதும் மற்றும் சிலர் குறிப்பிட்ட குழுவினருக்குத்தான் இதைப் பற்றிய பூரண அதிகாரம் உண்டு எனப் பேசுவதும் வேடிக்கையாகத் தெரிகின்றது. பலரும் தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு பல்வேறுவிதமான கருத்துக்களைக் கூறுவதால் எல்லோரும் ஒன்று கூடி ஒரு நிலைப்பாட்டை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியைப் பொறுத்தவரையில் சர்வதேச கலப்பு நீதிமன்ற விசாரணையை ஏற்றுக் கொண்டாலும், இந்த நீதிமன்றங்கள் எத்தகைய போர்க்குற்றங்களை விசாரிக்கப் போகின்றது என்பதை ஆராயும் போது, பாதிக்கப்பட்டவர்களின் நன்மையை கவனத்தில் எடுத்துப் பார்த்து, சிலகுற்றச் செயல்களை சர்வதேச கலப்பு நீதிமன்றத்தில் விசாரிப்பது வசதிப்படாது என்றும் அதேபோல் எல்லாக் குற்றங்களையும் உள்ளக நீதிமன்றத்தில் விசாரிப்பது கஷ்டம் எனவும் உணரக் கூடியதாக இருக்கின்றது. ஆகவே பிரச்சினையற்ற சில விசாரணைகளை தவிர்ந்த ஏனையவை ஒவ்வொன்றும் தனித்தனியாக எந்த நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்பதை ஓர் விசேட அமைப்பு மூலம்அந்தந்த நீதிமன்றத்திற்கு ஒப்படைக்க வேண்டும் என்பதே, மேலானது என தமிழர் விடுதலைக் கூட்டணி கருதுகின்றது. இந்த நிலைப்பாட்டை எடுக்க எனக்கு போதியநியாயங்கள் இருந்தபோதும், என் இஷ்டப்படிநான் ஒரு தீர்வை அறிவிக்காது, இப்பிரச்சினைகளில் அக்கறை கொண்டவர்களுடனும் கலந்து ஏகமனதாக முடிவெடுப்பதே சிறந்ததென எண்ணுகின்றேன். ஒருவர் முடிவெடுக்க ஏனையோர் அவரின் பின்னேசெல்லும் வழக்கம் மாறவேண்டும். அனைவரும் சேர்ந்து எடுக்கும் முடிவையே வற்புறுத்த வேண்டும். தமிழ்த் தலைமைகள் நம் இனத்தின் நன்மை கருதியாவதுஒன்று கூடி ஒரு தீர்வை எடுக்காதமை வெட்கப்பட வேண்டிய விடயமாகும். ஏனைய சமூகங்களை பார்த்தாவது தாம் பழகிக் கொள்ள வேண்டும். தாம் தான் மிகச் சிறந்த புத்திசாலிகள் என எவரும் எண்ணக் கூடாது.

மிக மோசமான குற்றங்களும், அடிப்படை உரிமை மீறல்களையும்மூன்று நான்கு வகையாகப் பிரிக்கலாம் அவை யாவன, வன்புணர்வோடு கூடிய சித்திரவதை, வன்புணர்வு, சித்திரவதையோடு கூடியகொலை, மற்றும் காணாமற் போனதுடனான சித்திரவதையோடு சேர்ந்த கொலை ஆகியவையாகும். இதை இராணுவம் பொலிஸார் சம்பந்தப்பட்டவை என மேலும் பிரிக்கலாம்.

வன்புணர்வோடு கூடிய சித்திரவதைகளுக்குள்ளான எமது பெண்களை நீதி மன்றம் வந்து பகிரங்கமாக சாட்சியமளிக்க வைப்பது கஷ்டம் மட்டுமல்ல ஒருமுடியாத காரியமும் கூட என்பதை அனைவரும் அறிவர்.

அநேகமாக வன்புணர்வுகள் சித்திரவதையுடன் சேர்ந்தவையாக இருப்பதால் இதனை அனுபவமிக்க பெண் நீதிபதிகள், பெண் சட்டத்தரணிகள் ஆகியோரைக் கொண்டு சிறு குழுக்களை அமைத்துவேறு எவரையும் அனுமதிக்காது இரகசிய விசாரணைகளை மேற்கொண்டு பொருத்தமான தீர்வையும் நட்டஈட்டையும் வழங்கவேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி கருதுகின்றது.

சித்திரவதையால் ஏற்பட்ட கொலைகளை கலப்பு நீதிமன்றங்களே விசாரிக்க வேண்டும்.

சித்திரவதைகள் மட்டும் உள்ளவற்றை உள்ளக விசாரணை முறைமையில் விசாரிக்கலாம் என அந்த அறிக்கையில் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ)




### புதிய உறுப்பினர்கள் தெரிவு

யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்கான அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்க நிர்வாககுழு புதிய உறுப்பினர்கள் தெரிவு அண்மையில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இடம்பெற்றது. புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக டாக்டர் ரி.பாலமுரளியும் உபதலைவராக டாக்டர் பி.அச்சுதனும் செயலாளராக டாக்டர் என்.ரவீந்திரனும் உபசெயலாளராக டாக்டர் கே.தனேஸ்வரனும் பொருளாளராக டாக்டர் எல்.அல்வேர்ட் குரூஸும் இதழாசிரியராக டாக்டர் எஸ்.சிவானந்தனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் நிர்வாகக்குழு உறுப்பினர்களாக டாக்டர் ஆர்.நிசான், டாக்டர் கே.இராஜசேகரன், டாக்டர் ரி.குமணன், டாக்டர் ஏ.அரிதரன், டாக்டர் கே.இளங்கோஞானியர், டாக்டர் ரி.சுகிதரன், டாக்டர் எஸ்.சிவகுமார், டாக்டர் எஸ். உமாசுதன், டாக்டர் குமாரவேல், டாக்டர் ரி.நந்தகுமார், டாக்டர் பி.செந்தூரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ-5)



வாழ்வக நிறுவுநர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின் ஒன்பதாவது நினைவு நாள அண்மையில் வாழ்வக நிறுவனத்தில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருநதினராக இந்தியத் துணைத் தூதுவர் ஆறுமுகம் நடராஜனும் சிறப்பு விருந் தினராக ஓய்வு பெற்ற வைத்தியகலாநிதி இ.கணேசமூர்த்தி ஆகியோரும் கலந்து சிறப்பித் தனர். இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கான இலவச மூக்குக் கண்ணாடி வழங் கும் திட்டமும் ஆரமபித்து வைக்கப்பட்டு, முதற்கட்டமாக பத்து மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. அத்தோடு,ஒலிம்பிக் பதக்கம் வென்ற சிவபூமி மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

## புதிய கணிதபாடத்திட்ட நூல் வெளியீட்டு விழா

இவ்வாண்டிற்கான தரம் 6இற்குரிய புதிய கணித பாடத் திட்ட நூல் வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை காலை 8 மணிக்கு யாழ். வயாவிளான் மத்திய கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

கல்லூரிஅதிபர்வி.ரி. ஜெயந்தன் தலைமையில் நடைபெறவுள்ளநிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ்.தேசிய கல்வியியற்கல்லூரி தினகசார் ஓய்வு நிலைப்பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந் தினராக வலிகாமம் வலயக்கல்விஅலுவலககணித பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் வேலாயுதம் சிவகுமாரன் கலந்து கொள்ளவுள்ளார். இதன்போது ஆய்வுரையினை கல்லூரியின் பிர தி அதிபர் வேலாயுதம் புவனே ந்திரன் வழங்கவுள்ளார். நூல் பிரதியினை எடிசன் அக்கடமி, நிர்வாகி பி.பி பாஸ்கரன் பெற்றுக் கொள்வதுடன்விசேடபிரதியினை லண்டன்பழைய மாணவன் அ. கிருஷ்ணமூர்த்தி பெற்றுக் கொள்ளவுள்ளார். (இ-5)

## இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்திய சாயி நிலையத்தின் ஏற்பாட்டில் இரத்ததான நிகழ்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை யாழ்.பல்கலைக் கழகத்திற்கு முன்பாக அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொண்டு அனைவரும் இரத்ததானம் செய்யுமாறு சத்திய சாயி நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர். (இ-5)

## சிறுமிக்கு நீதிகோரி அளவெட்டியில் பேரணி

கொட்டதெனியாவில் துஷ்பிரயோகத்தின் பின் படுகொலைசெய்யப்பட்டசிறுமிக்கு நீதிகோரி அளவெட்டியில் இன்றைய தினம் பேரணியொன்று இடம்பெறவுள்ளது. இப்பேரணியினை வடக்கு மாகாண சபை உறுப்பினர் களும் அப்பகுதி இளைஞர்களும்இணைந்து ஏற்பாடுசெய் துள்ளனர். கொட்டதெனியாவ -படல்கம, அங்கரங்கஹ பகுதியினைச் சேர்ந்த முன்பள்ளிச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்தின் பின் படுகொலைசெய்யப்பட்டிருந்தார்.

சிறுமியை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய காமுகர்கள் பின்பு சிறுமியை துணியிலான பட்டியொன்றினால் கழுத்து நெரித்து கொலை செய்துள்ளனர். இக் கொடூர சம்பவம் குறித்து சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் குறித்த சிறுமிக்கு நீதி கிடைக்க வேண்டுமெனக் கோரி தென்னிலங்கை முழுவதும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இந்நிலையிலேயே வடக்கிலும் மேற்படி சிறுமிக்கு நீதி கிடைக்கக் கோரி போராட்டம் இடம்பெறவுள்ளது. அளவெட்டியிலிருந்து காலை 8 மணியளவில் ஆரம்பமாகும் குறித்த பேரணி தெல்லிப்பழை பிரதேச செயலர் அலுவலகம் முன்பாக முடிவடையவுள்ளது. இதன்போது பிரதேச செயலரிடம் வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனால் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும்கையளிக்கப்படவுள்ளது.

புங்குடுதீவில் பாடசாலை வன்புணர்விற்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட போது அம் மாணவிக்கு நீதி கோரி தென்னிலங்கையில் போராட்டங்களினை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் கொட்டதெனிய சிறுமிக்கு நீதிகோரி முன்னெடுக்கப்படும் இப்பேரணியில் அனைவரும் இணைந்து கொள்ள வேண்டுமென ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-4)

## முன்பள்ளி நிலையத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா

புங்குடுதீவு சிவலைப்பிட்டி முன் பள்ளி நிலையத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி முன் பள்ளி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சிவலைப்பிட்டி சனசமூக நிலையத்தின் தலைவர் வ.சதீஸ்குமார் தலைவராக பங்கேற்கும் இந்நிகழ் வில் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலர் சதீசன் மஞ்சுளா தேவி கலந்து கொண்டு சிறப்பிக்க வுள்ளார்.

சிறப்பு விருந்தினராக தீவகம் வேலணை வலயக்கல்விப் பணிப்பாளர் ரி. ஜோன்குயின்ரஸ் கலந்து கொள்ள வுள்ளார். (இ-5)

## ஒக்டோபரில் இருந்து

# புகையிரதசேவைகளின் நேர அட்டவணையில் மாற்றங்கள்

(மல்லாவி)

**புகையிரத திணைக்களத்தினால் யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தில் இருந்து கொழும்பிற்கும் கொழும்பு புகையிரத நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கும் இடையிலான நான்கு புகையிரத சேவைகளின் நேர அட்டவணை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி முதல் திங்கட்கிழமை தொடக்கம் மாற்றம் அடையவுள்ளதாக புகையிரத திணைக்களத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதற்கமைய யாழ்ப்பாணம் காங்கேசன் துறை புகையிரத நிலையத்தில் இருந்து அதிகாலை 5.30 மணிக்கு புறப்படும் உத்தர தேவி கடுகதி புகையிரதம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து காலை 6.10 மணிக்கு புறப்பட்டு கிளிநொச்சி புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து காலை 7.05 மணிக்கு புறப்பட்டு வவுனியா புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து காலை 8.10 மணிக்கு புறப்பட்டு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை பிற்பகல் 1.05 மணிக்கு சென்றடையும்.

இதேவேளை காங்கேசன்துறை புகையிரத நிலையத்தில் இருந்து காலை 6.25 மணிக்கு புறப்படும் யாழ்தேவி புகையிரதம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து காலை 7.10 மணிக்கு புறப்பட்டு கிளிநொச்சி புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து காலை 8.30 மணிக்கு புறப்பட்டு வவுனியா புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து முற்பகல் 10 மணிக்கு புறப்பட்டு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை பிற்பகல் 4மணிக்கு சென்றடையும்.

இதேவேளை காங்கேசன்துறை புகையிரத நிலையத்தில் இருந்து பிற்பகல் 1.15 மணிக்கு புறப்படும் குளிரூட்டப்பட்ட கடுகதி புகையிரதம் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து பிற்பகல் 1.45 மணிக்கு புறப்பட்டு கிளிநொச்சி புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து பிற்பகல் 2.38 மணிக்கு புறப்பட்டு வவுனியா புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து பிற்பகல் 3.35மணிக்கு புறப்பட்டு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை இரவு 8 மணிக்கு சென்றடையும்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் இருந்து இரவு 7 மணிக்கு புறப்படும் தபால் புகையிரதம் கிளிநொச்சி புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து 8.28 மணிக்கு புறப்பட்டு வவுனியா புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து இரவு 9.50 மணிக்கு புறப்பட்டு மறுநாள் அதிகாலை 4 மணிக்கு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை சென்றடையும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் இருந்து முற்பகல் 10 மணிக்கு புறப்படும் மாத்தளை புகையிரதம் கிளிநொச்சி புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து முற்பகல் 10.55 மணிக்கு புறப்பட்டு வவுனியா புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து பிற்பகல் 12.20 மணிக்கு புறப்பட்டு கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை மாலை 6.20 மணிக்கு சென்றடைந்து அங்கிருந்து மாத்தளை புகையிரத நிலையத்தை இரவு 9.40 மணிக்கு சென்றடையும்.

இதேவேளை கல்கிசை புகையிரத நிலையத்தில் இருந்து அதிகாலை 5.10 மணிக்கு புறப்படும் குளிரூட்டப்பட்ட கடுகதி புகையிரதம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து 5.45 மணிக்கு புறப்பட்டு வவுனியா புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து முற்பகல் 10மணிக்கு புறப்பட்டு கிளிநொச்சி புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து முற்பகல் 11 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து முற்பகல் 11.50 மணிக்கு புறப்பட்டு காங்கேசன்துறை புகையிரத நிலையத்தை ற்பகல் 12.15 மணிக்கு சென்றடையும்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து காலை 6.25 மணிக்கு புறப்படும் யாழ்தேவி புகையிரதம் வவுனியா புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து முற்பகல் 11.45 மணிக்கு புறப்பட்டு கிளிநொச்சி புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து பிற்பகல் 1.10 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து பிற்பகல் 2.35 மணிக்கு புறப்பட்டு காங்கேசன்துறை புகையிரத நிலையத்தை பிற்பகல் 3.15 மணிக்கு சென்றடையும்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து முற்பகல் 11.50 மணிக்கு புறப்படும் உத்தரதேவி புகையிரதம் வவுனியா புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து பிற்பகல் 4.25 மணிக்கு புறப்பட்டு கிளிநொச்சி புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து பிற்பகல் 5.23 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து மாலை 6.15 மணிக்கு புறப்பட்டு காங்கேசன்துறை புகையிரத நிலையத்தை மாலை 6.45 மணிக்கு சென்றடையும்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து இரவு 8.30 மணிக்கு புறப்படும் தபால் புகையிரதம் வவுனியா புகையிர நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து அதிகாலை 2.10 மணிக்கு புறப்பட்டு கிளிநொச்சி புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து அதிகாலை 3.35 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து அதிகாலை 5.10 மணிக்கு புறப்பட்டு காங்கேசன்துறை புகையிரத நிலையத்தை காலை 6.05 மணிக்கு சென்றடையும்.

இதேவேளை சனிக்கிழமைகளில் மட்டும் மாத்தளை புகையிரத நிலையத்தில் இருந்து காலை 6.20மணிக்கு புறப்படும் மாத்தளை புகையிரதம் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து காலை 9.40மணிக்கு புறப்பட்டு வவுனியா புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து பிற்பகல் 4.50 மணிக்கு புறப்பட்டு கிளிநொச்சி புகையிரத நிலையத்தை சென்றடைந்து அங்கிருந்து பிற்பகல் 5.55 மணிக்கு புறப்பட்டு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை மாலை 6.55 மணிக்கு சென்றடையும் என புகையிரத திணைக்கள நேர அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




## கிளிநொச்சி ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தில் அடுத்த வருடம் ஏப்ரலில் கற்கைநெறிகள் ஆரம்பம்

கிளிநொச்சி அறிவியல்நகர் பகுதியில் அமைக்கப்பட்டு வருகின்ற இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப நிலையத்தில் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படும் என நைற்றா நிறுவனத்தின் பொது முகாமையாளர் பொறியிய லாளர் பிரதீபா உதாகர தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உட்கட்டுமானங்கள், தளபாடங்கள், கற்கைகளுக்குரிய உபகரணங்கள் அடங்கலாக 6.7 மில்லியன் யூரோ பெறுமதியில் அமைக்கப்பட்டு வருகின்ற குறித்த தொழில்நுட்ப நிறுவனமானது இலங்கைக்கான தேசிய நிறுவனமாகும். இங்கு நாட்டின் அனைத்து இடங்களில் இருந்தும் அனைத்து தரப்பு மாணவர்களும் தங்கி நின்று தங்களுடைய தொழில்நுட்ப கல்வியை கற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

முதற்தடவையாக 220 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இங்கு 96 மாணவர்களுக்கும், 45 மாணவிகளுக்குமான தங்குமிட வசதிகள் அமைத்துக் கொடுக்கப்படும். அத்தோடு 45 உத்தியோகத்தர்களுக்கான தங்குமிட வசதிகள் காணப்படுகிறது.

NVQ 4.5.6 தர கற்கைகள் இங்கு கற்பிக்கப்படவுள்ளது. தற்கால தொழிற் சந்தையை நோக்காக கொண்டு நாட்டின் தொழில்நுட்ப திறன்விருத்தியை முன்னேற்றம் அடையச் செய்யும் வகையில் இந் நிறுவனத்தின் ஊடாக செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

இன்று செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ள ஜேர்மன் நாட்டு வெளிவிவகார அமைச்சர் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து அமைக்கப்பட்டு வருகின்ற தொழில்நுட்ப நிறுவனத்தையும் பார்வையிடவுள்ளார். (2-15)

## முழங்காவில் பிரதான பேருந்து நிலையத்திற்கு அடிக்கல் நாட்டல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட முழங்காவில் பிரதான பேருந்து நிலையத்துக்கான அடிக்கல் வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனினால் நாட்டப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தின் முழங்காவில் பிரதேசத்தில் மன்னார் சங்குப்பிட்டி ஏ-32 பிரதான வீதியில், வடக்கு மாகாண போக்கு வரத்து அமைச்சின் 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ள பிரதான பேருந்து நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றது.



இந் நிகழ்விற்கு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், முழங்காவில் இந்து ஆலய குருக்கள், கிறிஸ்தவ மத குரு, நாச்சிக்குடா பூநகரி பிரதேச செயலாளர், எப்.சி. சத்தியசோதி, கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறியியலாளர், கிளிநொச்சி மாவட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர், பொறியியல் ஆலோசகர் ஜி.சுரேன், பொறி யியலாளர் தேவானந், கிளிநொச்சி மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள், முழங்காவில் மற்றும் அதன் அயல் பகுதிகளை சார்ந்த கிராம அபிவிருத்தி மற்றும் மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதி நிதிகள் ஆகியோர் இணைந்து அடிக்கலை நாட்டி வைத்தனர். (2-9)



வவுனியா விவசாயத்திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட - 2015 அபிவிருத்தி நிதியத்தின் கீழ் விவசாய உள்ளீடுகள் விநியோக நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முருகனூர் மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற போது..

உலக குடியிருப்பு தினத்தையொட்டி

# பாடசாலை மாணவர்களுக்கு சித்திரம், கட்டுரைப்போட்டிகள்

(முல்லாவி)

உலக குடியிருப்பு தினம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் கொண்டாடப்படவுள்ளது.

இதனையொட்டி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் நாடு தழுவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கிடையே சித்திரம் வரைதல், கட்டுரை ஆக்கம் ஆகிய போட்டிகளை மாவட்டம், தேசிய மட்டங்களில் நடத்தி பணப்பரிசில்கள் வெற்றிக்கிண்ணங்கள், சான்றிதழ்கள், என்பவற்றை வழங்கி கௌரவிக்கவுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தகவல் மற்றும் பிரசாரப்பிரிவு பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள உலக குடியிருப்பு தினத்தையொட்டி நாடு தழுவிய ரீதியிலுள்ள தனியார் மற்றும் அரச துறைசார்ந்த பாடசாலைகளைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும் பங்கேற்கும் வகையில் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஆக்கங்கள் அனைத்தும் "வீட்டினை பிரதானமாகக் கொண்ட குடியிருப்பு அபிவிருத்தி", "பாதுகாப்பான சூழலினுள் பாதுகாப்பான ஒரு வாழ்வு", "பொதுப் போக்குவரத்தும் சக்தி பாதுகாப்பும்", "குடிப்பதற்கு தூய்மையான நீர் மற்றும் சுகாதார வசதிகளும், திண்மக் கழிவு பொருள் முகாமை" ஆகிய தலைப்புகளைக் கொண்டதாக அமைய வேண்டும். சித்திரப் போட்டிக்கான முதல் பிரிவில் தரம்-3 தொடக்கம் தரம் -5 வரையான மாணவர்களும் இரண்டாவது பிரிவில் தரம் -6 தொடக்கம் தரம் -9 வரையான மாணவர்களும் மூன்றாவது பிரிவில் தரம் -10 தொடக்கம் தரம்-13 வரையான மாணவர்களும் பங்கேற்க முடியும்.

கட்டுரை ஆக்கங்கள் மேற்கூறப்பட்ட தலைப்புக்களில் எழுத முடியும்.

முதலாவது பிரிவில் தரம்-6 தொடக்கம் தரம்-9 வரையான மாணவர்கள் 300 சொற்களுக்கு உட்பட்டதாகவும் இரண்டாவது பிரிவில் தரம்-10 தொடக்கம் தரம்-13 வரையான மாணவர்கள் 500 சொற்களுக்கு உட்பட்டதாகவும் கட்டுரைப்போட்டிக்கு ஆக்கங்களை எழுத வேண்டும்.

மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கு முதலாவது பரிசாக 5 ஆயிரம் ரூபாவும் வெற்றிக்கிண்ணம், சான்றிதழ், இரண்டாவது பரிசாக 3 ஆயிரம் ரூபாவும் வெற்றிக்கிண்ணம், சான்றிதழ், மூன்றாவது பரிசாக 2 ஆயிரம் ரூபாவும் வெற்றிக்கிண்ணம், சான்றிதழ் என்பன வழங்கப்படும்.

மேலும் ஐந்து வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். தேசிய மட்டத்தில் முதலாவது வெற்றியாளருக்கு 10 ஆயிரம் ரூபாவும் வெற்றிக்கிண்ணம், சான்றிதழ் என்பன வழங்கப்படுவதுடன் இரண்டாவது வெற்றியாளருக்கு 7 ஆயிரத்து 500 ரூபாவும் வெற்றிக்கிண்ணமும், சான்றித்ழ் என்பன வழங்கப்படும்.

மூன்றாவது வெற்றியாளருக்கு 5 ஆயிரம் ரூபாவும் வெற்றிக்கிண்ணம் சான்றிதழ் என்பன வழங்கப்படவுள்ளதோடு, மேலும் 5 வெற்றியாளர்களுக்கு 2 ஆயிரம் ரூபாவும் சான்றிதழ்களும் வழங்கப்படும் .போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமையாகும்.

ஆக்கங்கள் அனைத்தும் பிரதி பொது முகாமையாளர், தகவல் மற்றும் பிரசாரப் பிரிவு, 7 ஆம் மாடி, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, கொழும்பு-2 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

ஆக்கங்கள் அனைத்தும் அந்தந்தப் பாடசாலை அதிபர்களினால் உறுதிப்படுத்தப்பட்டு, பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

மேலதிக தகவல் தேவைப்படுவோர் தமக்கு அருகாமையிலுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகத்துடன் அல்லது பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள போட்டிகள் தொடர்பான சுற்றுநிருபத்தை பார்வையிடுவதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

மேலும் 011 244 7207, 011 238 9513 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# படைமுகாம்களை அகற்றுவதன்மூலம் மக்கள் இயல்பு சூழலில் வாழ முடியும்

## வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சி தலைவர் தெரிவிப்பு

அமைதிச்சூழல் ஏற்பட்டிருக்கும் நிலையில் மக்கள் செறிந்துள்ள பகுதியில் அளவுக்கு அதிகமாக இருக்கும் படைமுகாம்களை அகற்றிக் கொள்வதன் மூலமே மக்கள் இயல்புச் சூழலில் வாழ முடியுமென வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் அதிரடிப்படை முகாம் வேலியில் மின்சாரம் தாக்கி மரணமடைந்த வவுனியா அடம்பன்குளம் பகுதியைச் சேர்ந்த இராஜேஸ்வரி கந்தசாமியின் மரணம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குடியிருப்புப் பகுதிகளில் தொடர்ந்து இராணுவ முகாம்கள் இருப்பது மக்களின் அன்றாட நடவடிக்கைகளுக்கு இடையூறாக அமையும். அடம்பன்குளத்தில் அண்மையில் அதிரடிப்படை முகாம் வேலியில் மின்சாரம் தாக்கி மரணமடைந்த குடும்பப்பெண் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு.


அமைதிச் சூழல் ஏற்பட்டிருக்கும் நிலையில் அளவுக்கு அதிகமாக இருக்கும் படைமுகாம்களை மூடிக்கொள்வதே மக்களின் இயல்பு வாழ்க்கையை சுமுகமாக எடுத்துச் செல்வதற்கு வழிவகுக்கும்.

அடம்பன்குள அதிரடிப்படை முகாம் மட்டுமல்ல குடியிருப்பு செறிந்துள்ள பகுதிகளில் தேவைக்கு அதிகமாகவுள்ள முகாம்களை மூடுவதற்கு தேசிய நல்லிணக்கத்திற்கு முன்னுரிமை வழங்கும் புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் தேசிய நல்லிணக்கத்திற்கான உறவுப்பாலமாக அமையும் என அவர் மேலும் தெரிவுத்துள்ளார். (2)

# தெரிவு செய்யப்பட்ட 134 மீனவர்களுக்கு வலைகள்

## வழங்கி வைத்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர்



(முல்லைத்தீவு)

வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனின் பன்முகப்படுத்தப்பட்ட 11 இலட்சத்து இருபத்தேழாயிரத்து ஐந்நூறு ரூபா நிதியொதுக்கீட்டில் தெரிவு செய்யப்பட்ட 134 மீனவர்களுக்கு தலா இரு வலைகள் கரைதுறைப் பிரதேசத்துக்குட்பட்ட கள்ளப்பாடு பொது நோக்கு மண்டபத்தில் வைத்து நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட மீனவர்கள், தாம் வெளிமாவட்ட மீனவர்களால் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்குவதாக ரவிகரனிடம் முறையிட்டனர்.

கணவாய்க்கூடுகள் கட்டுதல், சுருக்கு வலை, வெளிச்சம் போட்டு மீன்பிடித்தல், அட்டைத் தொழில் போன்ற தடைசெய்யப்பட்ட தொழில்களை அவர்கள் மேற்கொள்வதால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் அவர்களின் தலையீடு தமது சொந்த இடங்களில் தமது வாழ்வாதார மீன்பிடித் தொழிலை முன்னெடுக்க வ்ழி செய்யுமாறும் கேட்டுக்கொண்டனர்.

அவர்களின் முறைப்பாடுகளைக்கேட்டறிந்த ரவிகரன் தனது உரையில், இக்குறைகள் தொடர்பாக தான் பலமுறை உரிய தரப்புகளுக்கு கொண்டு சென்றிருப்பதாக தெரிவித்தார். இன்றுவரை அவற்றுக்கான தீர்வுகள் கிடைக்கப்பெறவில்லை. தற்போதைய அரசின் கவனத்துக்கு மாகாணசபை ஊடாக மீனவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளை கொண்டு செல்வேன் எனத் தெரிவித்தார்.

வாழ்வாதார நலிவடைந்த ஒவ்வொரு மீனவ குடும்பத்துக்கும் ரூபாய் 9 ஆயிரம் பெறுமதியில் வழங்கப்படும் இவ்விரு வலைகளும் ஒரு வாழ்வாதார ஊக்குவிப்பாக அமையும். இம்முறை உள்வாங்கப்படாத மீனவர்கள் அடுத்தடுத்த ஆண்டுகளில் உள்வாங்கப்படுவார்கள். கரையோரத்தில் உள்ள அனைத்து மீனவர்களுக்கும் இவ்வாழ்வாதார ஊக்குவிப்பு கிடைக்கும்வரை இது தொடரும் என்று தெரிவித்தார். (2)

# கடற்கரைச் சூழலை தூய்மைப்படுத்தும் வேலைத்திட்டம் மன்னாரில் முன்னெடுப்பு

(பனிக்கன்குளம்)



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கமைய கடற்கரை சூழலை தூய்மைப்படுத்தும் தேசிய வேலைத் திட்டம் நாடு தழுவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இந்த வேலைத்திட்டம் நேற்று மன்னார், மாந்தை மேற்கு, நானாட்டான், முசலி ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள கடற்கரையோரப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு, கடல் சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு ஆகியவை இணைந்து குறித்த செயற்றிட்டத்தை மன்னார் மாவட்டத்தில் முன்னெடுத்துள்ளனர்.

இதற்கான வேலைத்திட்டத்தை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை. எஸ்.தேசப்பிரிய ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் மன்னார் பிரதேச செயலாளர் கே.எஸ். வசந்தகுமார், மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவின் உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி.றியாஸ், கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளர்கள், பொலிசார், கடற்படையினர், மாணவர்கள், மீனவர்கள் ஆகியோர் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

மன்னாரில் இதுவரை 116 கிலோ மீற்றர் தூரம் கொண்ட கடற்கரையோரப் பகுதி தூய்மைப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவின் உதவிப்பணிப்பாளர் எம்.ஏ.சி. றியாஸ் தெரிவித்துள்ளார். (2-28)

# திருட்டு சம்பவங்களுடன் தொடர்புபட்ட இருவருக்கு கடூழிய சிறைத்தண்டனை

## இருவருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சியிலுள்ள இந்து ஆலயங்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்கள் ஆகியவற்றில் உண்டியல்கள் உடைத்து பணம் திருடியமை மற்றும் ஏனைய திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்ட நான்கு பேரை கிளிநொச்சி பொலிசார் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் அண்மையில் ஆஜர் படுத்தினர்.

நால்வரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். குறித்த நான்கு பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு கடந்த 17 ஆம் திகதி மீண்டும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோது குற்றத்தை ஒப்புக்கொண்ட இருவருக்கு தலா ஆயிரத்து 500 ரூபா அபராதமும் இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. மற்றைய இருவரும் குற்றத்தை ஒப்புக் கொள்ளாமையையடுத்து தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (2-28)

# வடக்கு பிரச்சினை மட்டுமே சம்பந்தனுக்கு தெரியுமாம்

## ரஞ்சித் சொய்சா கூறுகிறார்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கு வடக்குப் பிரச்சினை மட்டுமே தெரியும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார். நாம் எமது போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை. எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கோரப் போவதுமில்லை. தனியான சுயாதீன எதிர்க்கட்சியாக நாடாளுமன்றில் அமர்வோம்.

தற்போது நியமிக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவரை நாம் எதிர்க்கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை.

ஏனெனில் அவருக்கு இந்த நாட்டு மக்களின் பிரச்சினைகள் பற்றித் தெரியாது.

நெல் விலை பற்றியோ அல்லது நாட்டின் வேறு எந்தப் பிரச்சினை பற்றியோ பேசப் போவதில்லை.

அவர் பேசுவது வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி மட்டுமே.

இப்படியான நிலையில் எம்மால் எதிர்க்கட்சித்தலைவராக ஏற்றுக்கொள்ள முடியுமா? எதிர்க்கட்சியின் சுயாதீனத் தன்மையை உறுதி செய்ய எதிர்வரும் வாரத்தில் போராடுவோம்.

மெய்யான ஓர் எதிர்க்கட்சியாக நாம் செயற்படுவோம் என ரஞ்சித் சொய்சா சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)




# சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு எவரையும் கொண்டு செல்லமுடியாது

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

**ஜெனிவா அறிக்கையின் மூலம் எவரையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல முடியாது என மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.**



நாட்டின் இன்றைய ஜனாதிபதி நாட்டை ஆட்சி செய்யவில்லை என்றால் ஜெனிவா யோசனை ஊடாக நாடு பாரதூரமான நெருக்கடிக்குள் சிக்க வாய்ப்பிருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டை மாவட்ட மீன்பிடி மற்றும் நீரியல்வள திணைக்களத்தின் தங்காலை பிரதேச அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அமைச்சர் அமரவீர இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சில சிறிய கட்சிகள் சீபா உடன்படிக்கையில் கையெழுத்திட போவதாக கோசமிட்டு வருகின்றன. அரசாங்கம், சீபா உடன்படிக்கை குறித்து எதனையும் பேசவில்லை.

ஐ.நா. மனித உரிமை பேரவையில் அண்மையில் அரசாங்கம் எடுத்த தீர்மானம் தவறானது என சிலர் விமர்சித்து வருகின்றனர். இன்றைய ஜனாதிபதி இல்லாமல் போயிருந்தால், ஜெனிவா யோசனை மூலம் நாடு பாரதூரமான நெருக்கடியை எதிர்நோக்கியிருக்கும்.

சிலர், மின்சார நாற்காலி பற்றி பேசினர். மனித உரிமை யோசனைகள் மூலம் இராணுவத்தினரையோ அரசியல் தலைவர்களையோ சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல முடியாது என்று நான் தெளிவாக கூறுகிறேன்.

நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. இதனை எதிர்நோக்கவும் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

நாட்டில் நடைபெறும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் போதைப் பொருள் வியாபாரத்திற்கு, மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அனைத்து தரப்பினரின் இணக்கத்துடன் மரண தண்டனை அமுல்படுத்துவது என ஜனாதிபதி தீர்மானித்துள்ளதாகவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். (இ-7)

## பாரிய ஊழல்கள் தொடர்பான அறிக்கை ஒக்டோபரில் ஜனாதிபதியிடம் கையளிப்பு



ரக்னா லங்கா தனியார் பாதுகாப்பு மையம் ஐ.டி.என். மற்றும் நீர்கொழும்பு வாவி ஆகியவற்றில் இடம்பெற்ற பாரிய ஊழல்கள் தொடர்பான விசாரணை அறிக்கை, ஒக்டோபர் கடைசி வாரத்தில் ஜனாதிபதியிடமும் சட்டமா அதிபரிடமும் கையளிக்கப்படவுள்ளது.

பாரிய ஊழல்களை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயலாளர் லெஸ்லி டி சில்வா இந்த தகவலை வெளியிட்டுள்ளார். குறித்த இரண்டு சம்பவங்கள் தொடர்பிலும் விசாரணைகள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளன. இந்த நிலையிலேயே அவற்றை கையளிக்கவுள்ளதாக செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த ஊழல்கள் தொடர்பில் இறுதி விசாரணைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இதனையடுத்து குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்ற விளக்கம் அவர்களிடமே கேட்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## தோல்வியடைந்தவர்கள் நாடாளுமன்றம் சென்று தோல்வியடைந்த பணிகளையே செய்வார்கள்!

### மத்தும பண்டார விமர்சனம்

(கொழும்பு)



தோல்வியடைந்தவர்கள் நாடாளுமன்றம் சென்றால் தோல்வியடைந்த பணிகளையே செய்வார்கள் என அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கத்தின் ஊடாகத் தான் தோல்வியடைந்த விஜித் விஜயமுனி சொய்சா அமைச்சராக நியமிக்கப்பட்டார். தேசிய கொள்கைகளின் அடிப்படையில் இந்த நாட்டை வழிநடத்த வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தேசிய அரசாங்கம் அமைப்பதாக வாக்குறுதி அளித்தனர். இணக்கப்பாட்டுடன்கூடிய அரசாங்கம் என்றால் அதில் பிழையில்லை. எனினும், இன்று பிபில பிரதேசத்தில எனது கட்அவுட்கள் அனைத்தும் உடைக்கப்பட்டு ள்ளன. இதனையே இணக்கப்பாடு என்கின்றோம்.

இந்த இழிவான அரசியலை நிறுத்திக்கொள்ள வேண்டும். தோல்வியடைந்தவர்கள் நாடாளுமன்றம் சென்றால் தோற்கும் வகையிலேயே செயற்படுவார்கள்.

கடந்த காலங்களில் தோற்றால் வெற்றியீட்டியவர்களிடம் அடிவாங்க நேரிடும். எனினும் நாம் தோல்வியடைந்தவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கியுள்ளோம் என ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மொனராகலை படல்கும்புர பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

# நியமனம் வழங்கக்கோரி பட்டதாரிகள் மட்டு. நகரில் ஆர்ப்பாட்டம்

நிரந்தர அரச நியமனங்களில் உள்வாங்க கோரி மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று காலை நடத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு நகரின் காந்தி பூங்கா அருகில் ஒன்றுகூடிய வேலையற்ற பட்டதாரிகள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த காலத்தில் வழங்கப்பட்ட பட்டதாரி நியமனத்தில் உள்ளீர்க்கப்படாதவர்கள் மற்றும் இதுவரையில் நியமனம் வழங்கப்படாதவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.




"வறுமையில் வாடுகின்றோம் தயவுசெய்து அரச தொழில் கிடைக்க குரல் கொடுங்கள்", "பொது நிர்வாக அமைச்சரே ஏன் இந்த மௌனம், மிக விரைவில் நியமனம் வேண்டும்" எங்களுக்கு தற்போது வேண்டியது பட்டதாரி நியமனம் ஒன்றே போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் கவனஈர்ப்பு போராட்டத்தில் ஏந்தியிருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆயிரத்து 400 இற்கும் அதிகமான வேலையற்ற பட்டதாரிகள் உள்ளதாகவும் அவர்களுக்கான நியமனங்களை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என இங்கு கருத்து தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் யு.உதயவேந்தன் தெரிவித்தார்.

தமது பட்டங்களை நிறைவு செய்த பலர் தொழில்பெறும் வயதை கடந்த நிலையில் சென்றுகொண்டுள்ள நிலையிலும் அவர்களுக்கு இதுவரையில் நியமனம் வழங்கப்படாத நிலையே இருந்துவருவதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

தற்போது நிலவும் நல்லாட்சியில் வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் எனவும் அவர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார். தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சி தலைவர் சம்பந்தர், பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர், மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-7)

# அமெரிக்க - கியூபா உறவுக்கு வழிகோலிய போப் பிரான்சிஸ் கியூபா விஜயம்

(ஹவானா)

கியூபா சென்றுள்ள போப் பிரான்சிஸ் அந்நாட்டின் விடுதலை வீரர் பிடல் காஸ்ட்ரோவை சந்தித்து பேசியுள்ளார்.

பிரான்சிஸ் போப்பாக பதவியேற்ற பிறகு, எதிரிகளாக இருந்த அமெரிக்காவும் கியூபாவும் உறவுகளை மேம்படுத்திக்கொள்ள வலியுறுத்தி பல நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார். இதன் காரணமாக இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் முன்னேற்றம் ஏற்பட்டது.

இந்நிலையில் அமெரிக்கா மற்றும் கியூபாவுக்கு பத்து நாட்கள் பயணம் மேற்கொண்டுள்ள போப் பிரான்சிஸ் நேற்று முன்தினம் கியூபா தலைநகர் ஹவானாவில் உரையாற்றினார்.

அப்போது, அமெரிக்கா மற்றும் கியூபா சமாதான நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.



இதேபோல் ஹவானாவின் புரட்சி சதுக்கத்தில் நடந்த கூட்டத்தில் பங்கேற்ற போப், இரு நாடுகளும் நெருக்கமாகி வரும் இந்த நேரத்தில் மக்களுக்காக சேவைகள் செய்ய வேண்டும் என்றும் சித்தாந்தம் சார்ந்ததாக சேவைகள் இருக்க வேண்டும் என்றும் கியூபா மக்களை கேட்டுக் கொண்டார்.

பின்னர் ஜனாதிபதி இல்லத்தில் வசிக்கும் கியூபா விடுதலை வீரர் பிடல் காஸ்ட்ரோவை சந்தித்து கைகுலுக்கினார்.

பின்னர் இருவரும் தற்போதைய நிலவரங்கள் மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்து பேசினர்.

இந்த சந்திப்பின் போது போப் பிரான்சிஸ் தான் கொண்டுவந்திருந்த புத்தகத்தை காஸ்ட்ரோவுக்கு அன்பளிப்பாக வழங்கினார். (3-7)





# பிரதமர் நரேந்திரமோடியின் காலத்தில் இந்தியா பெரும் சக்தியாக பரிணமிக்கும்

## 450 ஆண்டுகளுக்கு முன்பே பிரஞ்சு சோதிடர் கணிப்பு

(புதுடில்லி)

2014ம் ஆண்டு முதல் 2026ம் ஆண்டு வரை மோடி தலைமையில் இந்தியாவில் ஆட்சி நடக்கும். அவரது ஆட்சியில் இந்தியா உலகின் மிகப் பெரிய சக்தியாக உருவெடுக்கும் என 450 ஆண்டுகளுக்கு முன் பிரெஞ்சு நாட்டு ஜோதிடர் நாஸ்டிராடமஸ் தனது ஜோதிட குறிப்பில் எழுதி வைத்துள்ளார் என்று இந்திய ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

பிரெஞ்ச் நாட்டு ஜோதிடர் நாஸ்டிராடமஸ். இவர், 1555ம் ஆண்டு வருங்காலத்தில் உலகில் நடக்கப் போகும் பல முக்கிய நிகழ்வுகள் குறித்து ஜோதிட கணிப்பை எழுதி வைத்துள்ளார். பிரெஞ்ச் மொழியில் எழுதப்பட்ட அந்த ஜோதிட குறிப்பு புத்தகத்தின் 32 மற்றும் 33 ஆம் பக்கங்களில் இந்தியா குறித்து அவர் எழுதியுள்ளார். நாஸ்டிராடமஸ் எழுதிய ஜோதிட குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"பொறுத்திருங்கள். இராமராஜ்யம் வரப் போகிறது. நடுத்தர வயதுடைய அதீத ஆற்றல் கொண்ட மனிதர் ஆட்சிக்கு வருவார். அவரது ஆட்சி காலம், இந்தியாவிற்கு மட்டுமல்ல உலகம் முழுவதற்கும் பொற்காலமாக திகழும். அவரது சனாதன தர்மத்தால் இந்தியா மிகச் சிறந்த இந்து நாடாக மாறும். ஆரம்பத்தில் பலரும் அவரை வெறுத்தாலும், பின்பு அவரை தங்களின் தலைவராக ஏற்றுக் கொள்வார்கள். அவரது தலைமையில் இந்தியா "குளோபல் மாஸ்டர்" ஆக மட்டுமின்றி, பல நாடுகளுக்கும் இந்தியா புகலிடமாக மாறும்". இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஊழல் காரணமாக 2014 லோக்சபா தேர்தலில் காங்கிரஸ் ஆட்சி வீழ்ச்சி அடையும். 2014 முதல் 2026 வரை மோடி ஆட்சி நடைபெறும். வாஜ்பாய், அத்வானி, மோடி ஆகியோர் பா.ஜ.க.வின் 3 தூண்களாக திகழ்வார்கள். அவர்களில் மோடி, மிகப் பெரிய ஆற்றல் வாய்ந்தவராக திகழ்வார். அவரது ஆட்சியில் படிப்படியாக இந்தியாவில் மாற்றங்கள் நிகழும். அண்டை நாடுகளான பாகிஸ்தான், சீனா நாடுகளுடனான பிரச்சினை, காஷ்மீர் பிரச்சினை ஆகியவற்றையும் தீர்ப்பார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாஸ்டிராடமஸ் தனது ஜோதிட கணிப்பு புத்தகத்தில் ஹிட்லரின் ஆட்சி வீழ்ச்சி அடைவது, ஒபாமா அமெரிக்காவின் ஜனாதிபதி ஆவது, அமெரிக்காவின் இரட்டை கோபுரங்கள் செப்டம்பர் 11ம் திகதி இடிக்கப்பட்டது, பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட பல முக்கிய வரலாற்று நிகழ்வுகள் குறித்தும் எழுதி வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# 3000 ஐ.எஸ் தீவிரவாதிகள் பிரிட்டனுக்குள் ஊடுருவல்

## பாதுகாப்பு அமைப்பு எச்சரிக்கை

(லண்டன்)

பிரித்தானியாவில் தாக்குதல் நடத்துவதற்காக 3000க்கும் மேற்பட்ட ஐ.எஸ். தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரித்தானியாவை சேர்ந்த பாதுகாப்பு அமைப்பு ஒன்று தனது தீவிரவாத தாக்குதல் தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், 3000க்கும் மேற்பட்ட ஐ.எஸ். தீவிரவாதிகள் பிரித்தானியாவில் பதுங்கியுள்ளதாகவும் அவர்கள் மாபெரும் தாக்குதல் நடத்த தயாராக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் MI5 மற்றும் தீவிரவாத தடுப்பு பொலிஸார் பிரித்தானியாவை சுற்றியுள்ள தீவிரவாத அச்சுறுத்தல்கள் குறித்து உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளில் பெரும்பாலானோர் லண்டன் நகரில் வசித்து வருகின்றனர்.

எனினும் மான்செஸ்டர், மேற்கு மிட்லாண்ட பகுதிகளிலும் அவர்கள் கணிசமாக இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இதுவரை இல்லாத அளவில் பயங்கரமான தாக்குதலை நடத்த அவர்கள் திட்டமிட்டு வருவதாக பாதுகாப்பு அமைப்பை சேர்ந்த ஒரு அதிகாரி தெரிவித்துள்ளார். (3-7)

# மேலும் 10 ஆயிரம் அகதிகள் ஹங்கேரியை சென்றடைவு

(புடாபெஸ்ட்)

செர்பிய எல்லையை மூடிய ஹங்கேரிக்கு குரோஷியா வழியாக அகதிகள் சென்றடைந்துள்ளனர்.

தீவிரமடைந்து வரும் குடியேறிகள் விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு இடையில் முறுகல் வலுத்து வரும் நிலையில் கடந்த சனிக்கிழமை மாத்திரம் ஆஸ்திரியாவுக்கு 10 ஆயிரத்துக்கும் அதிகமான குடியேறிகள் வந்தடைந்துள்ளனர்.

குரோஷியா தனது நாட்டுக்குள் நுழைந்த குடியேறிகளை ஹங்கேரிக்கு அனுப்பியிருப்பதோடு ஹங்கேரி அவர்களை ஆஸ்திரியாவுக்கு அனுப்பியுள்ளது.

குரோஷியா குடியேறிகளை பதிவு செய்யாததன் மூலம் அது விதிகளை மீறியிருப்பதாக ஹங்கேரி குற்றம் சாட்டிய போதும் ஹங்கேரியும் தனது நாட்டுக்குள் வந்த குடியேறிகளை பதிவு செய்ய தவறி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

இதனிடையே கிரீஸ் நாட்டு கடலுக்கு அருகில் மற்றுமொரு தஞ்சப் படகு மூழ்கியதில் 26 பேர் காணாமல் போயுள்ளனர்.

கிரீஸின் லெஸ்போஸ் தீவுக்கு அருகில் மூழ்கிய இந்த படகில் இருந்து 20 பேரை கரையோர படையினர் காப்பாற்றிய போதும் குறித்த படகில் 46 பேர் இருந்துள்ளனர். (3-7)

# ஐ.எஸ். தீவிரவாதிகளை உருவாக்கியது பிரித்தானியாவும் அமெரிக்காவும்தான்

## பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(லண்டன்)


ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை மேலும் வலுவான சக்தியாக உருவாவதற்கு பிரித்தானியாவும் அமெரிக்காவும் தான் காரணம் என பிரித்தானிய எதிர்க்கட்சி தலைவர் பகிரங்க குற்றச்சாட்டை எழுப்பியுள்ளார்.

பிரித்தானிய எதிர்க்கட்சியாக தொழிலாளர் கட்சியை சேர்ந்த ஜெரிமி கார்பியன் கடந்த வாரம் தெரிவு செய்யப்பட்டார்.

பிரித்தானிய நாட்டில் நிலவி வரும் பொருளாதார பிரச்சினைகள் குறித்து பல்வேறு வாதங்களை முன்னிறுத்தி வரும் ஜெரிமி அண்மையில் தொலைக்காட்சி ஒன்றிற்கு பேட்டி அளித்துள்ளார்.

அதில், ஐ.எஸ். தீவிரவாதிகள் உருவாவதற்கு மேற்கத்தேய நாடுகளான அமெரிக்காவும் பிரித்தானியாவும்தான் முழுக்காரணம் என பகிரங்கமாக குற்றச்சாட்டு சுமத்தியுள்ளார்.

மேலும், மேற்கத்தேய நாடுகளின் இலட்சக்கணக்கான டொலர்கள் மற்றும் ஆயுதங்கள் அனைத்தும் இறுதியில் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்திற்குதான் சென்றடைகிறது.



ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது பயங்கர ஆயுத தாக்குதல் நடத்துவதில் தனக்கு உடன்பாடு இல்லை. தீவிரவாதிகளை தாக்குவதன் மூலம் அவர்களை மேலும் வலுப்பெற செய்யும் காரியத்தில் தான் மேற்கத்தேய நாடுகள் ஈடுபட்டுள்ளன.

பிரித்தானிய மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் எனில் அதனை மனித உரிமைகளை காப்பதில் மட்டுமே சாதிக்க முடியும்.

ஐ.எஸ். தீவிரவாதிகளை முடக்க வேண்டும் என்றால் அந்த இயக்கத்தை பொருளாதார ரீதியில் தனிமைப்படுத்த வேண்டும். பின்னர், சிரியா உள்ளிட்ட நாடுகளில் உள்ள குர்து இனத்தவரை ஒன்றிணைப்பதுடன் தீவிரவாதத்தை தடுக்க முடியும் என ஜெரிமி கருத்து தெரிவித்துள்ளார். (3-7)

# அவுஸ்திரேலியாவின் முதல் பெண் பாதுகாப்பு அமைச்சர்

(கான்பெரா)

அவுஸ்திரேலியாவில் கட்சியின் செல்வாக்கை இழந்ததையடுத்து பிரதமர் டோனி அப்போட் கடந்த வாரம் பதவியை இழந்தார். புதிய பிரதமராக அவரது அமைச்சரவையில் தகவல் தொடர்பு அமைச்சராக இருந்த டர்ன் புல், கடந்த 15ஆம் திகதி பதவி ஏற்றார்.

இந்த நிலையில் 21 பேரை கொண்ட புதிய அமைச்சரவையை நேற்று முன்தினம் அவர் அறிவித்தார். இதில் அவர் பெண்களுக்கு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளார். இதற்கு முன்பு டோனி அப்போட் அமைச்சரவையில் 2 பெண்கள் மட்டுமே இடம் பெற்றிருந்தனர். இப்போது பிரதமர் டர்ன் புல் அமைச்சரவையில் இந்த எண்ணிக்கை 5 ஆக உயர்ந்துள்ளது.

இராணுவ விவகாரங்களுக்கான அமைச்சராக மரிசே பெய்ன் என்ற பெண் நியமிக்கப்பட்டுள்ளார்.



இவர் அந்த நாட்டின் முதல் பெண் இராணுவ அமைச்சர் என்ற பெயரை பெறுகிறார்.

முந்தைய அமைச்சரவையின் இடம் பெற்றிருந்த பெண்கள் ஜூலி பிஷப்பும், சூசன் லேயும் பதவியை தக்க வைத்துக்கொண்டுள்ளனர்.

மேலும் மிச்செலியா கேஷ், கெல்லி ஓ டேவ்யர் என்ற பெண்களுக்கும் அமைச்சர் பதவி அளிக்கப்பட்டுள்ளது. புதிய அமைச்சர்கள் நேற்று திங் கட்கிழமை பதவி ஏற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)



# ஈழத்துச் சிதம்...

# மூதறிஞர் பண்டிதர் கலாநிதி சிவத்திரு.க.வை...

# (22.09.1916-25.04.2015) 100 ஆவது அகவை...

### சைவத்துக்கும் தமிழுக்கும் சம்ஸ்கிருதத்துக்கும் பெரும் தொண்டாற்றியவர்



தேசாபிமானம் பாஷாபிமானம் குலாபிமானம் சமயாபிமானம் வம்சாபிமானம் மிகுந்து விளங்கிய காரைமாநகரில் எமது அபிமானங்களைக் காத்தும் கடந்தும் தொடர்ந்து பணியாற்றி நூற்றாண்டைக் கண்டவர் எமது மதிப்பிற்குரிய அண்ணா சிவஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்கள் வைத்தீசுவரக்குருக்கள்.

இவர் சைவத்திற்கும் தமிழுக்கும் சம்ஸ்கிருதத்திற்கும் எழுபத்தைந்து ஆண்டுகளாக பெரும் தொண்டாற்றியவர். இப் பெருந்தகையின் மறைவு எமக்கு பேரிழப்பாகும். எங்கெல்லாம் கும்பாபிஷேகம் நடைபெற்றாலும் அருள் ஆசிகள் வழங்கி எம்மை மகிழ்வித்தமை இன்றும் எம் மனக்கண் முன் தோன்றுகிறது. ஈழத்து சிதம்பரமாம் சிவன் கோவில் நடேசப் பெருமானுக்காகப் பல நூல்களை எழுதி வெளியிட்ட பெருமைக்குரியவராகிறார். அன்னார் நூல்களை மீளமீள வாசித்து எம்மனதில் என்றென்றும் நினைவு கொள்வோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சிவஸ்ரீ நா.ஞானசம்பந்த சிவாசாரியார்
முத்துமாரி அம்மன் கோயில், மணற்காடு, காரைநகர்.

### சூரிய சந்திரர் உள்ளவரை வாழும் தகுதியுடைய சான்றோன்



காரைத்திருவூர் தந்த கலங்கரை விளக்கு பண்டிதர், கலாநிதி. க. வைத்தீசுவரக் குருக்களின் நூற்றாண்டு விழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். நடமாடும் அறிவுக் களஞ்சியமாக எம்மண்ணில் வாழ்ந்த உத்தமரை நீள நினைந்து வணங்குகிறேன். அமைதியாக சமூகத்தை ஆற்றுப்படுத்திய இப் பெருமகன் எம்மண்ணில் சாதித்தவை ஏராளம். மணிவாசகர் சபையை அமைத்து. திருவாசகம் எனும் தேனை சமூகம் உணர வைத்தவர். பலரது கல்வி வாழ்வை உயர்த்தி வைத்தவர்.

இந்திய அறிஞர்கள் பலரை எம்மண்ணுக்கு அழைத்து அறிவுலகை வளர்த்தவர். பல நூல்கள் ஆவணமாக வெளிவர வித்திட்டவர். மண்ணிலே தெய்வமாய் வாழ்ந்த புனிதரின் ஆசியைப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள். இப் பெருந்தகையின் அருளும் ஆசியும் என் வாழ்வில் கிடைத்தமை முன்வினைப்பயனே. சூரிய சந்திரர் உள்ளவரை வாழும் தகுதியுடைய சான்றோனை அகத்திலிருத்தி வாழ்த்தி வணங்குகிறேன்.

கலாநிதி ஆறு.திருமுருகன்
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

### ஆறுமுகநாவலரின் கொள்கைகளை வழிமொழிந்தவர்



சிவநேயச் செல்வர்களே.காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் சிவகுலத்தின் குருத்துவ பாரம்பரியத்தில் தோன்றிய சிவஸ்ரீ. வைத்தீசுவரக் குருக்களின் நூற்றாண்டு மலர் வெளிவருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். தமிழினத்தின் சைவ பாரம்பரியத்தை அனைவரும் வாழ்வில் கைக்கொள்ள வேண்டும் என்பதை தானும் வாழ்ந்து காட்டிய வேத சிவாகமங்களுக்கு முன்னுரிமை கொடுப்பது போன்று திருமுறைகள். சைவ சித்தாந்தம் ஆறுமுகநாவலரின் கொள்கைகளை வழிமொழிந்து எல்லோருடைய சிந்தனைக்கும் உரிய மணிவாசக சபையை உருவாக்கி. அறிஞர் பெருமக்களை வரவழைத்து அவர்கள் ஆற்றுகின்ற உரையினூடாக அனைத்து தமிழ் மக்களையும் சிந்தனைக்கு ஆளாக்கிய பெருமை குருக்கள் அவர்களையே சாரும். குருக்களுடைய பெருமையை எழுத்தில் வடிப்பது மிகக் கடினம். அதனாலேயே குருக்களை நடமாடு பல்கலைக்கழகமாக வாழ்ந்து வழிகாட்டியவர் என்பர். குருக்களுடைய சிறப்புக்களை ஆவணப்படுத்தி நூலாக வெளிக்கொணர்வது வரும் சமுதாயத்திற்கு நாங்கள் செய்கின்ற பேருதவியாகும். இப்பணியை செய்கின்ற அனைத்து உள்ளங்களையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

### தோன்றில் புகழொடு தோன்றுக



"தோன்றில் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவரின் வாக்கமைய ஈழத்துச் சிதம்பரத்தை தனதாக்கி தொண்டு புண்ணியப்பதியாகிய காரைநகரில் சிவஸ்ரீ. க. கணபதீஸ்வரக்குருக்கள் சிவகோசுந்தராம்பாள் தம்பதிகளுக்கு கனிஷ்ட புத்திரனாகத் தோன்றியவரே சிவஸ்ரீ. க. வைத்தீசுவரக்குருக்களாவர். "பெருமைக்கும் ஏனை சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" என்ற குறளோவியத்திற்கு ஏற்ப ஆசிரியராக அதிபராகப் பணியாற்றிய குருக்கள் அவர்கள் ஈழத்துச் சிதம்பரம் உயர்நிலையை... காரை மாநகர் பெருமைபெற வைக்க... தமிழும் தழைக்க. சமூகம் உயர்வுபெற அருந்தொண்டாற்றிய பெருமகனாவார். செயற்கரிய செயலை செய்த காரணத்தால் தத்துவகலாநிதி, மூதறிஞர், கலைஞானகேசரி ஆகிய பல பட்டங்கள், விருதுகள் அவரை நாடி வந்தன. ஒருவர் நூறாண்டு காலம் வாழ்வது பெருமையல்ல. தம் வாழ்நாளில் மக்கள் பணிசெய்து வாழ்வதே பெருமையுடையதாகும். நூற்றாண்டைப் போல வரையும் வாழ்ந்து என்கடன் பணிசெய்து கிடப்பதே என்று தொண்டாற்றியவர். காரைநகரின் ஈழமணித் திருநாட்டின் வழிகாட்டியாக விளங்கிய மூதறிஞர் சிவஸ்ரீ. க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களின் நூறாவது அகவையை நினைவுகூர்ந்து அமரர் அவர்களுக்கு சிறப்பிதழ் வெளியிடுவதையிட்டு எமது மணிவாசகர் சபை பெரிதும் மகிழ்கின்றது.

எம். எஸ். வேலாயுதபிள்ளை
தலைவர்,
காரைநகர் மணிவாசகர் சபை.

### குருமாரின் ஆசி பெற்ற கோமான்



திண்ணபுரக் கூத்தபிரான் சேவடி சேர்ந்த சிவஸ்ரீ வைத்தீசுவரக் குருக்கள் எனது மாமனார் ஆவார். அவருடைய மறைவு எனக்குப் பேரிழப்பு. ஈழத்துச் சிதம்பர ஆலயத்தில் கண்ணும் கருத்துடன் வாழ்ந்த எனது மாமனார் ஆலய வளர்ச்சி தொடர்பாக என்னுடனும் ஆதீன கர்த்தாக்களுடனும் அடிக்கடி பேசிக் கொள்வார். எனது மாமனார் இலங்கையில் ஒரு தமிழ்ச் சான்றோனாகத் திகழ்ந்திருக்கிறார். இதற்கு காரணம் அவருக்கு வாய்த்த குருமார்களே ஆகும்.

அவர் தந்தையார் கணபதீஸ்வரக்குருக்களின் ஆசீர்வாதத்துடன் காரைநகர் ச. பஞ்சாட்சரக்குருக்களிடம் ஆரம்பக் கல்வியைப் பயின்றவர். பின்னர் மகாவித்துவான் சி. கணேசையாவிடம் தமிழ் இலக்கணத்தை தெளிவுறக் கற்றார். இதனால் அவரின் தமிழ்ப்பணியும் சமயப்பணியும் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி வளர்ந்து வந்தன. அதன் நல்ல இரண்டு கனிகளாக பால சங்கநூற் செல்வர் சு. அருளம்பலவாணரும் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் விளங்கினார்கள் என்பது எவராலும் மறைக்கவும் மறுக்கவும் முடியாதது. இப்படியாக நற்பணிபுரிந்த அமரர் ஒருநாளாவது மேடையில் ஏறிப் பேசியதை நான் காணவுமில்லை கேட்டதுமில்லை. தனது கருத்துக்களை மற்றவர் மூலமாக மேடைக்குக் கொண்டுவந்து பல பேச்சாளர்களை உருவாக்கிய பெருமையும் இவரையே சாரும். இவரது பணிகள் ஒவ்வொன்றையும் ஆய்வுசெய்து நூல் ஒன்று ஆக்கி வருங்கால சந்ததிக்கு வழங்கினால் மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கும் என்பது திண்ணம். அவரது ஆத்மா திண்ணபுரக் கூத்தபிரான் சேவடியில் நிலைக்கப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

சிவஸ்ரீ. வி. ஈஸ்வரக்குருக்கள்
ஈழத்துச் சிதம்பரம், காரைநகர்.

### தமிழ் கூறும் நல்லுலகால் நினைவுபடுத்தப்படுபவர்



இலங்கைத் திருநாட்டிலே சைவத்திற்கும் தமிழுக்கும் அரும் பணியாற்றியோர் வரிசையில் கலாநிதி வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றார். அவரது சேவையினை அறிஞர்கள் பல்வேறு வகையில் விளக்குவது அவரது சிறப்பினை தமிழ் கூறும் நல்லுலகால் நினைவுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றார் என்பதனையே புலப்படுத்துகின்றது. வைத்தீசுவரக் குருக்கள் ஐயா அவர்கள் 1940 களில் மணிவாசகர் சபையை ஆரம்பித்தபோது யோகர் சுவாமிகளால் "வேண்டத்தக்கறிவோய் நீ வேண்ட முழுதுந் தருவோய் நீ" என்ற திருவாசக வரிகளை கூறியதாக அறியக் கூடியதாக உள்ளது. இவ்வாறு ஞானிகளின் வாழ்த்துக்களும் ஆசிகளும் நிரம்ப கைவரப் பெற்ற சிறப்புக்குரியவர். இவ்வாறான சிறப்புக்களை பெற்றிருந்த வைத்தீசுவரக்குருக்கள் ஐயாவின் பணியைப் பாராட்டும் முகமாக நூற்றாண்டுவிழா மலர் வெளியீடு செய்யப்படுவது நாம் அவருக்கு செய்யும் பெருமதிப்புக்கும் அன்புக்கும் பாத்திரமாகின்றது. மலர் சிறக்கவும் மலரை வெளியிட உழைத்த அத்தனை உள்ளங்களுக்கும் எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்து மனம் மகிழ பாராட்டி வாழ்த்துகின்றேன்.

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலாளர், யாழ் மாவட்டம்.

### எண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி நின்ற பெருமகனார் திசைநோக்கி வணங்குகின்றேன்



ஈழத்திருநாட்டின் முதுபெரும் சிவாசாரிய பெருமகனாரும், அளப்பரிய தமிழ் அன்பு மிக்காரும், சிவாசாரிய குலதிலகமாகத் திகழ்ந்தவரும், தாய்த் தமிழகச் சைவத் தமிழ் அறிஞர்கள் பால் பேரன்பும், பெருமதிப்பும் கொண்டிருந்தவருமாகிய கலாநிதி. சிவஸ்ரீ. க. வைத்தீசுவரக்குருக்கள், நூறாவது அகவையைப் பூர்த்தி செய்வதற்குச் சில நாட்கள் மட்டுமே எஞ்சியிருந்த நிலையில்,

"எண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி அண்ணலார் சேவடிக்கீழ்." "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்" என்ற பெருவிருப்போடு சென்று நண்ணினார் என்பதறிந்து நெஞ்சம் நைந்தேன். "எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர் தாம் விரும்பும் உண்மையாவது பூசனை" என்பதை நன்குணர்ந்து "முப்போதும் திருமேனி தீண்டுவார்" திருமரபான சைவ ஆசாரியார் திருமரபில் உத்தரகோசமங்கை பூசகர் மரபில் யாழ் மண்ணை மிதித்து சிவமணம் கமழச் செய்த அந்த இமயமனைய புகழாளருக்குத் திசைநோக்கி வணங்கி என் இதய அஞ்சலியைச் செலுத்துகின்றேன்.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்பார் ஔவையார். அதனினும் அரிது எம்பெருமான் சிவனின் திருமேனி தீண்டிப் பூசிக்கும் மரபில் பிறப்பது. "முப்போதும் திருமேனி தீண்டுவார்" எனச் சுந்தர மூர்த்திகள் அருளிய புண்ணியமரபில் உதித்த கலாநிதி. சிவஸ்ரீ. க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள் சமயம், மொழி, கலாசாரம் மற்றும் ஏனைய துறைகளில் ஆற்றிய பணிகள் தனியே ஆராயத்தக்கன. எம் தாய்த் தமிழ்நாட்டின் பெருமைமிக்க சிவாசாரியார் திருமரபில் வந்த திருநாவலூரர், அருணந்தி சிவாசாரியார் போன்றோர் வரிசையில் வைத்துப் போற்றப்படப்போகும் ஐயா அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ஈழத்து முன்னணி நாளேடுகளில் ஒன்றாகிய 'வலம்புரி' சிறப்புமலர் ஒன்றை 22.09.2015 அன்று வெளிக்கொணரவிருப்பது மகிழ்ச்சி தருகிறது. ஐயா அவர்களின் பிரிவால் வாடும் ஈழத்துச் சைவத் தமிழ் அன்பர்களோடும், அன்னார் குடும்பத்தாரோடும் அன்னார் துயரில் எளியேனும் பங்கேற்று அஞ்சலிக்கின்றேன்.

செந்தமிழ்வாரிதி கலைமாமணி பேராசிரியர் இரா. செல்வக்கணபதி, சென்னை, தமிழ்நாடு.

தலைமைப் பதிப்பாசிரியர் சைவ-சமயக் களஞ்சியம் (10தொகுதிகள்)

**சிறப்பு மலர் வெளியீடு -**
**கணபதீஸ்வரக்குருக்கள் நூலகம், வியாவில்,**
**காரைநகர்**
**அனுசரணை**
**கஜமுகன் ஹாட்வெயர்,**
**வியாவில் ஐயனார் தேவஸ்தானம்**
**மா.கனகசபாபதி, சிவன்கோவிலடி, காரைநகர்**
**ஆ.செந்தில்நாதன், சடையாளி காரைநகர்,**
**பிரம்மஸ்ரீ சா.கோபாலசர்மா, கந்தரோடை,**
**விஜயகலா மகேஸ்வரன் பா.உ**

### பண்டிதர் கலாநிதி க.வைத்தீசுவரக் குருக்கள்



காரைநகர் ஈன்றெடுத்த அந்தணப் பேரறிஞர் கலாநிதி க. வைத்தீசுவரக் குருக்கள் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தான ஸ்தானீக பரம்பரையில் வந்தவர். இவர்களுடைய முன்னோர்கள் தமிழ்நாடு உத்தரகோசமங்கை திருத்தலத்தின் சிவாசாரியர்களாக பணியாற்றி வியாவில் ஐயனார் கோயிலுக்கு நித்திய, நைமித்திய கிரியைகள் செய்ய குளக்கோட்டு மன்னனால் 1518 இல் காரைநகருக்கு அழைக்கப்பட்டவர்கள். இவர் தம் வாழ்நாளில் தமிழுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது. ஆசிரியராகப் பணியாற்றினாலும் ஏராளமான தமிழ் ஆக்கங்களுக்கும் ஆசிரியராக விளங்கியிருக்கிறார். தினகரன் நாளிதழிலும் பணியாற்றியிருக்கிறார். சுன்னாகம் சதாசிவ பிராசீன பாடசாலையில் சமஸ்கிருதம் பயின்றவர். மணிவாசகர் சபை நடத்தும் மணிவாசகர் விழாவிற்கு மூலகர்த்தாவாகத் திகழ்ந்தவர். இவர் தம் அருமை சொல்லில் அடங்காது. அவர்களது 100 ஆவது அகவையை நினைவுகூரும் முகமாக மலர்வெளியிடுவது போற்றுதற்குரியது. சிவஸ்ரீ. வைத்தீசுவரக் குருக்களின் பாதம் பணிந்து மலர் வெளியீட்டு விழா சிறப்புற ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள்
காயத்திரி பீடம், தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்.

### நமது காலத்தின் சிறந்த புலமையாளர்



சங்ககாலத்திலிருந்து, தற்காலம் வரை யாழ்ப்பாணம் தலைசிறந்த புலவர்களாலும், சித்தர்களாலும் பெருமை பெற்றது. புதிய இலக்கியப் பனுவல்களைப் படைத்தும், பண்டைய இலக்கியங்களை மீளப்பதிப்பித்தும், ஈழத்துப் புலவர்கள், தமிழ் வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றியுள்ளனர். அந்த வரிசையிலேயே, நமது காலத்தில் வாழ்ந்து அண்மையில் அமரத்துவம் அடைந்த, பண்டிதர், கலாநிதி க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களும் சிறந்த புலமையாளராகக் கணிக்கத்தக்கவராகிறார்.

தமது வாழ்நாள் முழுவதும் மணிவாசகர் பெருமையைப் பரப்புவதிலும், தமிழுக்கு தொண்டாற்றுவதிலுமே எண்ணம் கொண்டிருந்தவர் குருக்கள் ஐயா அவர்கள். சீரிய சிந்தனையும், ஆழ்ந்த புலமையும் ஆன்மீகப் பற்றும் அவரது சொத்துக்களாக அமைந்தன. ஒரு நூற்றாண்டுக்கு அண்மிய காலம் வரை வாழ்ந்து அமரத்துவமடைந்த ஐயா அவர்கள், தமிழறிஞராக, சைவப்பற்றாளராக, சமூகப்பணியாளராக, நூற்பதிப்பாளராக, நிறுவனங்களைத் தோற்றுவித்து வளர்த்தவராக பல்துறை ஆளுமை கொண்ட ஒரு சான்றோராக வாழ்ந்து மறைந்தவர்.

தமது அறிவும், புலமையும், வித்துவமும், தமிழுலகிற்கு பயன்பெற வேண்டும் எனும் நோக்கிலே கணந்தோறும் கருதி வாழ்ந்த ஐயா அவர்கள் தமது தூல உடலை நீத்தாலும், அவர்தம் பதிப்பு நூல்களால் நிலை பெற்றுள்ளார். அன்றியும் தமது வாழ்நாளில் சேகரித்த கிடைத்தற்கரிய பல நூல்களையும் சஞ்சிகைகளையும் தமது தந்தையார் பெயரில் அமைக்கப்பெற்ற வியாவில் கணபதீஸ்வரக்குருக்கள் நூலகத்திற்கு வழங்கி தம் நாமம் நிலைக்க நித்தியமாக வாழ்கிறார் என்பது நிதர்சனமான உண்மையாகும்.

திருமதி சாந்தி நாவுக்கரசன்,
செயலாளர், நிதி இராஜாங்க அமைச்சு.

### தமிழ்கூறும் நல்லுலகிற்கும் ஈடுசெய்ய முடியாதவர்



வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தின் அறப்பணிகளுக்கும், திருப்பணிகளுக்கும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கி எம்மை ஊக்கப்படுத்தி உற்சாகமாகச் செயற்பட வைத்தவர் அமரர். கலாநிதி பண்டிதர் க. வைத்தீசுவரக்குருக்கள். அவரது தந்தையாரது ஞாபகார்த்தமாக சுமார் 65 இலட்சம் ரூபா செலவில் கணபதீஸ்வரக்குருக்கள் நூலகத்தை ஐயனார் ஆலய வளாகத்தில் அமைத்த போது தான் வாழ்நாளில் சேகரித்துப் பாதுகாத்து வந்த பெறுமதிமிக்க அரிய நூல்களை அன்பளிப்பாகத் தந்துதவியவர். இறப்பதற்குச் சில தினங்களுக்கு முன்பாக தன்னிடமுள்ள ஏனைய நூல்களையும் சோமுவிடம் கொடுக்கும் படி பிள்ளைகளிடம் கூறியுள்ளார். இறுதியாகத் தொலைபேசியில் என்னுடன் உரையாடும்போது "சோமசேகரம் நீ ஏதோ கட்டப்போகிறாய் கட்டப்பா" என்று ஆசி வழங்கினார். அவரது ஆசியுடன் ஐயனார் தேவஸ்தான முன்றலில் மணிமண்டப வேலைகள் நிறைவடைந்துள்ளன. குருக்கள் ஐயா 25 வருடங்களுக்கு மேலாக தமிழகத்து மற்றும் உள்நாட்டு அறிஞர்களிடம் இருந்து சேகரித்த அருமையான 57 கட்டுரைகளை "சைவக்களஞ்சியம்" என்ற அருமையான நூலாக வியாவில் ஐயனார் தேவஸ்தானம் 2013 இல் வெளியிட்டு பெருமை பெற்றது. அந்நூலில் அடியேனைத் "தொண்டின் அவதார புருஷர் மகாராணி" என்று பாராட்டிப் பெருமைப்படுத்தியவர். அவரது மறைவு காரைநகர் மக்களுக்கும், தமிழ்கூறும் நல்லுலகிற்கும் ஈடு செய்யமுடியாத இழப்பு. அவரது பிள்ளைகளுக்கும், உறவினர்களுக்கும் ஆறுதல்கூறி அவர்பணி தொடர பெருமானை வேண்டி நிற்கிறேன்.

கலைஞானகேசரி. க. சோமசேகரம், அறங்காவலர்.
வியாவில் ஐயனார் தேவஸ்தானம்

### எனது ஆத்மீக குரு



எனது ஆத்மீகக் குரு அமரர். க. வைத்தீசுவரக்குருக்கள் ஆவார்கள். 1982 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கம்பன் விழா அடியேனை அவருடன் இணைத்தது. விழாவில் எனது பேச்சுக்கேட்டு அவரால் எமக்கு எழுதப்பட்ட கடிதம் எம்மை மிக நெருக்கமாக்கியது. ஐயா காரைநகரில் இருந்த வேளையில் அவரைச் சந்திப்பதும் [illegible] சந்தேகம் தெளிதலும் நடைபெற்று வந்தது. [illegible]

ஐயா சைவத் தமிழ் உலகுடன் ஆத்மார்த்தமாக இருப்பார் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இறைவனுடன் தில்லைக்கூத்தனுடன் இரண்டறக் கலந்துள்ள அவரை மானசீகமாக வணங்குகின்றேன்.

"சொல்லின் செல்வர்" இரா. செல்வவடிவேல்

### தாயிற் சிறந்த தயாவான தத்துவன்



என்னுடைய சிறுபராயத்திலிருந்தே ஐயா அவர்களை நன்கு அறியும் வாய்ப்புப் பெற்றேன். இப்போது திருவடியாகி வீற்றிருக்கும் ஐயா அவர்களுடன் நெருங்கிப் பழகும் பேறு உற்றேன். ஐயா அன்னையிலும் மிக இனியவர். ஆருயிருக்கு உறுதுணைவன் இனி என்ன குறை. அவர் ஒரு ஞானி நெருங்கிப் பழகியவர்களுக்கு நன்கு தெரியும்.

வே. சிவகுருநாதன், செயலாளர், மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம், காரைநகர்.

# சிதம்பரம்
# க.வைத்தீசுவரக் குருக்கள் அவர்களின்
# அகவையை நினைவு கூரும் சிறப்புமலர்-22.09.2015





அருளாளர்கள் வாழ்ந்து காட்டிய நெறியில் நின்றவர்

சிவத்தமிழ் வித்தகர் பண்டிதமணி தத்துவ கலாநிதி சிவத்திரு. க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள் 22.09.2015 இல் அகவை 99 நிறைவு அகவை 100 தொடங்குவார். ஐயா அவர்கள் கனடா சைவசித்தாந்த மன்றக் காப்பாளர்களில் ஒருவராகவும் "அன்புநெறி" சிறப்பாசிரியர்களில் ஒருவராகவும் விளங்கி மன்றத்தின் பணிகள் சிறப்புற நடைபெற்றுவர ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் சைவசமயக்குரவர் பாடசாலையின் வளர்ச்சியில் ஊக்குவிப்புக்களும் அளித்து வந்தவர். மன்றமும் சைவசமயக்குரவர் பாடசாலையும் இணைந்து நடத்திவரும் திருவருட் செல்வர் விழா திருவாதிரை - திருவாசக விழாக்கள் என்பவற்றுக்கெல்லாம் அவ்வப்போது அருளாசி உரைகளும் கட்டுரைகள் எழுதியும் நன்மையான கட்டுரைகளைத் தேடி அளித்தும் மற்றும் சிறந்த நூல்களையும் எமக்கு அளித்து பெருமையும் உயர்வும் அளித்த பெருமகனாவார்.

கலாநிதி. சிவத்திரு. க. வைத்தீசுவரக்குருக்கள் நினைவாக வெளியிடப்படவுள்ள நூற்றாண்டு மலர் அவர் ஆற்றிய சீரிய பணிகளைப் போற்றிப் பரவுவதாயும் அவர் வாழ்வின் குறிக்கோள் அவர் எழுதிய நூல்கள் பதிப்பித்த நூல்கள் பற்றிய முழுமையான தகவல்களையும் எடுத்தியம்பும் தமிழ்க் களஞ்சியமாக அமையவும் வேண்டி ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை உடனுறை சுந்தரேஸ்வரப் பெருமானை மனம் மொழி மெய்களால் வணங்கி இம்மலர் என்றும் நின்று நிலவும் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இப்பணியில் அனைவரும் ஈடுபட திருவருளை வேண்டி அமைகின்றேன்.

அன்பே சிவம்.

சிவநெறிச் செல்வர் தி. விசுவலிங்கம்

தலைவர், கனடா சைவசித்தாந்த மன்றம், நிர்வாக ஆசிரியர், அன்புநெறி.



**நடமாடும் கலைக்களஞ்சியம்**

...திகழ்ந்திருக்கும் செந்தண்மை பூண்டொழுகிய அந்தணப் பெருந்தகையும் நம் மத்தியில் வாழ்ந்த நடமாடும் நூலகமாக அறிவுக்களஞ்சியமாக விளங்கிய வரு... கலாநிதி க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களது 100 ஆவது பிறந்த தின நினைவு கூரும் இன்றைய நன்னாளில் வெளி வரவுள்ள வலம்புரி சிறப்பு மலருக்கு ஆசிச் செய்திகளை வழங்கிய வணக்கத்திற்குரிய ...ர்களுக்கும் ...மார்களுக்கும் சிறப்புச் செய்திகளால் நினைவு கூர்ந்த ...களுக்கும் அனுசரணை வழங்கிய ஐயாவின் அன்பர்களுக்கும் வணக்கத்தையும் ...யும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

...வியாவில் ஐயனார் தேவஸ்தான வெளியீடாக மலரவுள்ள கலாநிதி க. வைத்தீசுவரக்குருக்கள் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு பற்றிய விபரத்தை காலக்கிரமத்தில் அறியத்தருகின்றோம்.

பா.துவாரகன்

கலாநிதி க.வைத்தீசுவரக்குருக்கள் நூற்றாண்டு விழா மலர்க்குழு,

வியாவில் ஐயனார் தேவஸ்தானம்.



**ஐயாவின் பணிகளைத் தொடர்வதே நமது கடமையாகும்**

...கலாநிதி க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களது 100 ஆவது ஜனன ...வை அனுட்டிப்பது எமது தலையாய கடமையாகும். தமிழ் வளர்ச்சிக் ...மூலம் மாணவர்களின் பரீட்சை இடர்களைத் தீர்க்கும் முயற்சியில் ... மணிவாசகர் சபையை யோகர் சுவாமிகளின் ஆசியுடன் நிறுவி ... இந்திய ஈழத்து அறிஞர்களின் சொற்பொழிவுகள், சமயப் புத்தக ...ள், மாணவர்களுக்கான சமயப்போட்டிகள் போன்றவற்றை நடத்தி எமக்கு வழிகாட்டியாக ... காரைநகர் சிவன் கோவிலை ஈழத்துச் சிதம்பரம் எனப் பெயரிட்டு எமது ஆலயத்தினை ...வகையிலும் சிதம்பரத்தின் நிலைக்கு உயர்த்த அரும்பாடுபட்டவர். வியாவில் ஐயனார் ...ன வரலாற்றினை வெளிக்கொணர்ந்து திரு. க. சோமசேகரம் அவர்களூடாக பல சமய ...பணிகள் நிறைவேற ஆலோசனை வழங்கியவர். தான் சேகரித்து வைத்த நூல்களையும் ...கணபதீஸ்வரக்குருக்கள் ஞாபகார்த்த நூலகத்தினை ஆலய வளாகத்தினில் திறந்து ... அத்துடன் மிகக் கனதியான கட்டுரைகள் அடங்கிய "சைவக் களஞ்சியம்" என்ற ...நூலை விருப்பாக வெளியீடு செய்தும் சிறப்பித்திருந்தார். இன்றைய அவரது 100ஆவது ...காலத்தில் அவரது கனவுகளை நனவாக்குவதும் அவர் விட்டுச் சென்ற பணிகளைத் ...வதுமே நமது கடமையாகுமென திடசங்கற்பம் கொள்வோமாக.

ப. வி...ஸ்வரன், தலைவர், காரை. அபிவிருத்திச் சபை.



**ஈழத்துச் சிதம்பரத்தையும் காரைநகரையும் பெயர் சொல்ல வைத்த பெருந்தகை**

"...என் கடன் பணிசெய்து கிடப்பதே" என்ற திருநாவுக்கரசுநாயனாரின் வாக்கிற்கமைய தன் வாழ்நாள் முழுவதும் சிவத்தமிழ்ப் பணியாற்றி வந்தவர் காரை ...அறிஞர் பண்டிதர் கலாநிதி. க. வைத்தீசுவரக்குருக்கள். அவர் இவ்வுலகில் ...பிறந்து இன்று நூறு ஆண்டுகள் நிறைவுறும் வேளை நூற்றாண்டு ...கொண்டாட எண்ணியிருந்த வேளை 25.04.2015 தனது 99 ஆவது அகவையில் எம்மை ...பிரிந்தாலும் எமது உள்ளத்தில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். குருக்கள் ஐயாவை நான் ...இருந்தே அறிவேன். பழக இனியவர், பெருமைக்குணம் இல்லாத பெரிய பண்புள்ள ...குலத்திலகம். மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபையின் அரும்பணிகளில் ...யாடு அறிவுரைகள் கூறிவந்தவர். அண்மைக்காலத்தில் குடும்பத்தோடு மடாலயத்திற்கு ...வந்து ஆசிவழங்கிச் சென்றார். அவர் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்வதே நாம் ...செய்யும் கைமாறு எனக் கூறி அமைகிறேன்.

பொன்மனச் செம்மல், கல்விக்காருண்யன் E.S.P. நாகரத்தினம்




**சிவயோக சுவாமிகளின் ஆசிபெற்றவர்**

...அவர்கள் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் பூரணை, ...சமேத ஆண் டிக்கேணி ஐயனாரையும் சௌந்தராம்பிகை சமேத ...சுந்தரேஸ்வரப் பெருமா னையும் மூலமூர்த்தியாகக் கொண்ட எமது ...க்கு திருஉத்தரகோச மங்கையிலிருந்து பரம்பரை பரம்பரையாக ...நித்திய, நைமித்திய பூஜைகள் செய்த உயர் அந்தண மரபின் ...வர்கள். எல்லோரையும் பேரன்புடனும் சமமாகவும் மதிக்கின்றவரும் சித்தத்தைச் ... வைத்திருந்த பெரும் மகானுமாவார். வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள் தமது ...முழுவதும் சைவத்துக்கா கவும் தமிழுக்காகவும் அரும்பாடுபட்டவர்.

...அவர்கள் இன்னும் சில ஆண்டுகள் எம்மோடு இருந்து தமிழ் சைவ உலகிற்கு தனது ...ச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்தவேளை அவர் எம்மைவிட்டு சுந்தரேஸ்வரப் ...உடைய திருப்பாதங்களை அடைந்துவிட்டார். எனது கணவர் அமரர் மகேஸ்வரனின் ... மண்டபத்தை ஐயா அவர்கள் திறந்து வைத்த நிகழ்வு எங்கள் அனைவரது ...லும் இன்றும் நீங்காத இடம்பிடித்துள்ளது. ஐயா அவர்கள் தான் வாழ்ந்து வந்த ... தமிழ்கூறும் சைவ உலகிற்கு ஆற்றிய சேவைகள் எண்ணில் அடங்காதவை. ...எமது ஆலயத்திற்கு தலபுராணம் அமைக்கப்பட வேண்டும் என்று முனைப்பாக நின்று ...வர் ஐயா. அக் கைங்கரியம் நிறைவேற 2006 ஆம் ஆண்டு ஐயனாரிற்கு புராணம் ... வேண்டும் என்று மனதில் தோன்ற மயில்வாகனப் புலவரைக் கொண்டு ஆண் ...டிக்கேணி ஐயனார் புராணத்தை எழுதுவித்தவர். தான் பிறந்த மண்ணிற்கு பெருமை சேர்த்த ...அவர்கள் எம்மை எல்லாம் சோகத்தில் ஆழ்த்திவிட்டு தான் விரும்பி வணங்கி வந்த ...சிவயோக சுவாமிகளுடன் செல்லப்போகிறேன் என்று கூறிச் சிவபதம் அடைந்து விட்டார்.

திருமதி. விஜயகலா மகேஸ்வரன் (பா. உ)


சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர்



**தேன் தமிழும், திகழ் சைவமும் செழித்தோங்க உறங்காது உழைத்த உத்தமர்**

...காரைநகர் தமிழ்வளர்ச்சிக்கழக நூல் வெளியீட்டுப்பணியிலும், மணிவாசகர் சபை ...ந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக குருக்கள் ஐயாவின் செயற்பாடு ...கு அறிந்துள்ளேன். "மனிதம்" என்பதற்கு இலக்கணமாக நாம் பார்க் ...ணர் குலத் திலகமாய்த் திகழ்ந்தவர். தேன் தமிழும், திகழ்சைவமும் செழித் ...தோங்க உறங்காது உழைத்த உத்தமர். தொண்ணூற்றொன்பதாவது அகவை ...காலத்தில் வாழ்ந்து சிவனடியை அரவணைக்கும் வரை சைவத்தமிழ்ப்பணி புரிந்தவர். குருக் ...களின் 100ஆவது பிறந்த நாளில் அமரர் உலகில் வாழும் ஐயாவிடம் ஆசிவேண்டி நிற்கிறேன்.

க.கணேசமூர்த்தி, செயலாளர், தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர்.



சிவத்தமிழ் வித்தகர், மூதறிஞர், பண்டிதமணி, கலாநிதி.க. வைத்தீசுவரக்குருக்கள்

**அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகள்**

**தந்தை:** ச. கணபதீஸ்வரக் குருக்கள்

**தாய் :** க.சிவயோக சுந்தராம்பாள்

**பிறப்பு :** ஈழத்துச் சிதம்பரம் காரைநகர்.

**தோற்றம் :** 22.09.1916.

**பிள்ளைகள் :** சச்சிதானந்தன், இராணி, சாவித்திரி.

**கல்வி கற்ற பாடசாலைகள் :**

(அ) காரைநகர் வலந்தலை வடக்கு அ.மி.த.க.பா வகுப்பு: 1 - 5

(ஆ) காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை

**கற்பித்த ஆசிரியர்கள்**

1.பண்டிதர் சிவத்திரு. ச. பஞ்சாட்சரக்குருக்கள்

2.பண்டிதர் ஸ்ரீமத் சி. சிவசுப்பிரமணியதேசிகர்

**சித்தியடைந்த வகுப்பு :** V.S.L.C

(இ) காரைநகர் இந்துக்கல்லூரி : சித்தியடைந்த வகுப்பு : 7

(ஈ) அளவெட்டி நாகபூஷணி வித்தியாசாலை : சித்தியடைந்த வகுப்பு பிறிலிம்

(உ) சுன்னாகம் பிராசீன பாடசாலை

**கற்பித்த ஆசிரியர்கள்**

1.வேதவிசாரத பி.வி. சிதம்பர சாஸ்திரிகள் - சம்ஸ்கிருதம்

2.மகாவித்துவான் சி. கணேசையர் - தமிழ்

**சித்தியடைந்த வகுப்பு :** பிரவேச பண்டிதம் (சம்ஸ்கிருதம்) பாலபண்டிதம் - தமிழ்

(ஊ) பரமேசுவர பண்டித ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி தமிழ் பண்டித பரீட்சையிலும் பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப்பத்திரப் பரீட்சையிலும் சித்தி பெற்றுள்ளார்.

**கற்பித்த பாடசாலைகள்**

(அ)கொழும்பு விவேகானந்த வித்தியாலயம் - இங்கு படிப்பித்த காலத்தில்

1.கொழும்பு விவேகானந்த சபையோரால் நடாத்தப்பட்டுவரும் அகில இலங்கைச் சைவசமயபாடப்பரீட்சைக்குழுவில் ஒருவராக இருந்து பணியாற்றினார்.

2.தினகரன் பத்திரிகையில் செய்திப்பகுதியிலும் பணியாற்றினார்.

3.வெலிக்கடை, மாறை ஆகிய சிறைச்சாலைகளுக்கு ஞாயிற்றுக் கிழமை தோறும் சென்று அங்குள்ள சைவத் தமிழ்க் கைதிகளுக்கு சமயச் சொற்பொழிவாற்றி அவர்கள் தூயவாழ்வு வாழ்வதற்குப் பேருதவி புரிந்தார்.

(ஆ)பின்னர் வேறுபல பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றி 1971 இல் ஓய்வு பெற்றார்.

**இவரது ஆக்கங்கள்**

1.ஈழத்துச் சிதம்பர புராணச் சுருக்கம்

2.தொடர்மொழிக்கு ஒரு மொழி

3.எதிர்ச்சொற் கோவை

4.பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு.

5.பெரியபுராணம்- திருநகரப்படல உரை (சிலசெய்யுள்களுக்கு மட்டும்)

6.உரைநடையாக்கம்

7.மதிப்பீட்டுப் பயிற்சிக் கோவைகள் - தமிழ்மொழி பகுதி 1 - க. பொ. த. ப. சாதாரண தர வகுப்பிற்குரியது.

8.காரைநகரில் சைவசமய வளர்ச்சி.

**பதிப்பித்த நூல்கள்**

1.நாவலர் பிள்ளைத் தமிழ் - கலாநிதி. மு. கந்தையா

2.நன்னூற் காண்டிகை உரையும் நாவலர் பெருமானும் - கலாநிதி எவ். எக்ஸ். சி. நடராசா

3.திருமுறைப் பெருமை - கந்தர்மடம் சுவாமிநாத பண்டிதர்.

4.திண்ணபுர அந்தாதி - காரைநகர் கார்த்திகேயப் புலவர்.
உரை : கலாநிதி சொ. சிங்காரவேலன்.

5.அருள்நெறித் திரட்டு - வித்துவான் ச. சபாபதி.

6.திக்கை அந்தாதி - காரைநகர் கார்த்திகேயப் புலவர்.
உரை: பண்டிதர் புலவர் மணி க.மயில்வாகனனார்.

7.க்ஷேத்திரத் திருவெண்பா - 11 ஆம் திருமுறை - ஐயடிகள் காடவர்கோன் நாயனார். உரை : கலாநிதி மு. கந்தையா.

8.திருவெழு கூற்றிருக்கை : உரையுடன்

9.சீறாப்புராணம் (சில செய்யுள்களுக்கு) - உமறுப்புலவர்
உரை: ஜனாப் அ. ஸ. அப்துல் சமத் B.A.

10.ஈழத்துச் சிதம்பரம் : சிவஸ்ரீ. ச. கணபதீஸ்வரக் குருக்கள்.

11.சீறாப்புராணம் -நபி அவதாரப் படலம் - உமறுப்புல்வர்
உரை : திக்குவல்லை ஸைவான்.

12.திருப்போசை வெண்பா : காரைநகர் கார்த்திகேயப் புலவர்
உரை: திரு. வை. கா. சிவப்பிரகாசம் M.A.

13.புதுமுறைக் கட்டுரைக் கோவை - புத்தகம் - 1 புத்தகம் - 2

14.காரைநகர் கார்த்திகேயப் புலவர் நினைவு மலர்.

15.ஈழத்துச் சிதம்பர புராணம் - புலவர்மணி சோ. இளமுருகனார்,
உரை : பேருரையரசி பண்டிதை இ. பரமேசுவரியார்.

**பொது**

★ காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம், காரைநகர் மணிவாசகர் சபை என்பவற்றின் தாபகர்.

★ 1971 ஆம் ஆண்டு இலங்கையில் வெளிவந்த தமிழ் நூல்களுள் சிறந்த அமைப்பைக் கொண்ட நூல் என ஈழத்துச் சிதம்பர புராணம் தெரிவு செய்யப்பட்டு இதற்கான சான்றிதழ் இலங்கை அரசினால் வழங்கப்பட்டது.

★ 1995 ஆம் ஆண்டு அகில இலங்கைக் கம்பன் கழகம் இவருக்குப் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கிக் கௌரவித்தது.

★ இலங்கையிலும் தமிழகத்திலும் உள்ள அறிஞர்களோடும் ஆதீனங்களோடும் தொடர்புபட்டுள்ளமை.

★ கனடா சைவசித்தாந்த மன்றக் காப்பாளர்.
மன்ற வெளியீடு "அன்பு நெறி" திங்கள் இதழின் சிறப்பாசிரியர்.

**பின்வரும் மலர்கள் தொகுப்பாசிரியர்**

காரைநகர் சைவமகாசபைப் பொன்விழா மலர்.

காரைநகர் மணிவாசகர் சபை பொன்விழா மலர்.

திருவாதிரை மலர்கள் - 4

காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் கும்பாபிஷேக மலர்

சைவக் களஞ்சியம்

**இவர் பெற்றுள்ள பட்டங்கள் சில**

12/ 13.10.2002 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் தத்துவக் கலாநிதி [Doctor of Philosophy (honoris causa) பட்டம் பெற்றார்.

★ 1972 இல் வெளிவந்த நூல்களில் இவரால் பதிப்பிக்கப்பட்ட ஈழத்துச் சிதம்பர புராணம் நூலுக்கு சிறந்த முடிப்பினை உடைய நூல் என்று 1974 ஜனவரி 29 ஆம் திகதி இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச் சபையால் பாராட்டப்பட்டு சான்றிதழ் அளிக்கப்பட்டது.

★ 1995 இல் இலங்கை கம்பன் கழகம் பொன்னாடை போர்த்தி 'மூதறிஞர்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

★ வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுபுனரமைப்பு மற்றும் வடக்குக்கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்ற மூத்த கலைஞர்கள் கௌரவிப்பின்போது 18.11.2001 "கலைஞான கேசரி" - பல்துறை பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

★ இந்துசமய கலாசார விவகார அமைச்சு, இவர் தத்துவக் கலாநிதி (Doctor of Philosophy) பட்டம் பெற்றதைப் பாராட்டி 2002 ஜூன் 22, 23, 24 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற ஆய்வரங்கின் போது இந்துசமய மேம்பாட்டுக்கும், ஆன்மீகத்துறைக்கும் இவர் ஆற்றிய சேவையைப் பாராட்டிக் கௌரவித்தனர்.

★ 4.11.2007 இல் சர்வதேச இந்துமதக் குருமார் ஒன்றியம் 'சிவாகம கிரியா பூஷணம்' பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

★ 2008 இல் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடந்த கலை, இலக்கிய விழாவில் 19.07.2008 இல் 'கலைஞானச்சுடர்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கனடாவில் உள்ள சைவசித் தாந்த மன்றம் இவரின் சேவைகளை பாராட்டி 22.09.2002 இல் வைத்தீசுவர மலர் வெளியிட்டுக் கௌரவித்தது.

திருவாவடுதுறை ஆதீனம் (தமிழ்நாடு) 4.2.2006 விருது வழங்கிக் கௌரவித்தது.

இவர் தன்னிடமிருந்த 5000 இற்கும் மேற்பட்ட நூல்களில் பலவற்றை முதலில் காரைநகர் மணிவாசகர் சபையிடம் கையளித்து தனது தந்தையாரின் பெயரில் காரைநகர் சம்பந்தன் கண்டியில் கணபதீஸ்வரக்குருக்கள் நூல் நிலையத்தை அமைத்தார். 1990 இன் பின் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக இவருடைய வீட்டிலிருந்த பல நூல்கள் காணாமற் போய்விட்டன.

2004 தொடக்கம் தன் இறுதிக்காலம் வரை தன்னிடமிருந்த எஞ்சிய நூல்களை மகாராணி சோமசேகரம் அவர்களிடம் கையளித்தார். அவர் காரைநகர் வியாவில் ஐயனார் கோவிலில் புதிய கட்டடம் அமைத்து இவருடைய நூல்களையும், ஏனைய நூல்களையும் சேர்த்து "கணபதீஸ்வரக்குருக்கள் நூல் நிலையம்" அமைக்கப்பெற்று சிறப்பாகப் பேணிவருகின்றார்.



பண்டிதர் கலாநிதி க.வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள் தனது 99 ஆவது அகவையில் அமரத்துவமடைந்தது ஈழத்தின் சைவத் தமிழ் உலகிற்குப் பெரும் இழப்பு. தீர்க்க தரிசனமும் ஆழ்ந்த ஞானமும் சாஸ்திர அறிவும் புலமையும் கொண்டிருந்த ஒரு மகான். அன்னார் ஆற்றிய பணிகளுக்கு அளவே இல்லை. அவர் காட்டிய வழியில் நாமும் நடப்போமாக.

இறைபணியில்

பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா, வதிவிட ஆச்சாரியார்,

சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்.

# கலாநிதி சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்களால் விளைந்த நலன்களை வரையறை செய்ய இயலாது

காரைநகர் வைத்தீசுவர ஐயாவின் பெருமைகளைச் சிந்திக்கச் சிந்திக்க அவர் பெருமை ஆழங்காண இயலாமலும் அவரால் விளைந்த பயன்கள் அளவில் அடங்காதனவாகவும் பெருகுகின்றன.

நூற்றொருவர் - ஆயிரத்தொருவர் - கோடிக்கொருவர் என்று ஔவையார் கணித்த கணக்கிலும் அவர் அகப்படாது விளங்குகின்றார்.

அவர் செய்த பணிகள் - அவரால் விளைந்த நலன்களை யாராலும் வரையறை செய்ய இயலாதுள்ளது.

பரபலமான பலருமறிந்த அருஞ்செயல்களைப் பட்டியலிட்டு திருப்தியடைந்த பின் சந்திக்கும் ஒருவர் அவரால்தான் மனிதனாக இருக்கிறேன் என்கிறார். இன்னொருவர் என் இட்டல் இடைஞ்சல்களிலெல்லாம் அவரிடம் சென்று ஆறுதல் பெறுவேன். இன்று என் செய்வதென்று தெரியவில்லை என்கிறார். பொருள் தேடுவதிலும் புகழ்தேடுவதிலும் ஊக்கமாக இருந்த என்னை பக்திவழியில் முனனேற வைத்த ஐயாவைப் போல் உலகில் யாராவது இருக்க முடியுமோ என்கிறார் வேறொருவர்.

சுமார் எழுபத்தைந்து எண்பது வருடங்களாக காரைநகரிலும் ஈழத்துச் சிதம்பரத்திலும் நிகழ்ந்த கண்ணியமான - பெறுமதியான - முன்னோடியான கருமங்கள் அனைத்திலும் வைத்தீசுவர ஐயாவின் பங்களிப்பு - ஊக்குவிப்பு கணிசமான அளவு - அடிப்படையான தன்மை தெளிவாகத் தெரிகிறது.

தேவாமிர்தத்தை மட்டுமன்றி கற்பகம் - காமதேனு - உச்சைசிரவம் - ஜராவதம் - மகாலக்குமி முதலிய பல தேவச்செல்வங்களை உதவியபின்னும் காத்தற் கடவுளான திருமால் பள்ளிகொள்ளும் புனிதம் மிக்கதாகப் பாற்கடல் விளங்குவது போல் வைத்தீசுவர ஐயா விளங்குகிறார் என்று சொலலத் துணியலாம் போல அவரது தன்மையுள்ளது.

பாற்கடல் உதவிய பல தெய்வீகச் செல்வங்களுள் முதன்மையானதாக தேவாமிர்தம் விளங்குவது போல் வைத்தீசுவர ஐயா தோற்றுவித்த மணிவாசகர்சபை விளங்கு கின்றது. காரை தமிழ் வளர்ச்சிக் கழகம் - ஈழத்துச் சிதம்பர புராணம் முதலியவை கற்பகதரு காமதேனு முதலியனபோல கொணடாடத் தக்கனவாயுள்ளன. பாற்கடலில் உள்ள அலையும் துளியும் போல அவரது பிறபணிகள் கணக்கின்றி உள்ளன.

மணிவாசகர் சபையின் சேவைகளால் ஈழத்துச் சிதம்பரத்துக்கும் காரைநகருக்கும் அப்பாலும் திருவாசகம் தேனாகச் சுவைக்கும் நிலை உருவாகி உள்ளது எனலாம். மணிவாசகர் சபை ஆரம்பித்து பயன் செய்ததன் விளைவாகவே காரைநகர் பண்டிதமணி அருளம்பலவாணர் திருவாசகத்துக்கு அரிய உரை ஒன்றை எழுதி வெளிப்படுத்தியிருக்கிறார். காலத்துக்கு காலம் மணிவிழா மலர்கள் பல மலர்ந்து மணம் பரப்பியிருக்கின்றன.

திருவெம்பாவை விழாக்காலத்தில் காரைநகர் சிவன் கோவிலில் நிகழும் மனிவாசகர் விழா திருவிழாவின் சிறப்பம்சமாக விளங்கியது மட்டுமன்றி காரைநகர் சிவன் கோவிலை ஈழத்துச் சிதம்பரம் என பிரகாசிக்கக் காரணமாக இருந்திருக்கிறது எனக் கருதக் கூடியதாக உள்ளது.

காரைநகரும் - வைத்தீசுவர ஐயாவும் செய்த தவப்பயனாக மணிவாசகர் சபைக்கு யோக சுவாமிகளின் ஆசியை நாடும் சந்தர்ப்பத்தை உண்டாக்கியிருக்கின்றன. யோகசுவாமிகள் மணிவாசகர் சபைக்கு ஆசிவழங்கும் போது "வேண்டத்தக்கது அறிவோய் நீ" எனத் தொடங்கும் திருவாசகத்தைப்பாடி வாழ்த்தி ஆசி கூறியிருக்கின்றார்.

திருவாசகத்தில் அதிக ஈடுபாடிலில்லாதவரும் நன்கு அறிந்த பிரபலமான திருவாசகப்பாடலே வேண்டத்தக்கது எனத் தொடங்கும் பாடலாகும்.

இப்பாடலின் நாலாவது அடியாகிய "வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உன்றன் விருப்பு அன்றே" என்பது. பலரும் - பெரும்பாலானவரும் "நான் விரும்பும் விருப்பங்கள் எல்லாம் சிவபெருமானே உன் விருப்பத்தால் எனக்கு உண் டான விருப்பங்களே" என்று கருதி தமது ஆசைகளுக்கெல்லாம் சிவபெருமானே பொறுப்பானவர் என நம்பி ஆறுதலும் வலிமையும் அடைகின்றனர். ஆனால் இவர்கள் நம்புவதற்கு மாறாக இத் திருவாசகப்பகுதிக்கு மாணிக்கம் போன்ற அரிய நுண்ணிய கருத்து உள்ளது.

சிவபெருமானே நான் விரும்பும் விருப்பங்கள் எல்லாம் உன் விருப்பத்தாலேயே எனக்கு உண்டாகியிருக்கின்றன என்ற கருத்து இத்திருவாசகப் பாடலின் மூன்றாவது அடியாகிய "வேண்டி நீ யாது அருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்" பகுதியிலேயே அடங்கி விடுகின்றது.

வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில் அதுவும் உன்றன் விருப்பு அன்றே என்பதற்கு பெருமானே நான் நானாகவிருப்பது என்னவென்றால் உன்னை விரும்புதல் ஒன்றே யாம் - சிவபக்தி பண்ணும் ஒன்றையே நான் விரும்புகின்றேன்.

இப்படி இப்பகுதியை அழுத்தமாக சிந்திக்க ஒரு காரணம் உண்டு. மணிவாசகர் சபையைத் தோறுவித்து பலரையும் திருவாசகத்தில் ஈடுபடுத்தி மகிழ்தலோடு நின்றுவிடாது தான் முற்றுமுழுதாக திருவாசகத்தில் ஈடுபட்டு திருவாசகத்தைச் சுவைத்தவர் ஐயா அவர்கள்.


முதுமை காரணமாக சோர்வும் செயற்பாட்டுத் தளர்வும் அவரைப் பிற விடயங்களிலிருந்து விலக்கி திருவாசக பாராயணம்.திருவாசக சிந்தனை என்பவற்றிலே தோயச் செய்ததை அறிய முடிகின்றது.

தனது இருபத்திநான்கு வயதிலே திருவாசகத்தில் ஈடுபட்ட ஐயா அவர்கள் அத்திருவாச்க ஈடுபாட்டைப் பிறர்க்கு உண்டாக்கி சபையைத் தோற்றுவித்திருக்கிறார். பிறருடன் சேர்ந்தும் தனித்தும் திருவாசகத்திலே திளைத்திருககிறார்.

மனம், வாக்கு, காயம், என்னும் முக்கரணங்களுக்கும் அப்பால் தன் உயிர் நிலையிலேயே இவர் திருவாசகமயமாக விளங்கியிருக்கிறார் என்ற உண்மையை இவர் தன் வாழ்வின் கடைசி நேரத்தில் தன் மகளை நோக்கி ஐயோ ஐயோ என்று கூறாதே சிவனே சிவனே என்று கூறு என்று கூறியதனால் அறிய முடிகின்றது - தெளிய முடிகின்றது.

அரகரா - சிவ சிவா என்று கூறு என்னாது சிவனே சிவனே என்று கூறு என்றமை - திருவெம்பாவையில் உள்ள "சிவனே சிவனே என்று ஓலமிடினும் உணராய் உணராய் காண்" என்ற மாணிக்கவாசகத்தினை முன்னிலைப்படுத்துகின்றது. இந்த நிகழ்வைப் பற்றி நுணுகி ஆராய்ந்தால் ஒரு உண்மை வெளிப்படும்.

தன் திருமணத்துக்கு வந்தவர்களுடன் தானும் சிவச்சோதியில் பிரவேசிக்க அமைந்த சந்தர்ப்பத்தில் தான் இவ்வுலகைவிட்டு சிவச்சோதியில் கலந்தபின் இவ்வுலக - தேவ உலக மக்களுக்கு வேண்டிய உறுதிமொழியைச் சம்பந்த சுவாமிகள் வழங்கிய தன்மையிலே திருஞானசம்பந்தர் காதலாகி என்னும் பதிகத்தைப் பாடினார் என்று சேக்கிழார் பாடுகிறார். இந்தச் சேக்கிழார் பாணியில் வைத்தீசுவர ஐயா தன் மகளை முன்னிட்டுத் தனக்கு முன்னுள்ள சைவத்தமிழ் உலகத்தைப் பார்த்து ஐயோ ஐயோ என்னாதீர்கள். சிவனே சிவனே என்னுங்கள் என்று சைவத் தமிழுலகிற்கான இறுதி உறுதிமொழியாகச் சிவனே சிவனே என்னுங்கள் எனக்கூறிச் சிவபதமடைந்தார் எனக் கொள்வதே முறை. வைத்தீசுவர ஐயாவைப் போலவே வேறு பல பெரியோர்களும் தம் கடைசி வார்த்தையாக நிலையான கருத்தை வழங்கிச் சென்றிருக்கிறார்கள். சம்பந்தர் காதலாகி பதிகத்தை வழங்கினார். வேறு ஒரு மகான் சுயநலமுள்ளவனாக இராதே என்றிருக்கிறார். வேறு ஓர் அரசியல் தலைவர் நீ என்ன செய்கிறாய் என்றிருக்கிறார்.



இப்படியானவர்கள் வரிசையில் ஐயா எங்களுக்கு வழங்கிய மாணிக்கவாசகம் பாற்கடலின் தேவாமிர்தத்திலும் மேலானது எனத் துணியலாம்.

பண்டிதர்
தி.பொன்னம்பலவாணர்

# 3 அதிகாரிகள் இடைநிறுத்தம்

## போதைப்பொருள் வர்த்தகருக்கு சிறையில் உதவியதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

**முன்னணி போதைவஸ்து வர்த்தகரான முஹம்மத் சித்தீக்குக்கு விசேட கவனிப்புக்களை வழங்கிய கொழும்பு விளக்கமறியல் சாலையின் சிறைக் காவலாளிகள் மூவர் வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.**

சந்தேக நபரான போதைவஸ்து வர்த்தகர் கடந்த சனியன்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

அவரை மீண்டும் சிறையில் வைக்குமாறு நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் பிரகாரம் சந்தேக நபரை நீதிமன்ற வளவில் தற்காலிக சிறைக்கூடத்தில் தடுத்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முஹம்மத் சித்தீக் தடுத்து வைக்கப்பட்ட சிறிது நேரத்துக்குப் பின்னர் அவரின் ஆதரவாளர் ஒருவர் அவருக்கு அருகில் நடமாடி உள்ளார். சிறைக் காவலாளி சித்தீக்கின் ஆதரவாளருக்கு இரகசியமாக சிறைக்கூடத்துக்குச் செல்லவும் சித்தீக்குடன் உரையாடவும் குறித்த சிறைக் காவலாளிகள் வாய்ப்பை வழங்கியுள்ளனர்.

பின்னர் அந்த ஆதரவாளரும் சந்தேக நபர் சித்தீக்குடன் கை விலங்கு மாட்டப்பட்டு நீதிமன்ற வளவிலிருந்து கைதிகளைப் போன்று வெளியே கொண்டுவரப்பட்டனர்.

பின்னர் கைவிலங்கை கழற்றி முஹம்மத் சித்தீக் மட்டும் சிறைச்சாலை பஸ்ஸில் ஏற்றப்பட்டு சுதந்திரமாக செல்வதற்கு இந்த சிறைச்சாலை காவலாளிகள் இடமளித்து உள்ளனர்.

இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ரோஹன புஷ்பகுமாரவுக்குக் கிடைத்த முறைப்பாட்டின் பேரில் சிறைக் காவலாளிகள் மூவரும் உடனடியாக வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டனர்.

இது தொடர்பாக விசேட விசாரணை சிறைச்சாலை திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்தம்மற்றும்தாழ்அழுத்த மின் விநியோகங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்கான இன்று தொடக்கம் வெள்ளிக்கிழமைவரை காலை 8.30மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை வடமாகாணத்திலுள்ள சில பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

22.09.2015 செவ்வாய் யாழ் பிரதேசத்தில் அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு, பாற்பண்ணை வீதி, கலாசாலை வீதி, மண்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மண்டைதீவு வெலுசுமண, இலங்கை கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் அளம்பில், செம்மலை, நாயாறு, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், குமுழமுனை, அந்தோனிப்பிள்ளை ஐஸ்தொழிற்சாலை, கடற்தொழில் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் செக்கட்டிப் புலவு பிரதேசம், பறயனாலங் குளத்திலிருந்து நேரியகுளம்வரை, செட்டிகுளம் வைத்தியசாலை, பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், வி.சி. கே ஆலை, வலயம் - 1, 2, 3 மற்றும 4 ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் விடத்தற் தீவு வைத்தியசாலை, இலுப்பைக்கடவை, மூன்றாம்பிட்டி, வெள்ளாங்குளம், தேவன்பிட்டி, பெரியமடு, சன்னார், வெள்ளாங்குளம், சன்னார், இராணுவ படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும்.

23.09.2015 புதன் யாழ். பிரதேசத்தில் பாற்பண்ணை வீதி, கலாசாலை வீதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் உளுக்குளம், தீவீரகமநய, றங்கித்கம ஆகிய பிரதேசங்களிலும்.

24.09.2015 வியாழன் யாழ். பிரதேசத்தில் வேலணைச் சந்தியிலிருந்து துறையூர்வரை, மடத்துவெளி, வல்லான், ஆலடிசந்தி, புங்குடுதீவு, இருப்பிட்டி, குறிகட்டுவான், மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், பாற்பண்ணை வீதி, கலாசாலை வீதி, புங்குடுதீவு இலங்கை கடற்படை முகாம், மண்கும்பான் தேசிய நீர்வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும்.

25.09.2015 வெள்ளி யாழ். பிரதேசத்தில் உசன், விடத்தற்பளை, கெற்பெலி, கிளாலி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் உண்ணாப்புலவு, முல்லைத்தீவு நகரம், கள்ளப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும். (இ-9)

# இனப் படுகொலை இடம்பெறவில்லை

## யுத்த மோதல்களில் உயிரிழப்புக்கள் தவிர்க்க முடியாதவை என்கிறார் வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

**யுத்த மோதல்களில் உயிரிழப்புக்கள் என்பது தவிர்க்க முடியாததாகும். இதனை இனப்படுகொலை என அர்த்தப்படுத்த முடியாது. வடக்கில் இனப்படுகொலைகள் இடம்பெறவில்லை. இதனை ஐ.நா.வும் ஏற்றுக்கொண்டுள்ளது என முன்னாள் அமைச்சரும் எம்.பி.யுமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார.**



இது தொடர்பாக வாசுதேவ நாணயக்கார எம்.பி. மேலும் தெரிவிக்கையில் இலங்கை இறையாண்மை கொண்ட நாடு. எமக்கென்று நீதித் துறை உள்ளது. எனவே யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சர்வதேச கலப்பு நீதிமன்ற விசாரணை அவசியமில்லை.

ஐ.நா. மனித உரிமைகள்ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கை மூலம் இலங்கையின் இறையாண்மை மீறப்பட்டுள்ளது. இதனைக் கடுமையாக எதிர்க்கின்றோம். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

அமெரிக்காவின் தேவைக்காகவே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. கடந்த காலத்தில் அமெரிக்காவே இலங்கைக்கு எதிரான பிரேரணைகளை ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவில் முன்வைததது. இதன்போது சீனா, ரஷ்யா உட்பட பல்வேறு ஐ.நாவின் உறுப்பு நாடுகள் இலங்கைக்கே ஆதரவு வழங்கியதோடு அமெரிக்காவின் பிரேரணையை எதிர்த்தன.

அவ்வாறு எதிர்த்த பல நாடுகள் அமெரிக்காவின் பிரேரணையை ஐ.நா. மனித உரிமை ஆணைக் குழுவில் வாக்கெடுப்புக்கு எடுத்த போது சமூகமளிக்கவில்லை. எனவே அமெரிக்காவின் பிரேரணையை எதிர்த்தது இலங்கைக்கு பெரும் ஆதரவு கிடைத்தது.

இவ்வாறானதொரு புறச்சூழலில் இன்று ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு யுத்தக் குற்றச் சாட்டுகளை விசாரிப்பதற்கு கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென பரிந்துரை செய்துள்ளது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கை இறையாண்மை கொண்ட நாடு. எமக்கென்று வலுவான நீதித் துறையுள்ளது.

எனவே ஐ.நாவின் பரிந்துரை எமது நாட்டு இறையாண்மையை மீறுவதாகும். இதனை எதிர்க்கின்றோம். ஏற்றுக் கொள்ள முடியாது. கடந்த ஆடசிக்காலத்திலும் எமக்கெதிரான பிரேரணைகளையும் சர்வதேச விசாரணை வலியுறுத்தலையும் அன்றைய ஆட்சியாளர்கள் எதிர்த்தனர்.

எனவே அதே நிலைப்பாட்டையே இன்றைய ஆட்சியினரும் முன்னெடுக்க வேண்டும்.எவர் ஆட்சி செய்தாலும் நாட்டின் இறையாண்மையை விட்டுக்கொடுக்க முடியாது.

கடந்த ஆட்சியினரால் நல்லிணக்க ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. அதன் பரிந்துரைகள் கட்டம் கட்டமாக நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று உதாலக கமிஷன், பரணகம கமிஷன் போன்றவை நியமிக்கப்பட்டு விசாரணைகள் இடம்பெறுகின்றன.

விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் வாசுதேவ நாணயக்கார எம்.பி.மேலும் தெரிவித்தார். (இ-7)

## ரோஹன விஜேவீர கொலை குறித்து விசாரணை நடத்துமாறு கோரிக்கை

ஜே.வி.பி.யின் முன்னாள் தலைவர் ரோஹன விஜேவீர கொலை தொடர்பில் நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டுமென அவரது மனைவி சித்ராங்கனி விஜேவீர, பொலிஸ்மா அதிபரிடம் கோரியுள்ளார்.

விஜேவீர கொலை செய்யப்பட்டு 26 வருடங்களின் பின்னர் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் மக்கள் முறைப்பாட்டுப் பிரிவின் ஊடாக இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் அண்மையில் சித்ராங்கனியிடம் பொலிஸார் வாக்குமூலம் ஒன்றையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.

1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி ரோஹன விஜேவீர உயிரிழந்தார்.

விஜேவீரவின் மரணத்தைத் தொடர்ந்து குடும்பத்திற்கு பாதுகாப்பு வழங்கும் நோக்கில் திருகோணமலை மற்றும் வெலிசறையில் அமைந்துள்ள கடற்படை முகாம்களில் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டதாக கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்தன தெரிவித்துள்ளார.

எனினும் நாட்டில் தற்போது நிலவி வரும் சமூக சூழ்நிலை காரணமாக வெலிசறை கடற்படை முகாம் வீட்டிலிருந்து எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வெளி யேறுமாறு எழுத்து மூலம் விஜேவீர குடும்பத்திற்கு அறிவித்துள்ளதாக கடற்படைத் தளபதி ஒப்புக் கொண்டுள்ளார்.

இதேவேளை, விஜேவீர குடும்பத்தை பராமரித்து வருவதாகவும் தொடர்ந்தும் பராமரிக்கத் தயார் எனவும் ஜே.வி.பி அண்மையில் அறிவித்திருநதமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பல அமைச்சுக்களின் துறைகளில் மாற்றம்

முக்கிய பல அமைச்சுக்களின்துறைகளில் பாரியளவில் மாற்றம் செய்யபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சுக்களுக்கான துறைகளை வர்த்தமானியில் அறிவிப்பதற்கான ஆவணத் தயாரிப்பு பணிகள் பூர்த்தியாகும் நிலையை எட்டியுள்ளது.

இந்த ஆவணத்தின் அடிப்படையில் சில மிக முக்கியமான அமைச்சுக்களின் துறைகளில் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

நிதி, கொள்கைத் திட்டமிடல், வெளிவிவகாரம், பெருந்தெருக்கள், விமான சேவைகள், பெருந்தோட்டத்துறை உள்ளிட்ட அமைச்சுக்களின் துறைகளில் பாரிய மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அமைச்சுக்களுக்கு கடந்த காலங்களில் வழங்கப்பட்டிருந்த துறைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அமைச்சுக்களுக்கான துறைகள் தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல் கடந்த வாரமே வெளியிடப்படவிருந்த போதிலும் அந்த அறிவித்தல்கள் வெளியிடப்பட வில்லை.

துறைகளை நிர்ணயிப்பதில் ஏற்பட்ட குழப்ப நிலைமை காரணமாக, துறைகளை நிர்ணயிக்கும் ஆவணத்தை தயாரிப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் விரைவில் அமைச்சுக்களுக்கான துறைகளை அறிவிக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிப்படவுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### அது என்ன ஸ்வதர்மம்?

கீதையில் 'ஸ்வதர்மம்' என்ற சொல் அடிக்கடி கையாளப்படும். ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படையில் ஒரு தர்மம் இருக்கிறது. அதை அவன் விட முடியாது. விடக்கூடாது. குடிமக்களைக் காப்பது அரசன் கடமை. அதிலிருந்து அவன் நழுவக்கூடாது. நழுவினால் அவன் அரசனாக இருக்க முடியாது. உழைத்து ,பொருளை அபிவிருத்தி செய்வது உழவர் கடமை. அதிலிருந்து அவர் விலக முடியாது; விலகக் கூடாது. விலகினால் சமூகம் வீணாகும்.

அவரவர்க்கான ஸ்வதர்மம் எது என்பதை அவரவரே துறிய முடியும். அதிலிருந்து நழுவ அவருக்கு உரிமை இல்லை. அநீதிகளை அழிக்க வேண்டிய, போராட வேண்டிய அரச கடமையிலிருந்து அர்ச்சுனன் நழுவிய நிலையில் பொய் ஞானம் பேசும் சந்தர்ப்பத்தில் போர் செய் என்று அவனது ஸ்வதர்மத்தை பகவான் அவனுக்கு நினைவூட்டுகிறார். இதுபோலவே இந்த தேசத்து இளைஞர்கள்–இந்தத் தேசத்திற்கு தாம் ஆற்றித்தீர வேண்டிய கடமையிலிருந்து நழுவக்கூடாது.

இன்று ஸ்வதர்மத்தைக் கைவிடுபவர்கள் பொதுவாக மூன்று வாதங்களில் ஒன்றை முன்வைக்கிறார்கள்.

1.எது என் ஸ்வதர்மம் என்பதற்கு எவ்வித வரையறையும் இல்லை. எனவே என் ஸ்வதர்மத்தை நான் அறியேன்.

2.என் ஸ்வதர்மம் லாபகரமானதாக இல்லை. எனவே கைவிடுகிறேன்.

3.மற்ற எவரும் அவரவர் ஸ்வதர்மத்தைக் கடைப்பிடிக்காத போது நான் ஏன் கடைப்பிடிக்க வேண்டும்? எவ்வாறு அது முடியும்?

முதல் வாதத்தை இப்போது மறுப்போம். மனச்சாட்சி உள்ள எவருக்கும் தன் கடமைகள் எவை என்பது தெரியாமல் போய்விடுமா? பெற்றோருக்கு,சமூகத்துக்கு, பள்ளிக்கு, படி அளக்கும் நம் அலுவலகத்துக்கு நாம் ஆற்ற வேண்டிய இயல்பான கடமைகள் புரியாத அளவுக்கு நாம் மூடர்கள் இல்லை. ''தன் நெஞ்சறிவது பொய்யற்க'' என்கிறது தமிழ்வேதம்.

மற்றவரை ஏமாற்றுவது போல் மனச்சாட்சியையும் ஏமாற்றுபவர்கள்தான் இந்த முதல் வாதத்தை முன்வைக்கிறார்கள்.

ஓர் உதாரணம்: வீட்டிற்கு விருந்தினர் வந்து விட்டார். கடைக்குப் போய் வரும்படி கண் சாடை காட்டுகிறாள் அம்மா. நண்பர்களோடு வெட்டி அரட்டை அடிக்கும் விடலைப் பயலுக்கு அப்போது கடைக்குப் போக இஷ்டம் இல்லை. அம்மாவுக்கு அடுப்படியில் வேலை. எனவே கடைக்குப் போக முடியாது. இந்த நிலையில் கண்டிப்பாக கடைக்குப் போய் வருவது அந்த பயலுக்குக் கடமை. ஆனால் அலட்சியமாக "நீ என்ன வேணுமென்றாலும் செய்து கொள் எனக்கு கவலை இல்லை நான் போக முடியாது. அவ்வளவு தான்!'' என்று பொறுப்பின்றி பேசும் பிள்ளைகள்... பிள்ளைகளா? பிறகு கடையில் போய் அம்மா வாங்கித்தந்த இனிப்பை வெட்கமில்லாமல் தின்ன மட்டும் ஜோராக ஆஜராகி விடுவார்கள்! பொறுப் பைத் தட்டிக் கழிப்பது என்ன நியாயம்? பெற்றோரிடத்தில் இளம் பிள்ளைகளுக்குப் பெரும் கடமை இருக்கிறது. இதைப் புறக்கணிப்பதற்கு நமக்கு உரிமையே இல்லை. இதுபோலவே சமூகத்தின் எல்லா பக்கங்களிலும் நிலைக ளிலும் நமக்கு இயல்பான கடமை இருக்கிறது. அந்த ஸ்வதர்மத்தைக் கைவிடுவது சமூக அமைப்புக்கு பெரும் தீங்கு.

என் ஸ்வதர்மம் எனக்கு இலாபகரமானதாக இல்லை என்ற இரண்டாவது வாதம் வேடிக்கையானது. அது இலாபமா நட்டமா என்ற ஆராய்ச்சியை விட ஸ்வதர்மத்தை விட எனக்கு உரிமையே இல்லை என்பதை புரிந்து கொள்வது அவசியம். பதின் மூன்றாண்டு வனவாசம் என்று காட்டில் பொறுமையாக இருக்கும் தருமரைப் பாஞ்சாலி துளைத்தெடுத்தாள். ''பதின்மூன்று ஆண்டு காத்திராமல் இடையில் போய் துரியோதனனை நீர் ஏன் கொல்லக்கூடாது?'' என்று குமுறுகிறாள். ''சத்தியம், பொறுமை என்று தர்மத்தைக் கட்டிக் கொண்டு அழுகிறீரே...நீர் காப்பாற்றும் தர்மம் உம்மைக் காப்பாற்றவில்லையே... காட்டில் பிச்சை எடுக்க வைத்து விட்டதே'' என்று சாடுகிறாள்.

தருமனுடைய பதில் அட்சரலட்சம் பெறும்.

''பெண்ணே... தர்மம் என்னைக் காப்பாற்றும் என்ற எண்ணத்தில் நான்தர்மத்தைக் காப்பாற்றவில்லை. அப்படி செய்தால் அது வியாபாரம். நான் தர்ம வியாபாரி அல்லவே ? தர்மத்தைக் காப்பது என்பிறவிக் கடன். சத்தியம், பொறுமை என்ற தர்மங்கள் என்னைக் காத்தாலும் காக்காது போனாலும் அவற்றைக் காப்பது என் கடமை. அதிலிருந்து நான் நழுவவே முடியாது'' என்கிறார். இன்றைக்கு இலாப நட்டக் கணக்குப் பார்த்து தர்மங்களைக் கைவிடுவதே தேசத்தின் சகல தடுமாற்றங்களுக்கும் காரணம்!

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 18.09.2015~17.10.2015



**ஜென்மச் சனி விலகியது நன்மைகள் நடைபெறும்! ஆழம் தெரியாமல் காலை விடக்கூடாது என்று சொல்லும் துலாம் இராசி நேயர்களே!**

# ஜென்மச் சனி விலகியது; நன்மைகள் நடைபெறும்!

புரட்டாசி மாத கிரகநிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசியிலேயே இதுவரை சஞ்சரித்து வந்த சனிபகவான் இப்பொழுது இரண்டாம் இடத் திற்கு வந்து இனிய பலன்களைக் கொடுக்கப் போகின்றது. திரண்ட செல்வம் வந்து சேரும். திடீர் திருப்பங்கள் தொழிலில் ஏற்படும். மாதத் தொடக்கத்திலேயே ராசிநாதன் சுக்ரன் தொழில் ஸ்தானத்திலேயே சஞ்சரிப்பதால் தொழில் வளம் மேலோங்கும். மூடிக்கிடந்த தொழிலுக்கு திறப்புவிழா நடத்திப் பார்ப்பீர்கள்.

தொழில் நிலையம் கட்டுவதற்காகச் செய்த ஏற்பாடுகள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். வங்கி கடனுதவி பெறுவதில் இருந்த தாமதம் அகலும். வரன்கள் வாயில் தேடி வந்து சேரும். இரவு பகலாக பாடுபட்டதற்கேற்ற பலன் இப்பொழுது உங்களுக்கு கிடைக்கும். கூட்டாளிகளால் ஏற்பட்ட தொல்லை அகலும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகளும் மாறும். தீட்டிய திட்டங்கள் வெற்றி பெற இதுவரை ஒத்துழைக்காத குடும்ப உறுப்பினர்கள் இப்பொழுது ஒத்து ழைப்பர்.

லாபாதிபதி சூரியன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் லாபம் வரும் பொழுதே விரயம் ஒன்று காத்திருக்கும். செவ்வாய் இலாப ஸ்தானத்தில் இருப்பதால் சொத்துக்களால் இலாபம் உண்டு. என்றைக்கோ வாங்கிப் போட்ட சொத்து இப்பொழுது அதிக விலைக்கு விற்று உங்கள் சேமிப்பை உயர்த்தப் போகின்றது. உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

இரண்டில் சனி சஞ்சரிப்பது ஒரு வழிக்கு யோகம்தான். உங்கள் இராசிநாதன் சுக்ரனுக்கு சனி நட்பு கிரகம் என்பதால் வாங்கல்–கொடுக்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சி கூடும். குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வீர்கள். தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். தெய்வத் திருப்பணிகளுக்கும் வழங்கி மகிழ்வீரகள். பழைய பாக்கிகள் வசூலாகும். நிலையான வருமானத்திற்கு வழி வகுத்துக் கொள்வீர்கள். இம்மாதம் முழுவதும் சனிக்கிழமை விரதமிருந்து பெருமாள், லட்சுமி, அனுமன் வழிபாட்டையும், பெரிய கிரகமான சனிபகவான் வழிபாட்டையும் மேற்கொண்டால் உரிய விதத்தில் பலன் கிடைக்கும்.

**புதனின் வக்ர நிவர்த்தி யும், பெயர்ச்சியும்!**

செப்டம்பர் 25 ஆம் திகதி புதன் வக்ர நிவர்த்தியாகிறார். இதன் விளைவாக தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். பிற சகோதரர்களிடம் காட்டிய பாசத்தைப் பெற்றோர்கள் உங்களிடமும் காட்டுவர். வரவு வரும் முன்னதாகவே செலவுகள் ஏற்பட்டாலும் வரும் தொகை வந்து கொண்டே இருக்கும். அரசியல்வாதிகளின் ஆதரவோடு ஒரு நல்ல காரியத்தை முடிப்பீர்கள். உறவினர்களின் திருமணங்களை முன்னின்று நடத்தும் வாய்ப்பு கிடடும். அக்டோபர் 4 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் உச்சம் பெறுகிறார். இதன் விளைவாக இடம் மாற்றங்கள், ஊர் மாற்றங்கள் உருவாகலாம். பொதுவாக இதுபோன்ற நேரங்களில் வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களையும், மின் சாதனப் பொருட்களையும் வாங்குவது நல்லது.

**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

சுக்ரன் சிம்மத்தில் சஞ்சரிக்கும் நாள் செப்டம்பர் 28. அன்று முதல் ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்கு வரப்போகின்றது. வந்த துயரங்கள் வாயிலோடு நிற்குமளவிற்கு கிரக நிலைகளின் சஞ்சாரம் இப்பொழுது இருக்கின்றது. எனவே, எண்ணிய காரியங்கள் எளிதில் நடைபெறும்.




பொன், பொருள் சேரும். புகழ் கூடும். மண், மனை வாங்கும் யோகம் கிட்டும். உறவினர்களால் எதிர்பார்த்த நற்பலன்கள் வந்து சேரும். அவர்களால் உதிரி வருமானங்களும் உண்டு. சுக்ரன் அஷ்டமாதிபதியாகவும் விளங்குவதால் சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது துரிதமாக நடைபெறும். உறவினர்களின் கல்யாணத்திற்கு கொடுத்து உதவிய தொகை மீண்டும் உங்களிடம் வந்து சேரும். இம்மாதம் பெண் தெய்வ வழிபாட்டில் கவனம் செலுத்துவது நல்லது. குறிப்பாக வடக்கு நோக்கிய அம்மன் வழிபாடும், வரம் தரும் லட்சுமியின் உடனிருக்கும் பெருமாள் வழிபாடும் உங்கள் வளர்ச்சிக்கு வித்திடும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு ஒரு இனிய மாதமாகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். கணவன்- மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். தற்சமயம் ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. எனவே இரண்டாவது சுற்று நடப்பவர்கள் எள்ளளவும் கவலைப்பட வேண்டாம். உத்தியோகத்தில் உள்ள வர்களுக்கு புதிய வாய்ப்புகள் வந்து சேரும். வீடு மாற்றம் செய்வதன் மூலம் வெற்றி வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்ள இயலும். சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொண்டால் ஆனந்தமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இயலும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**தொட்ட காரியங்களில் வெற்றி. கிடைக்கும்! பழைய சடங்கு சம்பிரதாயங்களில் அதிக நம்பிக்கை வைக்கும் விருச்சிக இராசி நேயர்களே!**

# தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்!

புரட்டாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் ராசிநாதன் செவ்வாய் தொழில் ஸ்தானத்தில் லாபாதிபதி மற்றும் குருவுடன் கூடியிருக்கிறார். எனவே, தொழில் வளம் மேலோங்கும். துணிவும், தன்னம்பிக்கையும் உயரும். எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். இல்லத்தில் உள்ளவர்களின் எண்ணங்களை எல்லாம் பூர்த்தி செய்யும் விதத்தில் எதிர்பாராத விதமாக பெரும் தொகை ஒன்று உங்களுக்கு வந்து சேரும்.

சொத்துக்களால் மிகப்பெரிய ஆதாயம் அடையும் நேரம் இது. என்றைக்கோ வாங்கிப் போட்ட உங்கள் சொத்தின் மதிப்பு இன்றைக்கு பலமடங்கு உயர்ந்து மகிழ்ச்சியளிக்கும். அதை கொடுத்துவிட்டு புதிய கட்டடங்கள் வாங்கவும், தொழில் தொடங்கவும் முயற்சி செய்வீர்கள். செய்யும் முயற்சியில் வெற்றி கிடைக்க வேண்டுமானால் 10 இல் செவ்வாய் பலம் பெற்றிருக்க வேண்டும் என்பார்கள்.

அந்த அடிப்படையில் இப்பொழுது செவ்வாய் பலம் பெற்றிருப்பது மட்டுமல்லாமல் லாபாதிபதி புதனுடன் இணைந்திருக்கிறார். எனவே உங்கள் வருமானத்தோடு உதிரி வருமானத்தையும் குழந்தைகளும், குடும்ப உறுப்பினர்களும் கொண்டு வந்து சேர்ப்பர். விரயச் சனியின் ஆதிக்கம் முடிந்து இப்பொழுது ஜென்மச் சனியின் ஆதிக்கம் தொடங்கிவிட்டது. உங்கள் ராசியைப் பொறுத்தவரை 3, 4 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய்.

சகோதர ஸ்தானம், சகாய ஸ்தானம், சுக ஸ்தானம், தாய் ஸ்தானம் என்று வர்ணிக்கப்படும் இடங்களுக்கெல்லாம் சனி அதிபதியாக விளங்குவதால் ஜென்மச் சனியின் ஆதிக்க காலத்தில் அவர் நன்மைகளையே வழங்குவார். நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுப்பார். முதல் சுற்றைக் காட்டிலும் இரண்டாவது சுற்றில் இடம் பெற்றிருப்பவர்கள் பண மழையிலும், சகோதரர்களின் பாசமழையிலும் நனையும் வாய்ப்பு உண்டு.

ஆரோக்கியத்தில் மட்டும் அவ்வப்போது சிறு, சிறு தொல்லைகள் ஏற்பட்டு அகலும். சீரும், சிறப்பும் வந்து சேர சிவன் வழிபாட்டையும், விஷ்ணு வழிபாட்டையும் நந்தியெம்பெருமான் வழிபாட்டையும் மேற்கொள்வதோடு சனிக்கிழமை தோறும் ஆனைமுகப்பெருமானையும், அனுமனையும் அர்ச்சித்து வழிபடுவது நல்லது. 5 இல் கேது இருப்பதால் உங்களுக்கு விநாயகப் பெருமான் வழிபாடு வெற்றிகளை வழங்கும்.

**புதன் வக்ர நிவர்த்தியும், பெயர்ச்சியும்!**

செப்டம்பர் 25 ஆம் திகதி புதன் வக்ர நிவர்த்தியாகிறார். மேலும் அக்டோபர் 4 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் உச்சம் பெறப் போகிறார். இந்த இரண்டுமே உங்களுக்கு நன்மையையே வழங்கும். லாபாதிபதி புதன் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும், லாப ஸ்தானத்தில் சஞ்சரித்தாலும் தொழில் வளர்ச்சி கூடும் என்பதே உண்மை. அதுமட்டுமல்ல தொகை வரவும் திருப்திகரமாக அமையும். பணப் பற்றாக்குறை அகலும். பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயர்ந்த நிலையை அடைவர். தொழில் செய்பவர்கள் சேமிப்பை அதிகரிக்கச் செய்வர். வீட்டுப் பராமரிப்புச் செலவுகளை மேழ்கொள்வீர்கள். புதிய இல்லம் கட்டிக்குடியேற வேண்டுமென்ற எண்ணம் உருவாகும். நாட்டுப்பற்று மிக்கவர்கள் உங்கள் நல்ல பணிக்கு ஒத்துழைப்புச் செய்வர். அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு அனுகூலமான நேரமிது.




**சிம்ம சுக்ரனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிக்கு 7, 12இற்கு அதிபதி சிம்மத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அந்த நிகழ்வு செப்டம்பர் 28 ஆம் திகதி அன்று நிகழவிருக்கிறது. இதன் விளைவாக ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். குழந்தைகளின் சுபகாரிய நிகழ்வுகளை நடத்திப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுவீர்கள். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தோன்றும். வாங்கல், கொடுக்கல்களை ஒழுங்குசெய்து கொள்வீர்கள். விருந்தினர் வருகை உண்டு. அஞ்சல் வழியில் அனுகூலத் தகவல் வந்து சேரும். இம்மாதம் சனிக்கிழமை தோறும் விஷ்ணுவையும், லட்சுமியையும், அனுமனையும் வழிபட்டு வருவதன் மூலம் விருப்பங்கள் நிறைவேறும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உங்களுக்கு நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுக்கும் மாதமாகும். வருமானம் திருப்திகரமாக இருக்கும். வரன்கள் வீடு தேடி வந்து சேரும். கணவன்- மனைவிக்குள் பாசம் கூடும், நெருக்கம் அதிகரிக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். பழைய வேலையிலிருந்து விடுபட்டு புதிய வேலை அமையும். கட்டடம் கட்டும் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

வாகன மாற்றம் செய்யும் எண்ணம் மேலோங்கும். வளர்ச்சி கூட ஜென்மச் சனிக்கு பரிகாரமாக சனிக்கிழமைதோறும் திருமாலையும், திருமகளையும் வழிபட்டு வருவது நல்லது.

(தொடரும்)

# மரணதண்டனையை அமுல்படுத்துவதற்கு நாடாளுமன்றின் அனுமதி அவசியமில்லை

## அஜித் பீ பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

**குழந்தைகள் சித்திரவதை உள்ளிட்ட கடுமையான குற்றங்களுக்காக மரணதண்டனையை மீண்டும் அமுல்படுத்த வேண்டும் என்பது இதுவரையில் சமூக பேச்சுவார்த்தையாக உள்ளன எனவும் மரணதண்டனையை அமுல்படுத்த நாடாளுமன்றின் அனுமதி அவசியமில்லையெனவும் பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.**

மரண தண்டனையை அமுல்படுத்துவதற்கு ஆட்சேபனைகள் இல்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். எனினும் அதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதியை கோருவதாக அவர் கூறியிருந்தார். இது தொடர்பில் சிங்கள ஊடகமொன்று பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேராவிடம் வினவியது.

அதற்கு மரண தண்டனை அமுல்படுத்துவதன் மூலம் குற்றங்களை தடுக்க முடியாதென அவர் தெரிவித்தார்.

எப்படியிருப்பினும் மரண தண்டனை வழங்குவதற்கு ஜனாதிபதி விரும்பினால் நாடாளுமன்றத்தின் அனுமதி அவசியமில்லை. அதற்கான அனைத்து அதிகாரமும் ஜனாதிபதியிடம் உள்ளதாக பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய மரண தண்டனை அமுல்படுத்துவதற்கு ஜனாதிபதியின் அனுமதி கிடைத்தால் அதனை எதிர்வரும் வாரம் முதல் செயற்படுத்தப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களை, 10 பேராக மூன்று மாதங்களுக்கு அனைவருக்கும் தண்டனை வழங்கிவிட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மரண தண்டனையை அமுல்படுத்துவதன் மூலம் மாத்திரம் தவறுகளை தடுத்து விட முடியாதென மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் ரில்வின் சில்வா சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 150 | 120 | 120 | 150 |
| தக்காளி | 80 | 100 | 80 | 100 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 50 | 50 |
| கோவா | 70 | 50 | 70 | 60 | 60 |
| கரட் | 80 | 50 | 120 | 120 | 70 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 30 |
| புடோல் | 60 | 40 | 50 | 40 | 40 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 90 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 80 | 120 |
| பாகற்காய் | 120 | 60 | 90 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 60 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 70 |
| பயற்றங்காய் | 80 | 60 | 60 | 60 | 60 |
| லீக்ஸ் | 70 | 60 | 70 | 80 | 70 |
| பீற்றூட் | 40 | 20 | 40 | 60 | 40 |
| கறிமிளகாய் | 100 | 60 | 90 | 1230 | 100 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 80 | 80 | 120 |
| போஞ்சி | 150 | 180 | 160 | .160 | 60 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 40 | 60 | 70 |
| கீரை – 1 பிடி | 30 | 15 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 25-60 | 40 | 40-45 | 50 |
| இராசவள்ளி | 140 | 200 | — | — | — |
| வெங்காயப்பூ | 150 | 120 | — | 200 | 120 |
| முள்ளங்கி | 40 | 40 | 60 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 30 | .20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 20 |

## இந்தியா- இலங்கை இடையே சாலை அமைக்கும் பேச்சு தொடக்கம்

இந்தியா - இலங்கைக்கு இடையே, சாலை அமைக்கும் திட்டம் தொடர்பான பேச்சு, அடுத்த மாத இறுதிக்குள் தொடங்கவுள்ளது. இந்திய மத்திய, சாலை போக்குவரத்து அமைச்சக வட்டாரங்கள் இது குறித்து கூறியதாவது, அண்டை நாடுகளுடன் வர்த்தக ரீதியான உறவை மேம்படுத்துவதற்கு, போக்குவரத்து வசதி மிகவும் முக்கியம் என, மத்திய அரசு கருதுகிறது.

பங்களாதேஷ், பூடான், நேபாளம் ஆகிய நாடுகளுடன் சாலை போக்குவரத்தை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. இலங்கையுடனும், சாலை போக்குவரத்தை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு ஆர்வமாக உள்ளது. இலங்கையின் தலைமன்னாரில் இருந்து, இந்தியாவின் தனுஷ்கோடி வரை, கடலுக்கு மேல் பாலம் காட்டியும், கடலுக்குள் சுரங்கம் அமைத்தும், சாலை அமைக்கும் திட்டம் தயாராகியுள்ளது. (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 496


தனுசன் தனு





றோசன் மகேந்திரம்





ஹாட் பெயின்




சோபிகா வினோ




சால்ஸ் நியூமன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கையின் கலாசாரம், தேசியம் மற்றும் கலாசார ரீதியிலான தேசியம்?

**இலங்கையின் கலாசாரம் தேசியம் மற்றும் கலாசார ரீதியிலான தேசியம்? எனும் தலைப்பில் சண்டே லீடருக்கு என்.சத்தியமூர்த்தி எழுதிய கட்டுரையின் மொழியாக்கம்....**

'UNP' பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இணைவது பற்றிய பாராளுமன்ற வாதப் பிரதிவாதங்கள் நாட்டின் 'தேசிய பிரச்சினை'க்கு தேசிய ரீதியிலான அனைத்து மட்ட வழிகளிலும் எல்லோரது சிந்தனைகளையும் மீண்டுமொரு தடவை அலைக்களிப்பதாகவேயிருக்கும். பிரச்சினைகள் மட்டில் விவாதங்களை மேற்கொண்டு தீர்மானத்திற்கு வருவதுடன் முடிந்துவிடும் ஓர் பேச்சரங்காக மட்டும் அது இருத்தல் கூடாது. அதற்குப் பதிலாக உணர்வு பூர்வமான இனத்துவக் கருத்துக்கள் பலவும் அனைத்து விதத்திலும் விரிவாக வேறுபடும் அடிப்படைப் பிரச்சினைகளின் பரிமானங்களனைத்தையும் அரங்கேற்றி அலசி ஆராய்வதாகவே அது இருக்க வேண்டும். உண்மையான களநிலவரங்களை கருத்தில் கொண்டு அது ஆராயப்படுமானால் இதுமட்டில் கூடுதல் தெளிவைப் பெறலாம். இவை உள்ளூர் மற்றும் சர்வதேச சமூக விவகாரங்களின் பொருட்டு உள்வாங்கப்படும் உணர்வு பூர்வமான அரசியல் கருத்து வெளிப்பாடுகளிலும் பார்க்க வேறுபடுபவையாகும்.

இங்கு இதுமட்டிலான பாராளுமன்றக் கருத்தாடல்கள் பிழையாகிப் போனதற்கு இரு காரணங்களை நாம் காணலாம். முதலாவது காரணம், தெரிவுக்குழுவில் கலந்து கொள்ளும்படி பாராளுமன்றப் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனவின் உயிரோட்டமான அனுசரணையுடன் UNPக்கு அரசினால் விடுக்கப்பட்ட அழைப்பு தவறான சந்தர்ப்பத்தில் கிடைத்ததேயாகும். அதிகார பரவலாக்கத்தின்படி வழங்கப்பட்டும் 13 ஆவது திருத்தச்சட்டம் 'A' யின் கீழ் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாதிருந்த 'பொலிஸ்' மற்றும் 'காணி' அதிகாரங்களை ஒழித்துவிடுவதற்கான அரசின் பரிந்துரைகள் பற்றி ஊடக அறிக்கைகள் மூலம் பகிரங்கமாகவும் பரவலாகவும் அலசப்பட்டு வந்த வேளையாகவே அது இருந்தது. எதிர்த்தரப்பு 'UNP' கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது பங்கிற்கு 18 ஆவது திருத்தச் சட்டம் சொல்லுபடியற்றதாக்கியிருந்த 17 ஆவது திருத்தச்சட்ட நடைமுறை அலுவல்களுக்குப் புத்துயிரூட்டும் நோக்கத்திற்காகவே தான் மீண்டும் குழுவில் பிரவேசிப்பதாக அப்போதைய தருணத்திற்குப் புறம்பான ஒரு நியாயத்தை முன்வைத்தார். இதற்கு முதல் அவர் கடைசியாக எடுத்திருந்த இதேபோன்ற முரணான நடவடிக்கை, அன்றைய ஜனாதிபதி சந்திரிகாவுடன் நடந்து கொண்ட முறையாகும். இனப் பிரச்சினைத் தீர்வாக நம்பிக்கையான விதத்தில் அவர் முன்வைத்திருந்த தீர்வுப் பொதியை ரணில் நேரடியாகவே மறுதலித்திருந்தார்.

**தேசியத்தின் இலக்கு?**

முன்னைய இலங்கையின் தேசியம் என்ற கோட்பாடானது நாட்டைப் பிரிப்பதற்கான மறைமுக நடவடிக்கைப் போக்குகளை அடக்க வேண்டுமென்ற உணர்வுகளின் அடிப்படையிலேயே தோன்றியிருக்கலாம். எப்படியும் அப்போது உருவானது நாட்டினது பொதுவான ஒரு 'இலங்கைத் தேசியம்' என்பதாக இல்லாது குறுகிய 'இனத்துவ தேசியம்' ஆகவே இருந்தது. அதாவது, இனத்துவ அடிப்படை 'பெரும்பான்மை சிங்கள பௌத்த சமூகம்' சார்ந்தது. மற்றது கூடுதலாக பேச்சுமொழி ரீதியில் 'சிறுபான்மை' சார்ந்த அதாவது இந்த விடயத்தில் இலங்கை 'சிறுபான்மை தமிழர்கள்' சார்ந்த தமிழ்த் தேசியம். இந்தமுறையில் 'மலைநாட்டுத் தமிழர்' மற்றும் 'முஸ்லிம்கள்' எனவும் வகைப்படுத்தப்பட்ட இனக்குழுக்களான ஏனைய தமிழ் குழுக்களும் இருந்தன. இவ்வித சிறுபான்மைக் குழுக்களாக வகைப்படுத்தப்படுவதை அவர்கள் விரும்புகிறார்களோ? இல்லையோ? எப்படியாயினும் மழுங்கடிக்கப்பட்ட அவர்களது குரலொலி தேசிய ரீதியில் செவிமடுக்கப்படுவதில்லை.

தேச பிதாக்களும் பிதாமகர்களும் குறிப்பிடத்தக்க முன்னாள் தலைவர்களும் தமது சொந்த நாட்டின் சமூகங்களை அடையாளங் காண வேண்டியிருக்கும் அக்கறைக்குரிய விடயங்களில் அவற்றை இனரீதியாக குறிப்பிட்டு அழைப்பதிலும் பார்க்க அவர்களது மொழியின் அடிப்படையிலேயே அவர்களை இனங்காணுவது சுலபமானதாகவும் சிறப்பானதாகவுமிருந்திருக்கும்.

1931 இன் 'வயது வந்த தகுதியான மக்களனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை' என்ற சர்வதேச மனித உரிமைச் சட்டம் டொனமூர் அரசியல் சாசனம் மூலம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் இனங்களின் சமூக அந்தஸ்து அரசியல் ரீதியில் மாற்றம் பெற்றிருக்க வேண்டும். அப்படி மாற்றம் பெற்றிருக்குமானால் 'இனத்துவ பிரிவுகள்' என்ற கொள்கை அர்த்தமற்றதாகிப் போயிருக்கும். மக்களின் இந்தவித மான சமூக அந்தஸ்து அரசியல் சாசன ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதானது இதனை மறுதலிக்கும் போக்குடைய பெரும்பான்மைச் சிங்களவர்களிடையே முதலில் பாரம்பரிய இடதுசாரிகள் மத்தியில் ஆக்கபூர்வமான உறுதிப்பாட்டை ஏற்படுத்தியதுடன் பிற்பாடு, இதுமட்டில் 'தேசிய இடதுசாரிகள்' தமது ஆழமான அக்கறைகளை வெளிப்படுத்தத் தவறியபோது போராட்ட குணம் படைத்த இடதுசாரிகள் மத்தியிலும் முன்னைய இடதுசாரிகளுக்கு ஏற்பட்டது போன்ற உறுதிப்பாட்டை அது ஏற்படுத்தியிருந்தது.

**ஜே.வி.பி.யினரின் தோற்றுப் போன முயற்சி**

நாட்டின் இனரீதியான பிளவானது இந்த இரு தரப்பு வலதுசாரிப் போக்குடைய தலைவர்கள் மத்தியிலுங்கூட பரந்துபட்ட 'இலங்கைத் தேசியம்' என்பதை இனங்காணுவதற்கான முயற்சியையுங்கூட பிரச்சினைக்குரிய தாக்கியிருப்பது முரண்நகையான ஒன்றாகவேயிருக்கிறது. இம்முயற்சிக்கு ஊக்கமளிக்கப்படுமானால் காலப்போக்கிலாவது இந்த அரசியல் நிலையில் மாற்றமேற்படக் கூடும். இன ரீதியான இந்த பிளவின் காரணமாக சிங்கள பௌத்தர்களது 'சமூக- பொருளாதார- அரசியல்' நிலைக்கு அச்சுறுத்தல் ஏற்படலாமென்ற எண்ணமே 'JVP' யினரின் அந்த முதலாவது 1971 ஆம் ஆண்டுக் கிளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாகயிற்று.

(தொடரும்)


-தமிழில்.யோகர்-



ரோஹண விஜயவீர



சி.க.செந்தில்வேல்





சோமவன்ச அமரசிங்க

Somawansa Amerasinghe

# கடற்கரையை தூய்மைப்படுத்தும் திட்டம் யாழில் நேற்று ஆரம்பம்





சர்வதேச கடற்கரையோர தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யாழ். கோட்டை பகுதிக்கு முன்பாக கடற்கரையோரங்களை தூய்மைப்படுத்தும் விழிப்புணர்வு நடவடிக்கை நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

கடல் மாசுறுதல் தடுப்பு அதிகார சபை மற்றும் யாழ். மாவட்டச் செயலகமும் இணைந்து மேற்கொண்ட இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் மற்றும் கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி ஸ்ரீநிஹால், வட மாகாண ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, உறுப்பினர் பா.கஜதீபன் மற்றும் யாழ்.மாவட்ட திணைக்களங்களின் தலைவர்கள், யாழ்.மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், இராணுவ பொலிஸ் கடற்படைகளின் அதிகாரிகள், சர்வமதத் தலைவர்கள் உட்பட பொது மக்களும் கலந்து கொண்டனர்.

கோட்டைப்பகுதியைச் சுற்றிக் காணப்படும் கடற்கரைப் பகுதிகளில் உள்ள பிளாஸ்ரிக் பொருட்கள் உட்பட தேவையற்ற முறையில் கடலிலும் கரையிலும் வீசப்பட்டு இருந்த பொருட்கள் அகற்றப்பட்டதுடன் தொடர்ந்தும் இந் நடவடிக்கையை அனைத்து கடற்கரையோரங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளன. (இ-9)

## ஜே.வி.பியே வலுவான எதிர்க்கட்சி

மக்கள் விடுதலை முன்னணி வடக்கு, கிழக்கு உட்பட முழு நாட்டினதும் எதிர்க்கட்சி என அந்த முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் விடுதலை முன்னணியின் 6 பேரே நாடாளுமன்றத்தில் இருக்கின்றோம்.

ஆனால் முன்னர் இருந்ததை விட இது இரு மடங்கு.

அத்துடன் நாடாளுமன்றத்தில் ஆறு கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. அவற்றில் மூன்று கட்சிகள் அரசாங்கத்திலும் மூன்று கட்சிகள் எதிர்க்கட்சியிலும் அங்கம் வகிக்கின்றன.

எமது ஆறு பேருடன் 23 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியில் உள்ளனர். இந்த 23 பேரில் 6 பேரான நாங்கள் மிகவும் பிரபலமானவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# எதற்காக மகிந்த இன்னமும் அரசியலில் இருக்கிறார்?

**சிலோன் ருடே நாளிதழில் உபுல் ஜோசப பெர்னாண்டோ எழுதியுள்ள பத்தியை மொழியாக்கம் செய்துள்ளார் நித்தியபாரதி.**



19.09.2015 அன்று வெளியான கட்டுரையின் தொடர்ச்சி...

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய 95 உறுப்பினர்களைக் கொண்டு அரசாங்கத்தை அமைக்க முடியும் என மகிந்த கனவு கண்டிருக்கலாம். மைத்திரி மற்றும் ரணில் ஆகியோருக்கு இடையிலான முரண்பாட்டைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முடியும் எனவும் மகிந்த கருதி யிருக்கலாம்.

ஆனாலும் தற்போது இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ள தேசிய அரசாங்கத்திற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பெரும்பாலான உறுப்பினர்கள் தமது ஆதரவை வழங்கியதுடன் மகிந்தவின் கனவிற்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டிருக்கலாம்.

பொதுத் தேர்தலில் 'மகிந்தவுடன் இணையுங்கள் என அறை கூவிய சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள், மகிந்தவை மீண்டும் வெற்றி பெறச் செய்ய முடியும் எனக் கருதினர்.

இவர்கள் மகிந்தவை வெற்றி கொள்ள வைத்து அமைச்சுப் பதவிகளை தம தாக்க முடியும் எனக் கனவு கண்டனர். ஆனா லும் இவர்கள் இருபது ஆண்டு களாக அமைச்சர்களாகப் பதவி வகித்து விட்டு எதிர்க்கட்சி ஆசனத்தில் அமர விரும்பவில்லை. இதனாலேயே மகிந்தவுக்கு ஆதரவளித்த கட்சி உறுப்பினர்கள் தற்போது தேசிய அரசாங்கத்தில் இணைந்துள்ளனர்.

1994ல் ஐ.தே.க தோல்வியைச் சந்தித்த போது, முன்னாள் ஐ.தே.க அமைச்சர்கள் கூட அமைச்சுப் பதவிகளுக்காக ஆசைப்பட்டனர். அந்தவேளையில் 94 ஆசனங்களைப் பெற்ற ஐ.தேக தனக்குச் சார்பாக மேலும் உறுப்பினர்களை இணைத்து சந்திரிகாவின் அரசாங்கத்தைக் கவிழ்க்க திட்டமிட்டனர்.

ரணில் உட்பட ஐ.தே.க தலைவர்கள் ஆறு மாதங்களில் தாங்கள் சந்திரிகா அரசாங்கத்தைக் கவிழ்த்து விடுவோம் என கங்கணங் கட்டினர். இந்த வாய்ப்பை சந்திரிகா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தினார்.

இவர் ஐ.தே.க உறுப்பினர்கள் சிலரிடம் அமைச்சுப் பதவிகளை வழங்குவதாக ஆசை காட்டித் தன்பக்கம் இழுத்துக் கொண்டார். இது நிலைமையைத் தலைகீழாக மாற்றியது.

ரணில் எறிந்த பந்து மீண்டும் அவரையே பதம் பார்த்தது. பத்து ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திரிகாவின் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடாக கடந்த ஓகஸ்ட் தேர்தலில் வெற்றி பெற்ற 95 உறுப்பினர்களும் மகிந்தவிற்கு ஆதரவளிப்பார்கள் என எவராலும் உறுதிப்படுத்த முடியாது. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கத்தைக் கவிழ்த்து விட்டு பிரதமராகப் பதவி வகிக்கலாம் என மகிந்த விரும்பினால் அவருக்கு மைத்திரியின் ஆதரவும் தேவைப்படும். ஆனால் மைத்திரி ஒரு போதும் மகிந்தவுக்குப் பிரதமர் பதவியை வழங்க முன்வரமாட்டார்.

அரசியல் யாப்பின் பிரகாரம், மகிந்த அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது. இந்த உண்மைகள் எல்லாம் தெரியாத ஒரு குழந்தை போல் மகிந்த நடிக்க முடியாது. இவற்றை ஆராயாத சிலர், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தும் பணியில் மகிந்த ஈடுபடு வதாக கூறமுடியும். இதன்மூலம் மகிந்த ஆட்சிக்குத் திரும்ப முடியாது என்பதை இலங்கையின் தற்போதைய அரசாங்கம் நன்கறியும்.

மகிந்த தனது மகனின் எதிர்கால அரசியலைக் கருத்திற் கொண்டும் தனது குடும்பத்தினருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றங்களை மறுதலிப்பதற்கும் தொடர்ந்தும் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகிக்கின்றார் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும்.

தான் தேசிய அரசாங்கத்திற்கு எதிரானவன் இல்லை என மகிந்த தற்போது கூறுகின்ற போதிலும், தனது குடும்ப உறுப்பினர்களை இவர்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்களிலிருந்து மீட்டெடுப்பதற்கான பணி களை மகிந்த மேற்கொள்கிறார் என்பதே உண்மையாகும். இதனை மகிந்தவிற்கு எதிரான தரப்பினர் எதிர்வு கூறுகின்றனர்.

எவ்வாறெனினும், மகிந்த தொடர்ந்தும் இலங்கையின் செய றபடு அரசியலில் ஈடுபடுவதானது சீனாவிற்கு நம்பிக்கையை வழங்கியுள்ளது.

(முற்றும்)



# சிறுவர் அரங்கம்

1246

# “மக்கு மாடசாமி”

...பிள்ளைகள் சிரிப்பார்கள்.

ஆனாலும், ஆசிரியை அவன் மேல் கோபம் கொள்ள மாட்டார்.

மற்ற மாணவர்களெல்லாம் அவனை 'மக்கு' மாடசாமி என்று அழைப்பதைப் பற்றியும், மாடசாமிக்கு இருக்கும் தாழ்வு மனப்பான்மையைப் பற்றியும் ஆசிரியர் நன்றாக அறிந்திருந்தார்.

ஒரு நாள், வகுப்பு தொடங்கும் முன்பாக வகுப்பு ஆசிரியை நித்யா, மாடசாமியை அழைத்தார். "வயலில் வேலை செய்வது பற்றி இன்று மாடசாமி நம்மோடு பேசப் போகிறான். எல்லோரும் கேளுங்க" என்று



சொல்லிவிட்டு, அவனைப் பேசச் சொன்னார்.

முதலில் மாடசாமி தயங்கினாலும், பின்னர் உற்சாகமாய் எழுந்து பேச ஆரம்பித்தான்.

வயலில் உழுவதில் ஆரம்பித்து, நாற்று நடுவுவது, தண்ணீர் பாய்ச்சுவது, நாற்று முளைத்தவுடன் அதைப் பிடுங்கி நடுவது, களை பறிப்பது, அதன் பிறகு 40 நாட்கள் வயலில் எப்போதும் தண்ணீர் இருக்கும்படி பார்த்துக்கொள்வது, அறுப்பு முடிந்து களத்து மேட்டில் நெல்லைக் குவிப்பது, பின்னர் நெல்லை அரவை மில்லில் அரைத்து அரிசியாய் ஆக்குவது வரை கதை போலச் சொன்னான்.

மாடசாமி கடைசியாகச் சொன்ன 'அரிசி' என்ற வார்த்தையைத் தவிர எந்த வார்த்தையும் அந்த மாணவர்களுக்கு அதுவரை தெரியாது.

அந்த அரிசியும் எப்படி வயலிலிருந்து வரும் என்பதையும் அறியாதவர்கள் அவர்கள்.

அவன் சொல்வதையே வாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

நித்யா டீச்சர் இப்போது கேட்டார், "அரிசி எப்படி வருதுன்னு இப்ப தெரிஞ்சுக் கிட்டீங்களா ?"

எல்லோரும் தலையாட்டி ஆமோதித்தனர்.

"இனிமேல் மாடசாமியை யாரும் மக்கு மாடசாமின்னு கூப்பிடக் கூடாது.

சரியா? அவன் எவ்வளவு விடயம் தெரிஞ்சு வச்சுருக்கான் பார்த்தீங்க இல்லயா?" என்று நித்யா டீச்சர் சொன்னவுடன், எல்லோரும் தலை குனிந்தார்கள்.

எல்லோரும் வந்து மாடசாமியிடம் கைகுலுக்கினார்கள்.

மாடசாமிக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை.

"வயல்ல வேலை செய்யுற விடயங்களெல்லாம் இவங்களுக்கு உண்மையிலேயே தெரியாதா" என்று ஆச்சரியப்பட்டான்.

மாடசாமியை நித்யா டீச்சர் தனியே அழைத்து, "மாடசாமி! நீ ஒன்னும் மக்கு இல்லைங்கிறத இப்ப தெரிஞ்சுக்கிடியா.

உனக்கு தெரிஞ்ச விஷயங்கள் இவங்களுக்குத் தெரியாது.

இனிமேலாவது உனக்குத் தாழ்வு மனப்பான்மை வராமல், நல்லா படிக்கணும்.

முயற்சி செஞ்சா நீயும் அவர்களைப் போலப் படிக்கலாம். சரியா ?" என்றார்.

மாடசாமி "சரி டீச்சர்..." என்று நம்பிக்கையுடன் தலையாட்டினான்.

அதன் பிறகு அவனை யாரும் 'மக்கு' மாடசாமி என்று அழைப்பதில்லை!

(முற்றும்)



## 09.2015 22 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1499 - சுவிட்சர்லாந்து விடுதலை பெற்று தனி நாடாகியது.
- 1692 - ஐக்கிய அமெரிக்காவில் சூனியக்காரர்களின் கடைசித் தொகுதியினர் தூக்கிலிடப்பட்டனர்.
- 1711 - டஸ்கரோரா பழங்குடிகள் வட கரொலைனாவில் பாம்லிக்கோ ஆற்றுப் படுகையில் குடியேற்றவாசிகளைத் தாக்கி 130 பேரைக் கொன்றனர்.
- 1784 - அலாஸ்காவின் கோடியாக் என்ற இடத்தில் ரஷ்யா தனது குடியேற்றத்தை ஆரம்பித்தது.
- 1877 - யாழ்ப்பாணம் கத்தோலிக்க கார்டியன் பத்திரிகையின் ஆசிரியராக தமிழறிஞர் அருளப்ப முதலியார் நியமிக்கப்பட்டார்.
- 1888 - நஷ்னல் ஜியோகிரபிக் மகசின் (National Geographic Magazine) முதலாவது இதழ் வெளிவந்தது.
- 1893 - அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட தானுந்து முதன் முதலாகக் காட்சிப்படுத்தப்பட்டது.
- 1896 - பிரித்தானியாவின் அரச வம்சத்தில் அதிக காலம் ஆட்சியில் இருந்த பெருமையை விக்டோரியா மகாராணி பெற்றார்.
- 1908 - பல்கேரியா விடுதலையை அறிவித்தது.
- 1914 - ஜேர்மனியின் எம்டன் நாசகாரிக் கப்பல் இரவு 9:30 மணிக்கு சென்னைத் துறைமுகத்தையும் மற்றும் நகரப் பகுதிகளையும் குண்டுவீசித் தாக்கியது. மொத்தம் 130 குண்டுகளை அது வீசியது.
- 1934 - வேல்சில் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 266 பேர் கொல்லப்பட்டனர்.
- 1941 - யூதர்களின் புத்தாண்டில் உக்ரேனின் வின்னிட்சியா நகரில் 6,000 யூதர்கள் நாசி ஜேர்மனியரினால் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் முதல் நாட்களில் கொல்லப்பட்ட 24,000 யூதர்களில் உயிர் தப்பியோராவர்.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ரஷ்ய இராணுவம் எஸ்தோனியாவின் தலைநகர் தாலின் நகரி னுள் நுழைந்தனர்.
- 1955 - ஐக்கிய இராச்சியத்தில் ஐடிவி தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டது.
- 1960 - மாலிக் கூட்டமைப்பிலிருந்து செனெகல் விலகியதை அடுத்து சுடானியக் குடியரசு மாலி எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1965 - இந்திய-பாகிஸ்தான் போர், 1965: இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் காஷ்மீர் தொடர்பாக இடம்பெற்ற போர் ஐ.நாவின் போர் நிறுத்த அழைப்பை ஏற்று முடிவுக்கு வந்தது.
- 1970 - மலேசியாவின் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் தனது பதவியை விட்டு விலகினார்.
- 1975 - ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி ஜெரால்ட் ஃபோர்ட் கொலை முயற்சி ஒன்றிலிருந்து தப்பினார்.
- 1980 - ஈரான் - ஈராக் போர்: ஈராக் ஈரானை முற்று கையிட்டது.
- 1993 - ஜோர்ஜியாவின் பயணிகள் விமானம் ஒன்று சுகுமி என்ற இடத்தில் தீவிரவாதிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதில் 108 பேர் கொல்லப்பட்டனர்.
- 1995 - நாகர்கோயில் பாடசாலை சிறார்களின் படுகொலை, யாழ் நாகர் கோயில் பாடசாலை மீது 12:50 மணிக்கு இலங்கை விமானப் படையினர் நடத்திய குண்டுவீச்சில் 30 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.
- 1997 - அல்ஜீரியாவில் 200 கிராம மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

பிறப்புகள்

- 1930 - பி.பி.ஸ்ரீநிவாஸ், பழம்பெரும் திரைப்பட பின்னணி பாடகர், (இ. 2013)
- 1791 - மைக்கேல் பரடே, ஆங்கில அறிவியலாளர் (இ. 1867)

இறப்புகள்

- 1539 - குரு நானக் தேவ், சீக்கிய மதத்தைத் தோற்றுவித்தவர் (பி. 1469)
- 2009 - எஸ். வரலட்சுமி, நடிகை, பாடகி (பி. 1927)
- 2009 - ஆர். பாலச்சந்திரன், பேராசிரியர், கவிஞர்

பிறருக்கு நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு

– விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இன அழிப்பு நடக்கவில்லையா? இதைத் தீர்மானிப்பது யார்?

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தமிழ் அரசியல்வாதிகளிடம் அவசரமான ஒரு கோரிக்கையை தமிழ் மக்கள் விட வேண்டி உள்ளது.

அதாவது வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த மிகப்பெரிய மனிதப் படுகொலை தொடர்பில் மறந்தேனும் ஏறுமாறான கருத்துக்களை சொல்லி விடாதீர்கள் என்பதே அந்தக் கோரிக்கையாகும்.

வன்னியில் நடந்த பேரவலம் சாதாரணமானதன்று. பல்லாயிரக்கணக்கான தமிழ் உயிர்களைக் காவு கொண்ட அந்தத் துயரம் இந்த உலகம் இருக்கும் காறும் நினைவில் இருக்கும் என்பது நிச்சயம்.

உயிரைக் காப்பாற்றுவதற்காக ஓடி ஓடி அபயக் குரல் எழுப்பிய தமிழ் மக்களைக் கொன்று ஒழித்ததை இன அழிப்பு இல்லை என்று யார் கூறினாலும் அவர்கள் பச்சைத் துரோகிகள். பணத்துக்கு விலை போய் தமது இனத்தை விற்றுப்பிழைக்கும் நய வஞ்சகர்கள் என்றே தமிழ் உலகம் கூறும்.

ஆகையால், வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த பேரவலத்தை அனுபவிக்காத எவரும் எதிர்மாறாகக் கருத்துக் கூறத் தகைமை அற்றவர்கள். இத்தகையவர்கள் தங்கள் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தால் மௌனமாக இருப்பது நல்லது.

உதவி செய்யாமல் இருப்பதில் தவறில்லை. ஆனால் துரோகம் இழைக்காமல் இருப்பது அவசியம். வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தத்தில் படைத்தரப்பு பயன்படுத்திய ஆயுதங்கள்; சரணடைந்தவர்களுக்கு நடந்த சித்திரவதைகள்; குழந்தைகள், பெண்கள், முதியவர்களுக்கு இழைத்த கொடுரங்கள் என்பவற்றை ஆராய்ந்தால்–அனுபவித்தால் அந்த யுத்தம் இன அழிப்பா? இல்லையா? என்பது தெரியவரும்.

இதனைவிடுத்து இன அழிப்பு நடைபெறவில்லை என்று நாங்களே கூறிக்கொள்வதானது வன்னியில் நடந்த யுத்தம் தந்த வலியைவிட பன்மடங்கு வலி தருவதாகும்.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தத்தின் போது இடப்பெயர்வால் மக்கள் சந்தித்த கஷ்டங்கள், பொருளாதாரத் தடையால்; உணவுப் பஞ்சத்தால் மக்கள் அனுபவித்த பசிக் கொடுமை, மருத்துவ மனைகள் மீது தாக்குதல் நடத்தியதால் ஏற்பட்ட இழப்புகள், வன்னியில் இயங்கிய சர்வதேச தொண்டு நிறுவனங்களை உடனடியாக வெளியேறுமாறு அரசு போட்ட உத்தரவால், ஆருமற்ற அநாதைகளாக ஆக்கப்பட்ட பெரும் கொடூரம், மக்கள் தங்கியிருந்த தற்காலிகக் குடிமனைகள் மீது நடத்தப்பட்ட ஆட்லெறித் தாக்குதல்கள் இவை எல்லாம் எந்த வகைக்குள் அடக்கக் கூடியவை என்பதை சிந்தியாமல், இன அழிப்பு நடைபெறவில்லை என்று கூறுவது எந்த வகையிலும் நியாயமாகாது.

ஆகையால், இத்தகைய வார்த்தைப் பிரயோகங்களை யார் மேற்கொண்டாலும் அவர்களை தமிழ் மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். நம்மைப் பொறுத்தவரை, நாடு கடந்த தமிழீழம் என்ற அரசு தான் இயங்குவதை நிருபிப்பதாக இருந்தால், தமிழினத் துரோகத்திற்கு வெளிநாடுகளில் வைத்து தண்டனையை வழங்க வேண்டும்.

அரசு என்றால் குற்றவாளிகளைத் தண்டிப்பதும் தண்டனை கொடுப்பதும் கட்டாயம் அல்லவா? அத்தகையதொரு தண்டனை முறையை நாடு கடந்த அரசு செய்தாகவேண்டும். அப்போதுதான் வெந்து நீறாகிய மன நிலையில் இருக்கும் தமிழ் மக்கள் சற்றேனும் ஆறுதல் அடைவர்.

எதுவாயினும் தமிழ் அரசியல்வாதிகள் வன்னி யுத்தம் தொடர்பில் வார்த்தைகளை அளந்து பேசுவது நல்லது.

# சுன்னாகம் ரவுடிக் கும்பல்களை அடக்க விசேட அதிரடிப்படை மூலம் நடவடிக்கை

## பொலிஸ்மா அதிபருக்கு இளஞ்செழியன் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றத்துக்கு சவால்விடும் சுன்னாகம் ரவுடிக் கும்பல்களை அடக்க உடனடியாக விசேட அதிரடிப்படையை அமர்த்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென வட மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபருக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

ரவுடித்தனத்தில் ஈடுபடும் அனைவரையும் பொலிஸ் விசேட அதிரப்படையைப் பாவித்து கைது செய்து நீதிமன்றில் ஆஜராக்குமாறு வட பிராந்திய சிரேஷ்ட பொலிஸ்மா அதிபருக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நீதிமன்றங்கள் கடுமையாக உத்தரவுகள் பிறப்பிக்கின்ற நிலையில் நீதிமன்ற உத்தரவுகளுக்கு சவால்விடும் வகையில் சுன்னாகத்தில் இயங்கும் அனைத்து ரவுடிகளும் கைது செய்யப்பட வேண்டும். அவர்களுக்கு பாதுகாப்பு அடைக்கலம் கொடுக்கும் அனைத்துப் பெற்றோர்கள், உறவினர்கள் கைது செய்யப்பட வேண்டும்.

குறிக்கப்பட்ட ரவுடித்தனம் பண்ணி வீதியில் வாள்வெட்டுக்களை பகிரங்கமாக நடத்தி மக்களுக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் இந்த ரவுடிக்கும்பல்கள் சட்ட ஆட்சிக்கு விரோதமானவர்கள், நீதிமன்ற ஆட்சிக்கு ஆபத்தானவர்கள், ஜனநாயக ஆட்சிக்கு இடையூறு விளைவிப்பவர்கள், இவர்கள் அனைவரும் இருக்கவேண்டிய இடம் சிறைச்சாலை. குற்றம் செய்துவிட்டு சுதந்திரமாக நடமாட எந்தவொரு ரவுடிக் கும்பலையும் அனுமதிக்கக் கூடாது. ரவுடிக் கும்பலுக்கு உணவுகள், அடைக்கலம் கொடுப்பவர்கள் அனைவரும் கைது செய்யப்பட வேண்டும். நீதிமன்றுக்கு சவால்விடும் எந்த ரவுடி மகனும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இருக்க அனுமதிக்க முடியாது. நீதித்துறையுடன் மோதுகின்ற எந்த ரவுடிக் கும்பலுக்கும் மன்னிப்பு கிடையாது.

நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்குத் தலைவணங்காது சட்டத்தைக் கையிலெடுக்கும் இத்தகைய ரவுடிக் கும்பல்கள் ஒரு நிமிடம் கூட சுதந்திரக் காற்றை சுவாசிக்க அனுமதிக்கக் கூடாது. எனவே அனைத்து ரவுடிக் கும்பல்களையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜராக்குமாறு வட பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் மா அதிபருக்கு மன்று உத்தரவு பிறப்பிக்கின்றது. சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட குற்றவியல் வழக்குக ளில் கைது நடவடிக்கைகளில் ஈடுபடுப வர்கள் மிகவும் பலவீனமானவர்களாக உள்ளார்கள். அவர்களிடம் திறமை காணப்படவில்லை. திறமையற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலர் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுவதாக மன்று கருத்துகின்றது. எனவே அவர்களுக்கு எதிராக உடனடி நடவடிக்கைகள் எடுத்து சுன்னாகம் பொலிஸ் பகுதி உடனடியாக சீரமைக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

திறமையற்ற உத்தியோகத்தர்களை பொலிஸ் மா அதிபரின் அனுசரணையுடன் வேறு இடங்களுக்கு மாற்றி திறமையான பொலிஸ் அதிகாரிகளை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் நியமிக்கும் படியும் குறிக்கப்பட்ட சிரேஷ்ட பொலிஸ் மா அதிபருக்கு மன்று பணிப்புரை பிறப்பிக்கின்றது என அவர் தெரிவித்தார். (செ-9)

# மீண்டும் மகிந்த விகாரைகளுக்கு பயணம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பௌத்த விகாரைகளுக்கான தனது சுற்றுப் பயணத்தை மீண்டும் தொடங்கியுள்ளார்.

இதன் ஒரு கட்டமாக நேற்றுமுன்தினம் கதிர்காமம் பிரதேசத்தின் பிரதான பௌத்த விகாரைகளுக்கு விஜயம் செய்த மகிந்த ராஜபக்ஷ, அங்கு வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

அதற்கு முன்னதாக கதிர்காமம் கிரிவெஹரை, அபினவாராம போன்ற விகாரைகளுக்கும் விஜயங்களை மேற்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த. அங்கும் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்தார்.

அத்துடன் குறித்த விகாரைகளின் பிரதம பிக்குமாரை சந்தித்து கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டிருந்தார்.

அத்துடன் கதிர்காம தேவாலயம் உள்ளிட்ட பல தேவாலயங்களுக்கும் சென்றிருந்த மகிந்த ராஜபக்ஷ, இடைநிறுத்தியிருந்த பௌத்த விகாரைகளுக்கான தனது சுற்றுப்பயணத்தை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக தெரியவருகிறது. (செ-11)

# ஆசிரிய தம்பதிகள் மீது இளைஞர் குழு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் மோசமான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட தம்பதிகள படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியினைச் சேர்ந்த யாழ்.நகரில் உள்ள பாடசாலையில் கடமையாற்றும் ஆசிரியர்களான மாதவமணிவண்ணன் (வயது 44), மாதவமணிவண்ணன தர்சனி (வயது 41) என்னும் தம்பதிகளே மேற்படி தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களாவர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவது, நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு குறித்த தம்பதிகள் சென்றுள்ளனர்.

இதன்போது அப்பகுதியில் நின்று கொண்டிருந்த இளைஞர்கள் சிலர் இவர்களைப் பார்த்து தகாத வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகித்து சேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.


இதனால் ஆத்திரடைந்த தம்பதிகள் இளைஞர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர். வாக்குவாதம் முற்றியதால் தம்பதிகள் இருவரையும் இளைஞர் குழு மிக மோசமாகத் தாக்கி விட்டுதப்பிச் சென்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதும், சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்ததுடன், காயப்பட்ட இருவரையும் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இதன் பின்னர் அப்பகுதியில் பொலிஸார் தேடுதல் நடத்தியபோதும் தாக்குதல் நடத்தியவர்களை கண்டு பிடிக்க முடியவில்லை. குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-4)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## கவலை ஒழித்தல்



தவறான கணிப்பால் ஏற்படுகின்ற ஒரு மன நோய் தான் கவலை. நிகழ்ச்சிகளுடனோ அல்லது பொருள்களுடனோ எந்தத் தொடர்பும் இல்லாமல் மனதுடன் தொடர்பு கொண்டுள்ளது கவலை. மனம் பிரச்சினைகளை அறிந்து கொள்ள முடியாமல் போனால், பிரச்சினைகளை முடிக்க முடியவில்லை எனில், அந்தப் பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியாவிட்டால் கவலையின் பிடியில் சிக்கிக் கொள்கின்றது. தேவைக்கும், இருப்புக்கும் இடையே இடைவெளி, எதிர்ப்பார்ப்புக்கும் பெறுவதற்கும் இடையே இடைவெளி, தனக்கும் பிறர்க்கும் இடையே ஏற்படும் முரண்பாடு, ஆசைக்கும் திறமைக்கும் இடையே உள்ள வித்தியாசம். இவை யாவும் கவலைக்கு வித்தாகின்றன. மனதைக் கடமையில் செலுத்தி இடையறாத முயற்சியுடன், முறையான திட்டத்துடன் செயல்பட்டால் இவை அனைத்தையும் சரி செய்ய முடியும்.

ஏதாவது ஒரு நேரத்தில் ஏதாவது பிரச்சினைகள் ஒவ்வொருவருக்கும் தோன்றும். அவை வந்து கொண்டும் போய்க் கொண்டும் தான் இருக்கும். பிரச்சினைகளைக் கண்டு பயந்துவிடக் கூடாது. வாழ்க்கையின் ஒரு பகுதி தான் பிரச்சினை. கடந்த காலத்தில் உங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள், அவை எவ்வாறு தீர்த்து வைக்கப்பட்டன என்பதை எண்ணிப் பாருங்கள். அதே போன்று தற்பொழுது தோன்றியுள்ள பிரச்சினையும் காலத்தில் அவ்வாறே தீர்க்கப்பட்டு விடும்.

பிரச்சினையைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டுவிட்டுத் தைரியமாக அவற்றைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். பிரச்சனைக்குத் தீர்வு உடனே கிடைக்காவிட்டால் இயற்கைக்கு விட்டுவிடுங்கள். சிறிது காலம் பொறுத்திருங்கள். சரியான நேரத்தில் சரியான தீர்வு தானாகவே கிடைத்து விடும். இங்கு இயற்கைச் சட்டத்தை நீங்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும். ஆரம்பத்தில் தான் எந்த ஒரு பிரச்சினையும் பெரியதாகத் தோன்றும். அதற்குத் தீர்வு அதனுள் இருக்கிறது. அது தவறாமல் கிடைத்து விடும். இதற்கென நாம் ஓர் வழிமுறையை ஏற்படுத்திக் கொண்டு சரியாக அதைக் கடைபிடித்து வந்தால் அனைத்து பிரச்சினைகளுக்கும் எளிதில் தீர்வு பெற்று விடலாம். அதனால், மனதின் சுமையும் நீங்கிவிடும்.

# மாகாண மட்ட குத்துச் சண்டை; யாழ்ப்பாண மாவட்டம் முதலிடம்





9 ஆவது மாகாண விளையாட்டு விழாவின் குத்துச்சண்டை போட்டி கடந்த சனிக்கிழமை 19.09.2015 கிளிநொச்சி அறிவியல்நகர் குத்துச்சண்டை உள்ளக விளையாட்டுமைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டிக்கு நடுவர்களாக இலங்கை குத்துச்சண்டை சங்க நடுவர்கள் நடுநிலை வகித்தார்கள். இப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட அணி 18 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தினையும் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட அணிகள் 13 புள்ளிகளை பெற்று இரண்டாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன.

பதக்கம் பெற்றுக்கொண்டோர் விபரம்

49-52Kgபரிசு 1ஆம் இடம் R.ஜட்சன் யாழ்ப்பாணம்,52-56 Kgபரிசு 1ஆம் இடம்A.அன்றுட் கிளிநொச்சி,56-60 Kgபரிசு 1ஆம் இடம் J.சுதர்சன் முல்லைத்தீவு, 2 ஆம் இடம் S.சிறிஜெனனன் முல்லைத்தீவு,60-64Kgபரிசு 1ஆம் இடம் S.சிறிகரன் யாழ்ப்பாணம், 2ஆம் இடம்M.தர்மராசா யாழ்ப்பாணம், 64-69Kgபரிசு 1ஆம் இடம் V.நீக்லஸ் கிளிநொச்சி, 2 ஆம் இடம் K.சுரேஸ்குமார் யாழ்ப்பாணம், 69-74Kgபரிசு 1ஆம் இடம் R.ரமேஸ் யாழ்ப்பாணம், 2ஆம் இடம் J.ஜென்சன் முல்லைத்தீவு, 74-81Kgபரிசு 1ஆம் இடம் F. தர்சிகன் முல்லைத்தீவு, 2ஆம் இடம் S. சுகிர்தன் கிளிநொச்சி. (கு)

# மாவட்ட ரீதியிலான உதைபந்து; கரவெட்டி பி.இ.வி.கழகம் வெற்றி



யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தப்பட்ட பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டியின் இறுதி போட்டி ஸ்கந்தரோயக் கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இப்போட்டியில் கரவெட்டி பிரதேச இளைஞர் வி.கழக அணியை எதிர்த்து யாழ் பிரதேச இளைஞர் வி.கழக மோதிக்கொண்டது. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் கோல் போடுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இறுதியில் வெற்றி தோல்வியினை தீர்மானிக்கும் சம தவிர்ப்பு உதை மூலம் கரவெட்டி பிரதேச இ.வி. கழக அணி 5:4 என்ற அடிப்படையில் யாழ் பிரதேச இ.வி. கழகஅணியினை வெற்றி கொண்டு தேசிய ரீதியில் பங்கு கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# சென்.லூட்ஸ்சை வீழ்த்தியது பாசையூர் சென். அன்ரனிஸ்

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட் டங்கள், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து இளவாலை சென்.லூட்ஸ் அணி மோதிக்கொண்டது.

இதில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (க)

## நியூஸ்ரார் வெற்றி

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும் அராலி ஏ.எல். இளைஞர் கழகமும் இணைந்து சங்கானை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள், குறித்த கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி அணியை எதிர்த்து துணவி நியூஸ்ரார் அணி மோதிக்கொண்டது.

இதில் இரண்டு அணியினரும் ஆட்டநேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

சமனிலைத் தகர்ப்பு உதைகளில் நியூஸ்ரார் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

## கழுகுகள் வி.கழக அரையிறுதி இன்று


நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட தொடரின் அரையிறுதிப்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் மன்னார் கில்லரி அணியினை எதிர்த்து வல்வெட்டித்துறை ஆதிசக்தி அணி மோதவுள்ளது.

முன்னர் இடம் பெற்றும் காட்சிப் போட்டியில் கிளிநொச்சி உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வதிரி டயமன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இறுதிப்போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (கு)

# கணேசபுரம் கண்ணகி வி.கழக உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி





கணேசபுரம் கண்ணகி விளையாட்டுக் கழகத்தின் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இறுதிப்போட்டியில் காரையாக்கன் நீத காந்திவிளையாட்டுக் கழகமும் மருங்கைநகர் நாகா விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நடைபெற்றது.

## காந்தி வி.கழகம் முதலிடம்

இப்போட்டியில் 3:0 என்ற கோல் அடிப்படையில் நாகர் விளையாட்டுக்கழகத்தைத் தோற்கடித்து கரையாக்கன் நீத காந்திவிளையாட்டுக் கழகம் முதலிடத்தையும் நாகர் விளையாட்டுக்கழகம் இரண்டாவது இடத்தையும் கண்ணகி விளையாட்டுக்கழகம் மூன்றாவது இடத்தையும் பெற்றது. இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சிறிநேசனும் விசேட விருந்தினராக போரதீவுப் பிரதேச சபை செயலாளரும் கலந்து கொண்டனர். (கு)

# பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை கலப்பு நீதிமன்றம் பெற்றுத்தராது!

## சிரேஷ்ட சட்டத்தரணி புவிதரன் கருத்து

*(யாழ்ப்பாணம்)*

***இலங்கையின் போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்ற எண்ணம் தற்போதைய அரசிடமும் இல்லாத காரணத்தால் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையம் பரிந்துரை செய்துள்ள கலப்பு நீதிமன்ற பொறிமுறை பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு முழுமையான நீதியை பெற்றுத்தராது என சிரேஷ்ட சட்டத்தரணி வி.புவிதரன் தெரிவித்துள்ளார்.***

கலப்பு பொறிமுறையில் குற்றம் இழைத்த தரப்பினரும் உள்வாங்கப்படும் போதும் அத்தரப்பு முதன்மைப்படுத்தப்படுகின்ற போதும் கலப்பு பொறிமுறையின் விசாரணைகள் பக்கச்சார்பு கொண்டதாகவே அமையும். இதையே வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவின் ஐ.நா உரை காட்டி நிற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் அலுவலகத்தினால் நடத்தப்பட்ட இலங்கை மீதான விசாரணை அறிக்கை ஒரு பார்வை எனும் கலந்துரையாடல் யாழ்.விஞ்ஞான சங்கத்தினதும் தமிழ் சிவில சமூக அமையத்தினதும் ஏற்பாட்டில் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று பிற்பகல் மூன்று மணியளவில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்துரை வழங்கும் போதே சட்டத்தரணி வி.புவிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா ஆணையாளர் இலங்கை மீது பரிந்துரை செய்துள்ள கலப்பு பொறிமுறை இலங்கை அரசின் கட்டுப்பாட்டின் கீழ் தான் கொண்டுவரப்பட முடியும். இக்கலப்பு பொறிமுறைக்கு சர்வதேசம் தலைமை வகிப்பதற்கு இலங்கை அரசும் அதன் சட்டங்களும் விட்டுக்கொடுக்க போவதில்லை.

கலப்பு பொறிமுறையில் சில நீதிபதிகள், வழக்காளிகள் சர்வதேச தரப்பிலிருந்து உள்வாங்கப்படலாம். ஆனால் அவர்களால் தலைமை வகிக்கமுடியாத நிலையே காணப்படும். இலங்கையின் நீதி நிர்வாகம் நம்பகத்தன்மையற்றது என ஐ.நா அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், ஐ.நாவினால் நிராகரிக்கப்பட்ட நீதித் துறையினை கலப்பு பொறிமுறைக்குள் எவ்வாறு உள்வாங்கப்பட முடியும்?

கலப்பு விசாரணையில் இடம்பெறப் போகும் இலங்கை அரசின் விசாரணையாளர்கள் தான் பாதிக்கப்பட்ட மக்களை அடக்கியவர்கள், ஒடுக்கியவர்கள் இவர்களால் எவ்வாறு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்க முடியும்? நடைமுறையில் இந்த கட்டமைப்புக்களில் மாற்றம் ஏற்படாமல் இதனை எவ்வாறு மக்கள் நம்ப முடியும்?

இலங்கையில் இனப்படுகொலை நடைபெறவில்லை என இங்கிருந்து ஐ.நா சென்றவர்கள் பத்திரிகையாளர்கள் மத்தியில் கூறுகின்றனர். தனது சட்ட அறிவினால் அதனை கண்டு பிடித்ததாகவும் கூறுகின்றனர். நாம் இவர்களை சட்டத்தரணிகளாக அங்கு அனுப்பவில்லை பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாகவே அனுப்பியிருந்தோம். ஆனால் அவர்கள் எமது பிரச்சினைகளை நிலைப்பாடுகளை அங்கு கூறாமல் தமது சட்ட புலமையினை அங்கு காட்டுகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். எங்களுக்கு நடைபெற்றது இனப்படுகொலைதான் என கூறுவதில் எமக்கு எந்த தயக்கமும் இருக்க கூடாது. ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் கூட தாம் இதுவரை நடத்திய விசாரணைகளில் இனப்படுகொலை நடந்தமைக்கான ஆதாரத்தை திரட்ட முடியவில்லை. இனி வரும் விசாரணைகளில் இனப்படு கொலை நடைபெற்றிருக்ககூடிய ஆதாரங்கள் கிடைத்தால் மேற்கொண்டு யோசிப்பேம். என கூறியுள்ளார்.

ஆனால் எங்களுடையவர்கள் இனப்படு கொலை நடக்கவில்லை என திடமாக கூறுகின்றனர். பாதிக்கப்பட்ட நாம் எமக்கு இழக்கப்பட்ட அநீதிகளை சர்வதேசத்திடம் கூறுவோம். அது எந்தவகை சார்ந்தது என அவர்களே தீர்மானிக்கட்டும். அதனை அவர்கள் நிராகரித்தால் வேறு வழி பற்றி யோசிப்போம். பிறிதொரு நேரத்தில் நீங்கள் (தமிழர்கள்) இனப்படுகொலை பற்றி கூறவில்லையே என சர்வதேசம் கூறிவிடக் கூடாது.

குற்றம் இழைத்த இலங்கை அரசாங்கமே தன்மீது இவ்வாறுதான் விசாரிக்கப்பட வேண்டும் என சர்வதேசத்திடம் கோரும் போது, பாதிக்கப்பட்ட நாங்கள் எங்களுக்கு இது தான் வேண்டும் என ஏன் கோர முடியாது? இந்த உலகில் நடைபெற்ற அழிவுகள், அட்டூழியங்களை வைத்தே குற்றங்கள் வகைப்படுத்தப்பட்டு சட்டங்கள் உருவாக்கப்பட்டன. இலங்கையிலும் இது போன்ற சர்வதேச குற்றங்களே இடம்பெற்றன. அதனை எம்மாலும் எந்த சட்டதரணியாலும் வகைப்படுத்த முடியாது என தெரிவித்த சிரேஷ்ட சட்டத்தரணி புவிதரன்,

மனிதவுரிமை ஆணையாளரின் இறுதி அறிக்கை வெளிவரவுள்ள நிலையில் எமது மக்களின் எதிர்ப்பினால் அவ்வறிக்கையில் எமக்கு சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இதனை எமது மக்கள் உடனடியாக சர்வதேசம் வரை அதிர்வினை ஏற்படுத்தும் போராட்டங்களாக முன்னெடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இச்சந்திப்பில் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கான தமிழர் செயற்பாட்டு குழு, யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், விஞ்ஞான சங்கம், தமிழ் சிவில் சமூகம், மாணவர் ஒன்றியம் உட்பட பல அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர். (ந-4)

## அமெரிக்க பிரேரணைக்கு

# இந்தியா, சீனாவின் ஆதரவை இலங்கை அரசு பெற முயற்சி

ஐ.நா.மனித உரிமை பேரவையில் எதிர் வரும் 24ஆம் திகதி இலங்கை தொடர்பில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்படவுள்ள பிரேரணைக்கு ஆதரவு திரட்டும் பணிகளில் அரசாங்கம் மும்முரமாக செயற்பட்டு வருகின்றது. குறித்த பிரேரணைக்கு ஆதரவு பெறும் வகையில் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுடன அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது என்று அரச தொழில் முயற்சிகள் பிரதி அமைச்சர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

சர்வதேச தரத்துடன் கூடிய உள்ளக விசாரணை பொறிமுறையை முன்னெடுப்பதற்கான பேச்சுவார்த்தைக்கான கதவு தற்போது திறக்கப்பட்டுள்ளது. மேலும் அமெரிக்க பிரேரணைக்கு பல நாடுகளின் ஆதரவு கிடைப்பது உறுதியாகியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐ.நாவின் மனித உரிமை பேரவையில் எதிர்வரும் 24 ஆம் திகதி அமெரிக்காவினால்முன்வைக்கப்படவுள்ள பிரேரணை தொடர்பில் வினவிய போதே பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அங்கு அவர் மேலும கருத்து தெரிவிக்கையில்,

விடுதலை புலிகளுடனான போரின் இறுதி கட்டத்தின் போது பாரியளவிலான மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றுள்ளதாகவும் இது குறித்து விசாரணை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் சர்வதேசத்தின் பங்களிப்புடனான கலப்பு நீதிமன்றத்தை கட்டமைத்து அதனூடாக உண்மைகளை கண்டறிய வேண்டும் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் சயிட் ஹுசைன் வெளியிட்ட அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

மேற்படி சர்வதேச நீதிபதிகளுடனேயே குறித்த கலப்பு நீதிமன்றம் நிறுவப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் உள்ளக பொறிமுறையினூடாக மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். இலங்கை என்பது சுயநிர்ணயமிக்க நாடாகும். அதனை கொண்டு எமது வேலைத்திட்டங்களை நாம் செயற்படுத்த வேண்டும்.

ஆகவே அரசாங்கம் என்ற வகையில் எமது வேலைத்திட்டத்தை நாம் சர்வதேசத்துக்கு முன்வைக்க வேண்டும். தற்போது இது தொடர்பிலான பேச்சுவார்த்தையை முன்னெடுத்து நாட்டுக்கு உகந்த தீர்மானத்தை எடுக்கும் நேரமாகும். இந்த தருணம் சர்வதேச நாடுகளுடனும் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடும் நேரமாகும். உள்ளக பொறிமுறையை எவ்வாறு கட்டமைப்பது என்பது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியுள்ளது.

ஆகவே அரசாங்கம் என்ற வகையில் உள்ளக பொறிமுறையை எவ்வாறு கட்டமைப்பது என்பது தொடர்பில் பேசுவதற்கு கதவுகள் திறக்கப்பட்டுள்ளது. சர்வதேச அச்சுறுத்தல்களிலிருந்து நாட்டை பாதுகாக்க வேண்டும். சுயநிர்ணயமிக்க நாட்டை பாதுகாப்பதனை கொண்டு தான் அனைத்து பிரச்சினைகளுக்கும் நிரந்தரமான தீர்வினை பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கமைய அனைத்து தரப்பினரும் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். முன்னைய ஆட்சியினர் விட்ட தவறுகளை புதிய அரசாங்கம் திருத்த வேண்டியுள்ளது. ஆகவே பேச்சு வார்த்தைக்கு வாருங்கள்.

மேலும் எதிர்வரும் 24ஆம் திகதி அமெரிக்காவினால் முன்வைக்கப்படவுள்ள இலங்கைக்கு ஆதரவான பிரேரணைக்கு ஆதரவு திரட்டும் வகையில் திறமைவாய்ந்த எமது வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர காத்திரமான பங்களிப்பினை செய்து வருகின்றார்.

அத்துடன் இந்த பிரேரணைக்கான சீனா, இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் ஆதரவினை திரட்டுவதில் அரசாங்கம் மும் முரமாக செயற்பட்டு வருகின்றது. உள்ளக விசாரணையை முன்னெடுப்பதாக இருந்த போதிலும் அதற்கு சர்வதேச தரத்தை கொண்ட பொறிமுறையொன்றை நிறுவுவதில் அரசாங்கம் தயாராக உள்ளது என்றார். (செ-11)

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி, வீட்டுக் கிருத்திய அழைப்பும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11 | 25 |
| 03 | 08 |
| 1919 | 2015 |

கடந்த 25.08.2015 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**திருமதி கதிர்காமர் பொன்னம்மா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 23.09.2015 புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 24.09.2015 வியாழன் முரசுமோட்டையிலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

(அ-2335)

பரந்தன் முல்லை வீதி,
செல்லையா கடைச் சந்தி,
முரசு மோட்டை.

குடும்பத்தினர்

### இல-140, கந்தபுராண வீதி, கந்தர்மடத்தில் வசிக்கும் விஜிதா ஓட்டோ சேவை உரிமையாளரை

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எனது பெயர் பிறேம்குமார். நான் யாழ்ப்பாணத்தில் இருந்து எனது சிநேகிதன் வீட்டுக்கு ஓட்டோவில் பயணம் செய்தேன். நான் பயணம் செய்த ஓட்டோ உரிமையாளாரிடம் நான் சில கதைகளை கேட்டுள்ளேன். அதுக்கு அவர் தன்னுடைய கஷ்டமெல்லாம் என்னிடம் கூறிக்கொண்டு வந்துள்ளார். தானும் ஒரு காலத்தில் நன்றாக வாழ்ந்ததாகவும் இப்ப இரண்டு வருடங்களாக கஷ்டத்தின் மத்தியிலே ஓட்டோ வைத்து அதில் கிடைக்கும் வருமானத்தை வைத்துத் தான் வாழ்கிறார் என்றும் என்னுடன் கதைத்துக் கொண்டு ஓட்டோவில் வந்துள்ளார். சற்றுநேரத்தில் எனது இறங்குமிடம் வந்ததும் நான் கொண்டுவந்த காசுப்பையை ஓட்டோவுக்குள் மறந்து போய் எனது வீட்டுக்கு இறங்கிபோய் விட்டேன். நான் தவறாக விட்ட பைக்குள் ரூபாய் பதினைந்து இலட்சத்தையும் (1500000/=) ஓட்டோ உரிமையாளர் என்னை இறக்கிய இடத்துக்கு என்னுடைய சிநேகிதன் வீட்டுக்கே வந்து என்னுடைய காசுப்பையை ஒப்படைத்தார். இப்படிப்பட்ட நல்ல மனிதனை பாராட்டியே வாழ்த்த வேண்டும் என்று இந்த நன்றியை தெரிவிக்கிறேன்.

பிறேம்
மூளாய். (1854)

# யானையின் காலில் மிதிபட்டு 10 மாத குழந்தை உயிரிழப்பு

(கொழும்பு)

யானையொன்றின் காலில் மிதிபட்டு பத்து மாதக்குழந்தை யொன்று பலியான சம்பவம் குருநாகல் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

கொக்கரல்ல பகுதியில் வசித்த பாலசந்திரன் ஆதித்யா எனும் குழந்தையே இவ்வாறு யானையின் காலில் மிதிபட்டு பரிதாபமாக உயிரிழந்துள்ளது. இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

யானைகளின் வயிற்றுப் பகுதியின் கீழ் மற்றும் அதன் தும்பிக்கையின் கீழ்ப்பகுதி வழியாக சுற்றி வந்தால் கண்திருஷ்டி மற்றும் தோஷங்களில் இருந்து நிவர்த்தி கிடைக்கும்என்பதுஇலங்கையின் ஒரு சில பகுதிகளில் வாழும் மக்களின் நம்பிக்கையாக உள்ளது.

இந்த நம்பிக்கையின் அடிப்படையில் பிரதேச விகாரையொன்றின் பெரஹரவுக்காக அழைத்து வரப்பட்டிருந்த யானையொன்றின் வயிற்றுப் பகுதியின் கீழாக குழந்தையை எடுத்துச் செல்ல முயன்ற போதே இந்த அசம்பாவிதம் நடைபெற்றுள்ளது.

குழந்தையை தூக்கிச்சென்ற உறவினர் கால்தடுக்கி விழுந்த நிலையில், குழந்தை ஆதித்யா யானையின் காலுக்குள் அகப்பட்டு மிதிபட்டு உயிரிழந்துள்ளது. குறித்த உறவினரும் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (செ-11)


CSE COLOMBO STOCK EXCHANGE **கருத்தரங்கு** (1854)

பங்குச்சந்தையில் எவ்வாறு முதலீடு செய்யலாம் என்பதை அறிந்து கொள்வதற்கு நாளை 23.09.2015 (புதன்கிழமை) மாலை 5 மணிக்கு பங்குப் பரிவர்த்தனை யாழ்.கிளை கேட்போர் கூடத்தில் நடைபெறும் கருத்தரங்கில் கலந்து கொள்ளுங்கள்.

மேலதிக தகவல்களுக்கு:0777822014/2221455

147-2/3,கே.கே.எஸ்.வீதி(சத்திரச்சந்தி),யாழ்ப்பாணம்.

**D.C.M**

**சுன்னாகம்**

**A/L 2016 , 2017** (C-2271)

**LOGIC**

**R.P. சர்மா**

**D.C.M**

**சுன்னாகம்**

**A/L 2016 க்கான** (C-2271)

**தொழில்நுட்பப் பிரிவின் வினாவிடை வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.**

**A/L 2016 புவியியல்**

(C-2271) **கருத்தரங்கு**

ஆசிரியர்

**P.S.V. தினேஸ்**

**24.09.2015 காலை (வியாழன்) 9.00 மணிக்கு**

**D.C.M (யாழ்நகர்)**

Note - வெளி மாணவர்களும் பங்கு பெறலாம்.

CCTV Course With Network Cabling

Full Practical Training




Normal Course - 01 Month (10-12hr)

Fast Track - 3-4 Days(10-12hr)

Batch Commencing on Friday (25.09.2015)

(1852)

✓Office Management Course

✓Programming Course

✓Web Development Course

✓Computer Hardware Course

Call Now - 077 848 5483, 077 2487082

Micro System Development Centre

Alady Junction, Jaffna Road, Manipay.


## ஐ.நா அறி...

வின் தலைமையில் அவரது இல்லத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இது குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் இந்தக்குழு துறைசார் நிபுணர்களுடன் கலந்துரையாடி தமது பரிந்துரைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

இது தொடர்பில் இந்த வாரம் கூடி ஆராயவுள்ள இந்தக்குழு, 14 நாட்களுக்குள் தனது அறிக்கையை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய குழுவிடம் சமர்ப்பிக்கவுள்ளது.

இதனிடையே, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுவும் நேற்று கூடியிருந்தது. (செ-11)

## உள்ளக...

கப்பட்டுள்ளன.

இலங்கையின் புதிய அரசாங்கம் நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தியுள்ளதாகவும், சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்பின்றி மனித வுரிமை மீறல்கள் தொடர்பான விசாரணையை உள்ளகப் பொறிமுறை மூலம் தீர்க்க முடியும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மான வரைபை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அங்கத்துவ நாடுகளிடம் அமெரிக்கா கையளித்துள்ள நிலையிலேயே, இலங்கை அரசாங்கம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது. (செ-11)

## சிறுவர் துஷ்...

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் நடாஷா பாலேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம், சித்திரவதை மற்றும் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்பாமை தொடர்பில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்தவருடம் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் குறைவடைந்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் நடாஷா பாலேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## 2 வாரங்களில்...

இம்முறை 25 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களை பல்கலைக்கழகத்தில் இணைத்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, 65 ஆயிரம் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இம்முறை பல புதிய பாடத்திட்டங்கள் பல்கலைக்கழக கல்வித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார். (செ-11)

## கலப்பு நீதிமன்...

குற்றவியல் நீதிமன்றத்தின் கிளை ஒன்றை அமைப்பதற்கு ஐ.நா மனித வுரிமைகள் ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

கலப்பு நீதிமன்றத்தை அமைப்பது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, ஜெனிவாவில் ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கலப்பு நீதிமன்றத்தை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஏற்கெனவே இணங்கியுள்ளது என் பதையே இது வெளிப்படுத்துகிறது. இது ஒரு தீவிரமான விவகாரம்.

எனவே கலப்பு நீதிமன்றத்தை அமைக்கும் யோசனைக்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காக இன்று நாடாளுமன்றம் கூடும் போது, இந்த விவகாரம் குறித்து சிறப்பு விவாதம் நடத்தப்பட வேண்டும்என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

# வடக்கின் தேவைகளை ஆராய விசேட குழு யாழில் சந்திப்பு

## இன்றைய நிகழ்வில் சந்திரிகா இல்லை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் தேவைகளை கண்டறிவதற்காக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட விசேட குழு இன்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திலும் நாளை கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் கலந்துரையாடல்களை நடத்தும்.

இக் குழுவுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமை வகிக்கின்ற போதிலும் இன்றைய கூட்டத்தில் அவர் கலந்து கொள்ள மாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ந)

## வெலே சுதாவிடம்

# 84 சிறையதிகாரிகளின் தொலைபேசி இலக்கங்கள்!

(கொழும்பு)

ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டதாக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள வெலே சுதா என்ற சமந்த குமார விதானகே விடம் இருந்த தொலைபேசி இலக்கங்களில் சிறைச்சாலை அதிகாரிகளின் இலக்கங்களும் இருந்ததாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வெலே சுதாவிடம் தொலைபேசியில் இருந்த 184 தொலைபேசி இலக்கங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் 84 இலக்கங்கள் சிறைச்சாலை அதிகாரிகளுடையது என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளனர்.

பாரியளவில் ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்து பணம் சம்பாதித்த குற்றச்சாட்டில் வெலே சுதா கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவருடன் அரசியல்வாதிகள், நடிகைகள் மற்றும் முக்கிய நபர்களுக்கு தொடர்பிருந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன. (செ-11)

## கலப்பு நீதிமன்றத்துக்கு...

இலங்கைக்கு ஆதரவளிக்கும் அமெரிக்க தீர்மானம் தொடர்பில் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ள பிரதியிலுள்ள விடயங்கள் குறித்து அங்கத்துவ நாடுகளின் கருத்துக்களை கேட்டறியும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானது.

ஹைபிரிட் எனப்படும், கலப்பு நீதிமன்றம் என்ற சொற்பதம் மக்கள் மத்தியில் பல்வேறு கருத்துக்களை உருவாக்கியுள்ளதால் அது மாற்றமடைவதே சிறந்தது என இந்த உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடலில் பங்கேற்ற அமெரிக்க தூதுவர் கித் ஹாபர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகளை ஊக்குவித்தல் என்பவற்றை அமெரிக்காவின் தீர்மான வரைபு வலியுறுத்தும் எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை சார்பில் ஜெனிவாவிலுள்ள இலங்கையின் நிரந்தர பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க நேற்று கருத்துக்களை முன்வைத்திருந்தார்.

கடந்த 14 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆற்றிய உரையின் சுருக்கமாகவே அவரது கருத்துக்கள் அமைந்திருந்தன.

இதற்கமைய உண்மையை கண்டறியவும், நீதியை நிலைநிறுத்தவும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும், காணாமற்போனவர்கள் தொடர்பிலான சட்ட பாதுகாப்பை வழங்கவும், இழப்பீடுகளை வழங்கவும் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள செயற்பாடுகள் குறித்து இதன்போது தெளிவூட்டப்பட்டன.

இதற்காக அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள், இராஜதந்திர துறையைச் சார்ந்தவர்கள், சர்வதேச அமைப்புக்கள் மற்றும் சட்ட வல்லுநர்களின் ஒத்துழைப்பு பெறப்படவுள்ளதாகவும் ரவிநாத் ஆரியசிங்க கூறியுள்ளார். (செ-11)

## ஜேர்மன் அமை...

வெளிவிவகார அமைச்சரை நாட்டின் வெளிவிவகார அமைச்சில் வைத்து வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வரவேற்பார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவரது இவ்விஜயத்தின் போது ஜேர்மன் வெளிவிவகார அமைச்சர் நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.சம்பந்தன் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.

அத்துடன் கிளிநொச்சியில் நிறுவப்பட்டு வரும் இலங்கை - ஜேர்மன் பயிற்சி நிலையத்தினையும் அவர் பார்வையிடவுள்ளார். இலங்கை - ஜேர்மன் நாடுகள் இணைந்து மேற்கொள்ளும் பயிற்சி நிலையம் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

அடுத்த ஆண்டின் மே மாதத்தில் இவ் நிலையம் ஆரம்பிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (செ-11)

## மகிந்த ராஜ...

தமிழக முதல்வர் ஆட்சி நல்ல முறையில் உள்ளது. வரும் 2016-ல் மீண்டும் ஜெயலலிதாதான் முதல்வராக வருவார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லையென தெரிவித்த மதுரை ஆதீனம் இலங்கை பிரச்சினை குறித்து கருத்துரைக்கையில்,

பல்லாயிரம் தமிழர்களை கொன்று குவித்த இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, ஐக்கிய நாடுகள் சபை போர்க் குற்றவாளி என அறிவித்து, அவரை தூக்கில் போட வேண்டும்.

அப்போதுதான், உலக நாடுகளுக்கு அது ஒரு பாடமாக இருக்கும். பாதிக்கப்பட்ட மக்களின் மனக்காயங்களை அத்தகைய தீர்ப்பே ஆற்றுப்படுத்தக் கூடியது எனவும் தெரிவித்தார். (செ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.